# தீர்ப்புத்திரட்டு

**(சட்ட இதழ்)**

திருவள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி - ஐப்பசி

மலர் 39 செப்டம்பர்-அக்டோபர் - 2018 இதழ் 9 & 10

**திரு. வே. தங்கமாரியப்பன், எம்.ஏ., எம்.எல்.,**
தலைமைப் பதிப்பாசிரியர்
(முழு கூடுதல் பொறுப்பு)

**திரு. தி.து. சக்கரவர்த்தி, பி.எல்.,**
இணைப் பதிப்பாசிரியர்

**திருமதி ந. இராஜலட்சுமி, எம்.எல்.,**
**திரு. மு. அருணாச்சலம், எம்.ஏ., எம்.எல்.,**
உதவிப் பதிப்பாசிரியர்கள்

பதிப்புரிமை : உயர் நீதிமன்றம், சென்னை - 104
சுட்டும் முறை : தீ.தி. 2018

| பொருளடக்கம் | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. கட்டுரை | ... | 11 - 18 |
| 2. குறிப்புப் பட்டியல் | ... | i - xv |
| 3. உச்ச நீதிமன்றம் | ... | 325 - 398 |
| 4. உயர் நீதிமன்றம் | ... | 377 - 476 |
| 5. சட்டச் சொல்லகராதி | ... | i - iii |

> "தனிப்பட்ட நீதிபதிகளின் கூற்றின்படி, நீதியை குறித்த தனிப்பட்ட கருத்துக்கள், சட்டத்தினால் வழிநடத்தப்படாமல், சில நேரங்களில், அரசமரத்தடி பஞ்சாயத்துமுறை அல்லது இஸ்லாமிய நடுவர் பஞ்சாயத்துமுறை எனவும் அறியப்படும் அது, நமது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அகற்றப்பட வேண்டியதாகத் தோன்றுகிறது. இதனை வலியுறுத்தவேண்டுமென்பதற்காகவே, நீதிமுறையின் அனைத்து உயர்மட்ட நீதிபதிகளாலும் எடுக்கப்படவேண்டிய உறுதிமொழியானது, 'நீதி' என்று குறிப்பிடும் எதனையும் குறிப்பிடத்தக்கவகையில் தவிர்த்துவிடுகிறது. உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தின் ஒவ்வொரு நீதிபதியும், தன்னுடைய அலுவலகக் கடமைகளை, அச்சமோ அல்லது சாதகமோ இன்றி, அன்பிற்கோ அல்லது வெறுப்பிற்கோ இடந்தராமல் நிறைவேற்றுவதற்கும் மற்றும் அரசியலமைப்பையும், சட்டங்களையும் உறுதியாகக் கடைப்பிடிக்கவும் உறுதிமொழி எடுக்கின்றனர்."

நீதி குறித்த தனிப்பட்ட கருத்துகளிலிருந்தும் மற்றும் நீதி நிர்வாகமுறையில் தனிப்பட்ட விருப்பச் சார்பிலிருந்தும் மாறவேண்டிய தேவையை விமர்சித்த, நீதியரசர் திரு. பிராங்கி பர்ட்டர் அவர்களின் புகழ்பெற்ற கருத்துரையாவது ('A Heritage for all who Love the Law,' 51 American Bar Association Journal, 330, 332 (1965)):

"நீதித்துறையின் கடமையை உயரியவகையில் நிறைவேற்றுவதற்காக, நாம் அனைவரும் பாதுகாவலர்களாகவுள்ள சட்டத்திற்கு ஒருவரின் தனிப்பட்ட நலன்களையும் மற்றும் ஒருவரின் தனிப்பட்ட கருத்துகளையும் கட்டுப்படுத்துவதேயாகும் - அந்தப் பொது நிலையிலான தண்டனை தீர்ப்புகள், ஒரு சமூகத்தை நாகரீக சமூகமாக்குமேயன்றி, தனிவிதிகளால் பாதிக்கப்பட்டவர்களாக்காது."

அலைந்து திரியும் வீரன் ஒருவன், துணிச்சலான தாக்குதலில் ஈடுபடுவதைப்போன்று, ஒரு நீதிபதியானவர், வழக்கில் நீதியைத் தேடுவதற்கு மாறாக, அரசியலமைப்பையும் அதன் சட்டங்களையும் உறுதியாகக் கடைப்பிடிப்பாரானால் நீதியானது பரிபாலிக்கப்படும் என்ற பொருண்மையில் நம்முடைய அரசியலமைப்பிற்கு அடித்தளமிட்ட முன்னோர் மிகவும் விழிப்புடனிருந்தனர்.

பின்னர், சட்டங்களை உறுதியாகப் பின்பற்றி வந்தாலுங்கூட, ஏன் நீதிபதிகளுக்கிடையில் பெருமளவிலான முரண்பாடுகள் உள்ளன என்பதே வினாவாகும். என்னுடைய கருத்தில், குற்றவாளி என்பது, சட்டவரைவின் பொது பாரம்பரியச் சட்டத்தின் மொழியேயாகும். அப்பொழுது 14 வயது நிரம்பியவரான கிங் 6-ஆம் எட்வர்ட், "தவறாகப் பயன்படுத்துதலைச் சீர்ப்படுத்துதல் குறித்த உரையாற்றுதல் (1551)"-இல் (On the Supremacy, with his Discourse on the Reformation of Abuses; and a Few Brief Notices of His Life, Education, and Death, ed. R. Potts (Combridge: Metcalfe, 1874)), இங்கிலாந்திலுள்ள பெரும்பான்மையான



இயற்றுச் சட்டம் "மிதமிஞ்சியதாகவும், சலிப்பூட்டுவதாகவும்" இருந்தது என முறையிட்டார். ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் கழித்து, சர் பிரான்சிஸ் பேகன் அவர்கள், "சட்டங்கள் வரைவில் பயன்படுத்திய வீண் வார்த்தைகளையும், மிகையான சொற்களையும் நான் அங்கீகரிக்கவில்லை" (Francis Bacon, Example of a Treatise on Universal Justice or the Fountains of Equity, by Aphorisms: one Title of it' (1623), in the Works of Francis Bacon, 14 vols. ed. J. Spedding, R.L. Ellis and D.D. Heath, (London : Longmans, 1861 - 79), V, 88-110 at 104) என அவர் அறிவித்தபொழுது கிங் 6-ஆம் எட்வர்ட் அவர்களின் கவலையை மீண்டும் எடுத்துரைத்தார். புதிதாக அமைக்கப்பட்ட விர்ஜீனிய சட்டமன்றமானது, தன்னுடைய சட்டங்களை வரையும் செயல்முறையில் இருந்தபொழுது, அமெரிக்காவை உருவாக்கியவர்களுள் முன்னோடியாக விளங்கியவர்களுள் ஒருவரான தாமஸ் ஜெபர்சன், ஆங்கில சட்டங்கள், அவற்றின் தேவைக்கு மேற்பட்ட சொற்களைப் பயன்படுத்துதலும், "அவற்றின் முடிவுறா ஒரு பொருட்பன்மொழியும், அவற்றின் வழக்கிற்குள் வழக்கின் உட்கருள்வும், அடைப்புக்குறிக்குள் அடைப்புக்குறியும், கூறப்பட்டவையாலும் மேற்கூறப்பட்டவையாலும், "அல்லது" என்பனவற்றாலும், "மற்றும்" என்பனவற்றாலும் ஐயமற பன்மடங்காக எடுக்கப்பட்ட அவற்றின் முயற்சிகளும்" (The Autobiography of Thomas Jefferson, 1743-1790, ed. P.L. Ford (Philadelphia : University of Pennsylvania Press, 2005), 70) ஆகியவற்றுக்காக இகழப்பட்டவையான அவற்றின் பாணியைப் பின்பற்றுவதிலிருந்து அவர்களை எச்சரித்தார்.

அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில், சட்டங்கள், பொதுமக்களாலும், படித்தவர்களாலும் நன்கு புரிந்துகொள்ளும்படியாக, எளிய உரைநடை வடிவில் இயற்றப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, கலிபோர்னியா சாட்சியச் சட்டத்தின் பிரிவு 12-ஆனது கீழ்க்காணுமாறு தெரிவிக்கிறது:

"12(அ) இச்சட்டமானது, 1967-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் முதல் நாளிலிருந்து நடைமுறைக்குவந்து, அன்றோ அல்லது அதன் பின்னரோ கொண்டுவரப்படும் செயல்முறை ஆணைகளையும், உட்பிரிவு (ஆ)-இல் வகைசெய்யப்பட்டுள்ளதைத் தவிர, அன்றையத் தேதியில் நிலுவையிலுள்ள மேல்நடைமுறை ஆணைகளையும் கட்டுப் படுத்துதல்வேண்டும்.

(ஆ) உட்பிரிவு (இ)-க்குட்பட்டு, 1967-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் தேதிக்குள் துவங்கிய விசாரணையானது, இச்சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படாது. இவ்வுட்பிரிவின் பொருட்டு,

(1) எப்பொழுது முதல் சாட்சியின் சத்தியவுரை அளிக்கப்படுகிறதோ அல்லது முதல் சான்றாவணம் சான்றாக ஏற்கப்படுகிறதோ, அப்பொழுது, விசாரணை துவக்கப்பட்டு, எப்பிரச்சனைமீது அத்தகைய சான்றானது பெறப்படுகிறதோ, அது அப்பொருண்மையை விசாரிப்பவருக்கு சமர்ப்பிக்கப்படும் பொழுது, முடிவுறுத்தப்படுகிறது அல்லது ஒரு வேறுபட்ட பிரச்சனைமீது 1967-ஆம் ஆண்டு



ஜனவரி திங்கள் முதல் நாள் அன்றோ அல்லது அதன் பின்னரோ துவக்கப்படும் ஒரு புதிய விசாரணை அல்லது தனிப்பட்ட விசாரணையானது, இச்சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படுதல்வேண்டும்.

(2) 1967-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் தேதிக்கு முன்பு துவங்கிய விசாரணையில் வழங்கப்பட்ட தீர்ப்பிலிருந்து மேல்முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்படுமானால், மேல்முறையீட்டு நீதிமன்றம் விசாரணை துவக்கப்பட்ட நேரத்தில் பொருந்தத்தக்க சட்டத்தைப் பயன்படுத்தவேண்டும்.

(இ) முன்னுரிமைகள் தொடர்பாக, (பிரிவு 900-உடன் துவங்கும்) உட்பிரிவு 8-இன் வகையங்கள் 1966-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாளுக்கு பின்னர் கோரப்படும் ஏதொரு உரிமையையும் கட்டுப்படுத்தும்."

இவ்வகையத்திற்கு பொருள்விளக்கமளிக்க, எங்கே இடமிருக்கிறது? இதை, நம்முடைய சட்டங்களுடன் குறிப்பாக உள்ள சட்டங்களை நீக்குவதும், புதியதொரு சட்டத்தை இயற்றுவதுமான சட்டங்களின் மொழியுடன் ஒப்பிட்டால் அவற்றின் பெரும்பான்மையானவை, அகராதி அல்லது பொதுவகைமுறைகள் சட்டத்தின் உதவியின்றி ஆழ்ந்தறியப்படமுடியாது.

உண்மையில், இங்கிலாந்து தத்துவஞானியும், சட்டவியலருமான சர் ஜெரிமி பெந்தம் அவர்கள், தம்முடைய புகழ்வாய்ந்த நூலான "ட்ரூத் -எதிர்- அஷ்உறர்ஸ்ட்-இல், அதாவது அதிலுள்ளவாறாக, சட்டமானது, எப்படியிருக்கவேண்டும் எனக்

கூறப்படுகிறதோ, அதனுடன் பிரெஞ்சு சட்ட உரைகளின் எளிமையும், தெளிவையும் ஒப்பிட்டு, (The Works of Jeremy Bentham, published under the superintendence of his executor, John Bowring, vol. V (Edinburgh, Tait; London, Simpkin, Marshall; 1843), pages 231-237 (1972))" அவர் அவற்றை அங்கீகரிக்கும்வகையில் குறிப்பிட்டபொழுது, அவை, அவரின் கவனத்தை மிகவும் கவர்ந்தன. பெந்தம் கூறியதாவது, ஆங்கிலேய இயற்றுச் சட்டங்களுள் பெரும்பான்மையானவை, அரசு வழக்குரைஞரின் அலுவலகத்தில் வரையப்பட்ட ஆவணங்களை ஒத்திருக்கும் என்றும், நீண்டத் தன்மையுடைய, இவ்வரைவுகள், "தங்களுடைய கட்சிக்காரர்களிடம் பணம் பறிக்கும்பொருட்டு, மொழிநடையை விடமாக்கும் கலை", திறன்பெற்றிருக்கும் வழக்குரைஞருக்கு சான்றாகத் திகழ்கிறது. (மேற்சுட்டிய நூலில் உள்ளவாறு) இங்கிலாந்திலுள்ள சட்டங்களின் சலிப்பூட்டும் மொழிநடையைக் குறிப்பிட்டு, பெந்தம் அவர்கள் கருத்து தெரிவித்ததாவது:

> "இவ்விடயத்திற்கு மாறாகச் சொல்வதனால், இச்சட்டப் புத்தகங்கள், மனிதர்கள் பொதுவாக உரையாடலில் பயன்படுத்துவது போன்றும், பிரான்சில், தேவைக்கதிகமான வார்த்தைகளின்றி சட்டங்கள் எழுதப்படுவது போன்றும், குறுந்தொடர் வாக்கியங்களால் உருவாக்கப் படவேண்டும் மற்றும் அவ்வகையில் தற்பொழுதைய சட்டங்களில், ஒற்றை வாக்கியமானது, பதிமூன்று பக்கங்களை எடுத்துக்கொண்டு, குறிப்பிடத்தக்க பகுதியை நிரப்பிக்கொண்டிருப்பதும், எப்படியிருந்தாலும் அது முடிவுபெறாமலுமிருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். மேலும் பயனற்ற சொற்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதாலும், அவை பாதிக்கப்படுகின்றன, அவற்றை வரையும் வழக்குரைஞர்களுக்கு அவற்றுக்காக அதிக தொகை கொடுக்கப் படலாம்." (மேற்சுட்டிய நூலில் உள்ளவாறு)



மக்களாட்சியில், சட்டமானது, முற்றிலும் சட்டம் இயற்றுபவர்களின் விருப்பத்திற்குரியதாகும். நம்முடைய சட்ட வல்லுனர்கள், தங்களுடைய விருப்பத்தை, வட்டாரப் பேச்சு மொழியிலோ அல்லது ஆங்கிலத்திலோ, ஏதேனுமொன்றில் எளிய உரைநடை வடிவில் வெளிப்படுத்துவார்களானால் முரண்பட்ட நீதியத் தீர்ப்புகள் ஏதும் இருக்கமுடியாது, மேலும் நீதித்துறையின் மதிப்புமிக்க கால விரயமும் தடுக்கப்படும். நிச்சயம், அரசியலமைப்பின் ஆய்வுக்குட்பட்டு சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தை ஆய்வு செய்யும் நீதிமன்றத்தின் அதிகாரமானது, எப்பொழுதுமே நிலைபெற்றிருக்கும். சட்டங்கள், வட்டார மொழியில், உரைநடை வடிவில் இயற்றப்பட்டு, பின்னர் அவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படலாம். இது தற்போது வேறுவிதமாக உள்ளது. எப்படியானாலும், ஆங்கிலம் என்பது ஓர் அயல்மொழியே என்பதை நாம் உணரவேண்டும்.

சட்டவிதியின் அடிப்படை கோட்பாடுகளுள் ஒன்று யாதெனில், சட்டத்திற்கியைந்து நடக்கும்பொருட்டு, முதற்கண், சட்டம் என்றால் என்ன என்பது குறித்து, குடிமக்கள் அறியசெய்யப்படவேண்டும். இதனை, அமெரிக்கர்கள், பிரிட்டிஷ் அரசிற்கெதிராக கிளர்ச்சிசெய்து அமெரிக்காவை உருவாக்கியபொழுது உணர்ந்தனர்.

கூட்டாட்சி ஆவணங்கள் (Fedaralist papers) எண் 62 (1788)-இல் ஜேம்ஸ் மேடிசன் கருத்து தெரிவிப்பதாவது:

> "மனிதர்களால் இயற்றப்படும் சட்டங்கள், அவர்களுக்கு குறைந்தளவே பயனளிக்கும். சட்டங்கள், மிகப்பல்தொகுதியுடையனவாக படிக்கமுடியாத அளவிற்கு இருந்தாலோ அல்லது புரிந்துகொள்ளப்படமுடியாதவாறு மிகவும் தொடர்பற்றோ இருப்பின், அவை பறைசாற்றப்படும் முன்னரே நீக்கப்படு-மானால் அல்லது சீராக்கப்படுமானால் அல்லது அத்தகைய தொடர்மாற்றங்களுக்கு உட்படுமானால், இன்றைய சட்டம் என்ன என்பதை அறிந்திருக்கும் மனிதனுங்கூட, நாளைய சட்டம் என்னவாக இருக்கும் என்பதை ஊகிக்கமுடியாது." (Alexander Hamilton, James Madison and John Jay; The Federalist Papers Edited by Micheal A Genovese; Palgrave Macmillan, 2009, PP 159, 162).

சாதாரண மனிதனை சட்டத்துடன் பரிச்சய-மாக்குவதற்கு, வட்டார மொழியைப் பயன்படுத்தும் முக்கியத்துவமானது, இந்தியாவின் முதல் சட்ட ஆணையர்களால், நீதியரசர் ஆக்லாண்ட் அவர்களுக்கு எழுதப்பட்ட 14.10.1837-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தின்மூலம் அங்கீகரிக்கப்பட்டது. (Report on the Indian Penal Code (Kessinger Publishing)) அதிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பகுதி கீழ்க்காணுமாறு:



# தீர்ப்புத் திரட்டு

(தமிழக அரசின் இசைவுடன் சென்னை உயர் நீதிமன்றம் வெளியிடும் சட்ட இதழ்)

செப்டம்பர் - அக்டோபர் - 2018
மலர்-39 இதழ் 9 & 10
ஆவணி - ஐப்பசி 2049

## திரட்டப்பட்டுள்ள தீர்ப்புகள்

## இந்திய உச்ச நீதிமன்றம்

பக்கம்

1. ராம்ஜி சிங் படேல் -எதிர்- ஞான் சந்தர ஜெய்ஸ்வால் 325

தொல்லை, காற்று மாசு, முறையீடு

மாவரைக்கும் ஆலை இயக்குவதை தடைசெய்ய உறுத்துக்கட்டளை கோரும் உரிமை வழக்கு.

காற்று மாசு, மேல்முறையீட்டாளராகிய வழக்குரைஞரின் வீடு மற்றும் அறையைப் பாதித்தல்.

மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கருகில் மாவரைக்கும் ஆலை இயக்குவதைத் தடை செய்ய உரிமை வழக்கு தாக்கல் செய்யப்படுதல் - வழக்குமூலம் - உள்ளதா?

தொல்லை - உரிமை வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்குமூலம் யாதெனில், 2003-ம் ஆண்டில் டீசல் மின்னாக்கித் தொகுப்பை (Diesel Generator Set - டி.ஜி. தொகுப்பு) நிறுவியதேயாகும் - உரிமை வழக்கானது 2004-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டது மற்றும் அது உரிய காலத்திற்குட்பட்டது ஆகும்.

காலவரையறை குறித்த பிரச்சனை ஏதும் எழவில்லை - இவ்வுரிமை வழக்கானது காலவரையறைக்கு உட்பட்டதா அல்லது காலவரம்பு மீறப்பட்டுள்ளதா? என்பதை காண இந்நீதிமன்றம் அதிகாரம் கொண்டுள்ளது - சட்டம் மற்றும் பொருண்மை குறித்த கலவை வினா - இரண்டாம் மேல்முறையீட்டில் முதன்முறையாக உயர் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டிருக்கக் கூடாது.

தொழில் நடத்துவது, மேல்முறையீட்டாளர் மற்றும் அவருடைய குடும்பத்தின் உடல்நலத்திற்கு தீங்குதரக்கூடியது என ஐயத்திற்கிடமின்றி கண்டறியப் பட்டது - எதிர்மேல்முறையீட்டாளரின் மாவரைக்கும் ஆலையானது, இரைச்சலையும், காற்று மாசையும் ஏற்படுத்துகிறது, இதுவொரு தொடர் வழக்குமூலமாகும் - உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது.

**2. ஹெச்.வி. நிர்மலா மற்றும் ஒருவர் -எதிர்- ஆர். ஷர்மிளா மற்றும் ஒருவர் 339**

சாட்சியச் சட்டம் (1872), பிரிவு 68/உயில், இரு உயில்கள், சான்று, நிரூபணம் குறித்து.



இரண்டு உயில்கள் எழுதப்பட்டன - எதை நம்புவது.

தந்தையால், முதல் மனைவி மூலம் பிறந்த அவரது இளவர் மகள், இளவர் மகனுக்கு ஆதரவாக பதிவுசெய்யப்பட்ட உயில் நிறைவேற்றப்பட்டது - நிரூபிக்கப்பட்டதா? - தந்தையார், தன்னுடைய சொத்துகளை தன்னுடைய இளவர் குழந்தைகளுக்கு ஆதரவாக விருப்புறுதியளித்தார், அதில் இயற்கைக்கு மாறானது ஏதுமில்லை.

அசல் உயிலானது, வாதியின் (மகளின்) வசமில்லை, ஆனால் அது 1-ஆம் பிரதிவாதியின் (மகனின்) வசமிருந்தது - அவர்களுக்காதரவாக உயிலை நிறைவேற்றுவதில், இளவர் மகன் மற்றும் மகள் தீவிர பங்காற்றினர் என்ற வினாவுக்கிடமில்லை - சார்நிலைச் சான்று - சான்றிடப்பட்ட நகல் - அனுமதிக்கத்தக்கதா? - சார்நிலைச் சான்றை சமர்ப்பிப்பதன் மூலம், அதன் சட்டமுறைமை நிரூபிக்கப்படமுடியும் - பிந்தைய உயிலானது, முதல் உயில் நிறைவேற்றப்பட்டதை குறிப்பிடவில்லை - முந்தைய உயிலானது பதிவுசெய்யப்பட்ட உயிலாதலால், அது குறித்து குறிப்பிட்டிருக்கவேண்டும் - முந்தைய உயிலின் பின்னழிப்பு குறித்து பிந்தைய உயிலில் குறிப்பிடுவது அவசியமாகும் - முதல் உயிலானது நிரூபிக்கப்பட்டது.

**3. மனோஜ் குமார் -எதிர்- இமாச்சல பிரதேச மாநில அரசு 349**

தண்டனைச் சட்டம் (45/1860), பிரிவு 304, பகுதி II, 300, விதிவிலக்கு 4, 302 - சாட்சியச் சட்டம்

(1/1872), பிரிவு 3 - கொலை அல்லது கொலையாகாத மரணம் விளைவிக்கும் குற்றம் - சாட்சியத்தை மதிப்பீடு செய்தல் - குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் ஆயுதங்களுடன் வந்து இறந்தவரை தாக்கியதில் அவருக்கு மரணம் ஏற்பட்டது - தரப்பினர்களுக்கிடையே நிலம் தொடர்பான வாய்ச்சண்டையின் காரணமாக திடீரென தாக்குதல் - இறந்தவரை தாக்க முன்திட்டமிடப்படவில்லை - இறந்தவரின் உடலில், கூர்மையான ஆயுதத்தால் தாக்கியதன் காரணமாக உச்சந்தலையில் விளைவிக்கப்பட்ட காயமும், மேலும் வலது ஆட்காட்டி விரலில் காயமும் காணப்பட்டது - உட்கருத்தேதுமின்றி, இறந்தவருக்கு அநேகமாக மரணத்தை விளைவிக்கக்கூடும் என்று நன்கு தெரிந்துதான் உச்சந்தலையில் காயம் விளைவிக்கப்பட்டது - குற்றம், பிரிவு 304, பகுதி II-இன் வரம்பிற்குட்பட்டது - பிரிவு 302-இன் கீழ் குற்றத்திற்கான தீர்ப்பு, பிரிவு 304 பகுதி II-இன் கீழ் மாற்றப்பட்டது.

**4.** **சுதாகர் என்கிற சுதர்சன் -எதிர்- தமிழ்நாடு மாநில அரசு சார்பாளராக காவல்துறை ஆய்வாளர் ஸ்ரீரங்கம் காவல் நிலையம், திருச்சி, தமிழ்நாடு.** **379**

**இ.த.ச.,** பிரிவு 302, சாட்சிகள், வேறுபாடு குறித்து.

**குற்ற விசாரணை**/ சாட்சி, 'உறவுமுறையானது' 'அக்கறைகொண்டது'; வேறுபாடு.

வேற்றிட வாதம் - சாட்சிகள், தங்களுடைய முதல் விசாரணையில், அரசுத்தரப்பு வழக்கை மறுத்தல்.



அ.சா.1 மற்றும் 5-ஆவது சாட்சிகள், குற்றம் சாட்டப்பட்டவரான மேல்முறையீட்டாளருக்கு நெருங்கிய உறவினர்கள் - குற்றஞ்சாட்டப்பட்டவரான மேல்முறை-யீட்டாளருக்கும், அ.சா.1 மற்றும் 5-க்குமிடையிலான உறவானது, செயற்கைத்தனமானது, விளைவு குறித்து.

உறவுமுறையான மற்றும் அக்கறைகொண்ட சாட்சிகளின் சாட்சியம் - மதிப்பிடுதல், வரம்பு.

உறவுமுறையான சாட்சிக்கும், அக்கறைகொண்ட சாட்சிக்குமிடையிலான வேறுபாடு - உறவுமுறையான சாட்சி, "அக்கறைகொண்ட" சாட்சிக்கு இணையானவரல்லர் - சாட்சியானவர், ஆணோ அல்லது பெண்ணோ, ஓர் உரிமை வழக்கின் தீர்ப்பாணையிலோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படுவதைக் கண்டோ, ஏதோ சில ஆதாயமடைபவராக இருப்பின், அவர் "அக்கறைகொண்ட சாட்சியென அழைக்கப்படுவார் - அரசுத்தரப்பு வழக்கானது தனிப்பட்ட சாட்சிகளால் ஆதரிக்கப்படாததால், நியாயமான ஐயப்பாடு - அ.சா.1 மற்றும் 5-இன் மீதான நம்பகத்தன்மையில் நம்பிக்கையின்மை.

⌘❖⌘❖⌘

# மெட்ராஸ் உயர்நீதிமன்றம்

பக்கம்

1. எஸ். முருகேசன் -எதிர்- சந்தானலக்ஷ்மி 377

இந்து சட்டம் - மண உறவை முறித்தல் - கைவிடல் - இந்து திருமணச் சட்டம், பிரிவுகள் 13 மற்றும் 23 - மேல்முறையீட்டாளர்/கணவரும், எதிர்மேல் முறையீட்டாளர்/மனைவியும் இந்து சடங்குகள் மற்றும் பழக்க வழக்கங்களின்படி மணம் புரிந்துகொண்டனர் - மேல்முறையீட்டாளர், எதிர்மேல்முறையீட்டாளரின் கற்புநெறியை சந்தேகித்ததால், அவர் (மனைவி) மேல்முறையீட்டாளருடனான இல்வாழ்வைத் துறந்து விட்டார் - பிறர்மனை புணர்தல் அடிப்படையில் மண உறவை முறித்தலுக்காக மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது - குறிப்பிடப்பட்ட சில ஆண்டுகளுக்கு பின்னர், கைவிடல் என்ற காரணத்தின்பேரில் மண உறவை முறித்தலுக்காக மேல்முறையீட்டாளர், இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13(1)(i-பி)-இன் கீழ் மனு தாக்கல் செய்தார் - எதிர்மேல் முறையீட்டாளர், தன்னிச்சையாக இல்வாழ்வைத் துறந்துவிட்டார் என்பதை நிரூபிக்க, மேல்முறையீட்டாளர் தவறிவிட்டார் என்ற காண்முடிவின்பேரில், குடும்பநல நீதிமன்றமானது மனுவைத் தள்ளுபடி செய்தது, எனவே இம்மேல்முறையீடு - கைவிடல் என்பதன் அடிப்படையில் மண உறவு முறித்தல்கோரி மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்ததில் குடும்பநல நீதிமன்றம் நியாயப்படுத்தப்படுகிறதா? -

எதிர்மேல்முறையீட்டாளருடனான மணவாழ்வில் தொடர்ந்து ஈடுபட்டு வருகையிலேயே மேல்முறையீட்டாளர், இரண்டாம் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டதாக, எதிர்மேல்முறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டார் என முடிவு - குடும்பத்தலைவராக மேல்முறையீட்டாளரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள குடும்பஅட்டையில், குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் பெயர் குறிப்பிடப்பட்டு இருப்பதாக, எதிர்மேல்முறையீட்டாளர் சாட்சியம் அளித்துள்ளார் - குடும்ப அட்டையில், பணிப்பெண்ணின் பெயரை அச்சிடுவதற்கான வாய்ப்பே இல்லை என குடும்பநல நீதிமன்றம் திட்டவட்டமான காண்முடிவை வழங்கியது - இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 23-இல் குறிப்பிடப்பட்டுள்ளதுபோன்று, மேல்முறையீட்டாளர், தன்னுடைய தவறை சாதகமாக எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படமுடியாதென குடும்பநல நீதிமன்றம் சரியாகவே முடிவெடுத்துள்ளது - எதிர்மேல்முறை-யீட்டாளரின் கைவிடலானது, தன்னிச்சையானதென்பதை மேல்முறையீட்டாளர் நிரூபிப்பதற்குரியவராவார், அது ஏற்கத்தக்க சான்றுடன் நிரூபிக்கப்படவில்லை என்றுகுடும்பநல நீதிமன்றம் திட்டவட்டமான காண்முடிவு வழங்கியுள்ளது - குடும்பநல நீதிமன்றத்தின் உத்தரவு உறுதி செய்யப்படுகிறது - மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**2. டி. அஷோக் சுரானா மற்றும் ஒருவர் -எதிர்- சுரேஷ் சுரானா மற்றும் ஒருவர்** 393

சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 (4/1882), பிரிவு 44 - உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், 1908 (5/1908) - பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்கு - வாதி, வழக்குச் சொத்துக்களில் 1/4 பங்கைக் கோரினார் - தனியமர் நீதியரசர் பாகப்பிரிவினைக்கான முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கினார் - பகுதி பாகப்பிரிவினை என்னும் எதிர்வாதம் எழுப்பப்பட்டது - வரையறுக்கப்பட்ட சட்டம் யாதெனில், குடும்பச் சொத்தில் எதையேனும் விட்டுவிடுதல், பாகப்பிரிவினை வழக்கை பாதிக்கும் என்பதாகும் - விடுபட்ட சொத்தானது, கிடைக்கத்தக்கதென நிறுவப்படவேண்டும் - பாகப்பிரிவினை வழக்கின் வழக்குத் தரப்பினர்களுக்கு பொருந்தக்கூடியதல்ல - பிரதிவாதிகள் வழக்குரையைத் திருத்தி, வாதியால் விடப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்களின் அட்டவணையைச் சேர்த்தனர் - நியமிக்கப்பட்ட வழக்குரைஞர் ஆணையர், அத்தகைய பொருட்கள் ஏதுமில்லை என அறிந்தார் - முடிவு, பிரதிவாதிகளாலான வெற்று குற்றச்சாட்டுகள் - வாதியிடமோ அல்லது பிரதிவாதியிடமோ தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் இருந்ததை நிலைநாட்ட சான்றாதாரம் ஏதும் அறவே இல்லை - மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது - தனியமர் நீதியரசரின் உத்தரவானது உறுதிசெய்யப்பட்டது.



**3. பள்ளி கல்வி இயக்குனர், கல்லூரி சாலை, சென்னை மற்றும் பலர் -எதிர்- எல். ஆர். மீனா** 405

பணிச் சட்டம் - நியமனம் - கல்வித் தகுதி - அரசுப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியரின் நியமனம் - பணி நாடுபவர், உயர் கல்வி, பட்டயப் படிப்பு மற்றும் இளநிலை பட்டப் படிப்பு (10+3+2) என்ற முறையில் கல்வித் தகுதி பெற்றுள்ளார் - அரசாணையானது, பத்தாம்

வகுப்பு, மேல்நிலை பள்ளிக் கல்வி மற்றும் இளநிலை பட்டப் படிப்பு என்பதாக கல்வித் தகுதி முறையினை வகுத்துரைத்தது - மேல்நிலைப் பள்ளிக் கல்வித் தகுதியைப் பெறாதவருக்கு நியமனம் மறுக்கப்பட்டது - மாநில அரசால் வழங்கப்பட்ட செயலாணை, இரண்டு வருட மேல்நிலை பள்ளிப் படிப்புக்குப் பதிலாக, மூன்று வருட பட்டயப் படிப்பு நிறைவு செய்தலை அங்கீகரிக்கிறது - செயலாணை, எதிர்காலத்திற்கு பொருந்துமேயன்றி கடந்தகாலத்திற்கல்ல என்பது தேர்வு முகமையின் வாதமாகும் - முடிவு, அரசாணை, விதிக்கான திருத்தமல்ல மற்றும் அது இருந்துவரும் நிலைக்கான தெளிவாக்கமே - பணிநாடுவோரால் பெறப்பட்ட மூன்று வருட பட்டயப் படிப்பு செல்லத்தக்க பட்டயப் படிப்பாகும் என்று அரசு அங்கீகரித்தது - நீதிப்பேராணை மனுதாரருக்கு செயலாணையின் பலனை நீட்டிக்கின்ற தனியமர் நீதியரசரின் உத்தரவானது, எந்த வலிமைக்குறைவாலும் பாதிக்கப் படவில்லை - நீதிப்பேராணை மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

4. **என். தாமரைசெல்வி -எதிர்- முதன்மை செயலாளர், தமிழ்நாடு மாநில அரசுசார்பாக, உயர் கல்வித் துறை, சென்னை மற்றும் பலர்** 415

கல்வி - பி.எட். பட்டப்படிப்பில் சேருதல் - தகுதி - மேல்முறையீட்டாளர்/மனுதாரர், 10-ஆம் வகுப்பு முடித்து, அதன்பின் மூன்றாண்டு பட்டயப் படிப்பை முடித்தார், அதன்பின் மேல்முறையீட்டாளர் பி.ஏ., (ஆங்கிலம்) படிப்பை தொலைத்தூரக் கல்வி மூலமாக



படித்தார் - மேல்முறையீட்டாளர் பி.எட்., பட்டப்படிப்பைப் படிப்பதற்கு 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் கல்வி நிலையத்தில் சேர்ந்தார் - 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்/பல்கலைக்கழகமானது, குறிப்பிட்ட அரசாணையின் கீழ் கோரப்படுகின்றவாறு, அவர் 10+2+3 என்ற மாதிரியின்கீழ் முறைப்படியான கல்வியை முடிக்கவில்லை என்ற அடிப்படையில் பி.எட். படிப்பில் சேருவதற்கு அவருக்கு ஒப்புதலளிக்க மறுத்துவிட்டது - அவ்வாணையை எதிர்த்து மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது, எனவே இந்த மேல்முறையீடு - மேல்முறையீட்டாளர் பி.எட். பட்டப்படிப்பில் சேருவதற்கு தகுதியுடையவரா? - ஒரு குறிப்பிட்ட கல்வி ஆண்டிற்கான குறிப்பிட்ட படிப்பிற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக நிர்ணயிக்கப் படுகின்ற கல்வித்தகுதியை முன்னுற இயங்குமாறு செயல்முறைப்படுத்தப்பட இயலாது - மேல்முறையீட்டாளரின் கல்வித்தகுதியானது, அத்தகைய தகுதி நிர்ணய அளவுகோலின் தேவைக்குள் பொருந்துமா? என்பது குறித்து அறிவதற்கு, அச்செயற்களத்தை கட்டுப்படுத்துவதற்குரிய காலகட்டத்திலுள்ள அரசாணையை மட்டுமே ஆராயவேண்டும் - குறிப்பிட்ட அரசாணையின் கீழ் கோரப்பட்டவாறு, மேல்முறையீட்டாளர் பி.எட். பட்டப்படிப்பில் சேரும் நாள்வரை அத்தகைய கல்வித்தகுதியைப் பெறவில்லை - பின்னாளில், அதுவும் ஒரு பணிநிமித்தமாக குறிப்பிட்ட பட்டப்படிப்புக்கு அல்லது பட்டயப்படிப்புக்கு சமமாகக் கருதப்படும் கல்வித் தகுதியானது, ஒரு குறிப்பிட்ட கல்வி ஆண்டிற்கான படிப்பில் சேருவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிக்கு இணையானதாக

கருதப்படக்கூடாது - தனிநீதிபதியின் உத்தரவில் தலையிட, மேல்முறையீட்டாளர் வழக்கை மெய்ப்பிக்கவில்லை - மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

5. **எம்.ஓ.எச். அஸ்லாம் -எதிர்- எவர்கிரீன் டியூப் வெல் சர்வீசஸ் (பி) லிமிடெட் மற்றும் பலர்** 425

உரிமையியல் விசாரணைமுறை - சொத்துப் பேணுநரின் நியமனம் - கூட்டுப்பங்கு நிறுவனக் கலைப்பு - நிதியானது, ஒரு நிறுவனத்திடமிருந்து, 2-ஆம் எதிர்மனுதாரரான நிறுமத்திற்கு மாற்றிவிடப்பட்டது என்ற காரணத்தின்பேரில் கூட்டுப்பங்கு நிறுமத்தைக் கலைக்கவும், கணக்குகளை எடுத்துக்கொள்ளவும், மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டதெனினும், மேல்முறையீட்டில் இந்நீதிமன்றம் உரிமை வழக்கைத் தீர்ப்பாணையிட்டது - விசாரணை நீதிமன்றம், மனுதாரரின் விண்ணப்பத்தின் பேரில், கூட்டுப்பங்கு நிறுவனம், 1-ஆவது எதிர்மனுதாரரான நிறுமம் என்ற இரண்டிற்கும் சொத்துப்பேணும் தரப்பினராக மனுதாரரை நியமித்தது - 2-ஆவது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது - சொத்துப்பேணும் தரப்பினராக மனுதாரரை நியமிக்கும் உத்தரவுகளை நீக்கறவு செய்து, 1-ஆவது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது, ஆனால் மேல்முறையீட்டில் அவ்விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டதால்தான் இச்சீராய்வு - சொத்துப்பேணும் தரப்பினராக மனுதாரரின் நியமனத்தை எதிர்த்து, 1-ஆவது



எதிர்மனுதாரரின் அதிகாரப்பூர்வமான சார்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் நிலைக்கத்தக்கதா? - 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களின் ஆட்சேபணைகள் நிராகரிக்கப்பட்ட பின்னர், அதே காரணத்தின்பேரிலேயே, 1-ஆவது எதிர்மனுதாரர் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தார் - கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகள் முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திடமிருந்தது - 1-ஆவது எதிர்மனுதாரரான நிறுமத்தின் சார்பாளராயிருக்க அதிகாரப்பூர்வமான சார்பாளருக்கு விசாரணை நீதிமன்றம் அனுமதி அளிக்கவில்லை - அதிகாரப்பூர்வமான சார்பாளர் விண்ணப்பம் தாக்கல் செய்தபோது, தன்னை, நிறுமத்தின் சார்பாளராகயிருக்க அதிகாரமளிக்கின்றதாகச் சொல்லப்படும் தீர்மானத்தைத் தாக்கல் செய்யவில்லை - அதிகாரப்பூர்வ சார்பாளர், 1-ஆவது எதிர்மனுதாரரான நிறுமத்தின் சார்பாளராயிருக்க வழக்குரை உரிமை கொண்டிருக்கவில்லை - அவரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பமானது, நுட்ப காரணம், தகுதிப்பாடு ஆகிய இரண்டின்பேரிலும் நிலைக்கத் தக்கதல்ல - விசாரணை நீதிபதி, உறுதியானதும், செல்லத்தக்கதுமான காரணத்தைக் கூறி, விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தார் - மேல்முறையீட்டு நீதிபதி, உரியமுறையில் பொருண்மைகளை மதிப்பீடு செய்யாமல் குறிப்பாக ஒரே பரிகாரத்தின்மீது 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டினைத் தள்ளுபடி செய்து, பிழைபாடான காரணங்களின்பேரில் மேல்முறையீட்டை அனுமதித்தது - மேல்முறையீட்டு நீதிபதியின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப் படுகிறது - சீராய்வு அனுமதிக்கப்பட்டது.

6. **கே.எம். ஷாஜி குமார் மற்றும் பலர் -எதிர்- காவல்துறை ஆய்வாளர், கு.பு.து.கு.பி.-கடத்தல் தடுப்பு பிரிவு, எழும்பூர், சென்னை மற்றும் பலர்** 443

குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவுகள் 438, 320 மற்றும் 482.

இ.த.ச., பிரிவுகள் 370(4), (120) (பி) மற்றும் 384.

இளஞ்சிறார் நீதிமுறைச் சட்டம், (2015), பிரிவு 75, குற்றங்களின் இணக்கத்தீர்வு - தரப்பினர்களுக்கிடையில் சமரசம் - வரம்பு குறித்து - முதல் தகவலறிக்கையானது செல்லாததாக்கப்படமுடியுமா? - குழந்தையைத் தத்தெடுத்தல் - செல்லுந்தன்மை.

தொலைக்காட்சி நிகழ்ச்சி - சட்டப்பூர்வமான தத்தெடுத்தலின் புனிதத்தன்மையானது, குழந்தை கடத்தல் என்றதொரு தோற்றத்தை ஏற்படுத்தி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களால் களங்கப்படுத்தப்பட்டு விட்டது - மு.த.அ.-ஐ பதிவு செய்தல், குழந்தையின் பாதுகாப்புப் பொறுப்பை தத்தெடுத்த பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கு தங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லையென இயற்பெற்றோர் உறுதி செய்தல் - தொலைக்காட்சி நிகழ்ச்சியால் இழைக்கப்பட்ட தீங்கானது களையப்பட்டது - கு.வி.மு.ச., பிரிவு 320-இன் கீழ் பதியப்பட்ட குற்றங்கள் சமரசத்திற்குரியவையல்ல என்ற நேர்விலுங்கூட தரப்பினர்களுக்கிடையில் ஏற்படும் சமரசத்தைக் கருத்திற்கொண்டு, இணக்கத் தீர்வு காண்பதை பரிசீலிக்கமுடியும்.



ஜீ தமிழ் தொலைக்காட்சியில் "சொல்வதெல்லாம் உண்மை" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒளிபரப்ப அளிக்கப்பட்ட அனுமதியை, காவல்துறை தலைவரும், தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமும் மறுபரிசிலனை செய்து, அத்தகைய நிகழ்ச்சிகளை பிற்காலத்தில் ஒளிபரப்புவதற்காக அனுமதி வழங்குவதிலிருந்து தடைசெய்து, அவற்றை முறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

7. **கே.ஆர். கார்த்திகேயன் -எதிர்- வி. பிரதாப் குமார்** 467

மாற்றுமுறையாவணங்கள் சட்டம் (1881), பிரிவுகள் 138, 141

நிறுமத்தின் சார்பாக மனுதாரர் காசோலை வழங்கியுள்ளார் - மேற்படி நிறுமத்தை ஒரு எதிரியாக சேர்க்காத புகார் நிலைக்கத்தக்கதல்ல - நடவடிக்கைகள் செல்லாததாக்கப்பட்டன.

⌘❖⌘❖⌘

# இந்திய உச்ச நீதிமன்றம்

2018-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 11-ஆம் நாள்

**முன்னிலை**

**நீதியரசர் திரு. ஏ.கே. சிக்ரி**
**மற்றும்**
**நீதியரசர் திரு. அசோக் பூஷன்**

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் **1799-1800/2018**

(சிறப்பு அனுமதி மனு (உ) எண்கள் 30733-30734/2013)

(இரண்டாம் மேல்முறையீடு எண்கள் 622-623/2013-இல் அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் 29.05.2012-ஆம் தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து)

ராம்ஜி சிங் படேல் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

ஞான் சந்தர ஜெய்ஸ்வால் ... எதிர்மேல்முறையீட்டாளர்

தொல்லை, காற்று மாசு, முறையீடு

மாவரைக்கும் ஆலை இயக்குவதை தடைசெய்ய உறுத்துக்கட்டளை கோரும் உரிமை வழக்கு.

காற்று மாசு, மேல்முறையீட்டாளராகிய வழக்குரைஞரின் வீடு மற்றும் அறையைப் பாதித்தல்.

---

**2018-3-லா வீக்லி 400**

மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கருகில் மாவரைக்கும் ஆலை இயக்குவதைத் தடை செய்ய உரிமை வழக்கு தாக்கல் செய்யப்படுதல் - வழக்குமூலம் - உள்ளதா?

தொல்லை - உரிமை வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்குமூலம் யாதெனில், 2003-ம் ஆண்டில் டீசல் மின்னாக்கித் தொகுப்பை (Diesel Generator Set - டி.ஜி. தொகுப்பு) நிறுவியதேயாகும் - உரிமை வழக்கானது 2004-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டது மற்றும் அது உரிய காலத்திற்குட்பட்டது ஆகும். (பத்தி 13)

காலவரையறை குறித்த பிரச்சனை ஏதும் எழவில்லை - இவ்வுரிமை வழக்கானது காலவரையறைக்கு உட்பட்டதா அல்லது காலவரம்பு மீறப்பட்டுள்ளதா? என்பதை காண இந்நீதிமன்றம் அதிகாரம் கொண்டுள்ளது - சட்டம் மற்றும் பொருண்மை குறித்த கலவை வினா - இரண்டாம் மேல்முறையீட்டில் முதன்முறையாக உயர் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டிருக்கக் கூடாது. (பத்தி 12)

அத்தொழில் நடத்துவது, மேல்முறையீட்டாளர் மற்றும் அவருடைய குடும்பத்தின் உடல்நலத்திற்கு தீங்குதரக்கூடியது என ஐயத்திற்கிடமின்றி கண்டறியப் பட்டது - எதிர்மேல்முறையீட்டாளரின் மாவரைக்கும் ஆலையானது, இரைச்சலையும், காற்று மாசையும் ஏற்படுத்துகிறது, இதுவொரு தொடர் வழக்குமூலமாகும் - உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. (பத்தி 13)



**வழக்குரைஞர்கள்:**

திரு. அனுராக் துபே,
திருமதி/செல்வி அனு சாவ்னே,
திரு. ராஜேஷ் பாண்டே,
திரு. சஞ்சித் எம்.,
திரு. எஸ்.ஆர். சேதியா
... மேல்முறையீட்டாளருக்காக

திருமதி ரச்னா குப்தா,
திரு. அனில் குமார் சின்உறா,
திரு. சித்தாந்த் எஸ். மாலிக்
... எதிர்மேல்முறையீட்டாளருக்காக

## தீர்ப்புரை

**நீதியரசர் திரு. ஏ.கே. சிக்ரி:**

அனுமதி வழங்கப்பட்டது.

2. அலகாபாத் உயர் நீதிமன்றம், இரண்டாவது மேல்முறையீடு எண்கள் 622/2013 மற்றும் 623/2013-இல் எதிர்மேல்முறையீட்டாளரின் இந்த மேல்முறையீடுகளை அனுமதித்து, விசாரணை நீதிமன்றத்தால் மேல்முறை-யீட்டாளருக்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்டதும், மேலும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் உறுதிசெய்யப் பட்டதுமான தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்து, அந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 29.05.2013-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும்

தீர்ப்பாணை, மேல்முறையீட்டாளரால் இம்மேல் முறையீடுகளின்மூலம் எதிர்த்துரைக்கப்பட்டன. கால வரிசைமுறையான நிகழ்வுகள் கீழ்க்காணுமாறு:

3. எதிர்மேல்முறையீட்டாளர் மாவரைக்கும் ஆலை, எண்ணெய் ஆலை, எண்ணெய் செக்கு இயந்திரம் மற்றும் ஐஸ் தொழிற்சாலை போன்ற மின்சாரத்தால் இயங்கும் தொழில்களை தன்னுடைய குடியிருப்பு இடத்தில் நடத்திவந்தார். வழக்குரைஞரான மேல்முறையீட்டாளர், எதிர்மேல்முறையீட்டாளரின் வீட்டுடன் இணைந்த பொதுசுவரை கொண்டுள்ள வீட்டின் உரிமையாளரும், குடியிருப்பாளரும் ஆவார்.

4. மேல்முறையீட்டாளரின் கூற்றின்படி, 2003-ஆம் ஆண்டு முதல், எதிர்மேல்முறையீட்டாளர், டீசல் எஞ்சின் பொருத்தப்பட்ட இயந்திரங்களை கொண்டு இயங்குகின்ற மேற்கூறிய மாவரைக்கும் ஆலையை துவங்கினார், அது கடுமையான அதிர்வுகளையும், காற்று மாசையும் ஏற்படுத்தத் துவங்கியது. இயந்திரங்களால் ஏற்படுத்தப்பட்ட அதிர்வுகள், மேல்முறையீட்டாளரின் சுவற்றில் விரிசலை ஏற்படுத்தியது மற்றும் வெளியிடப் பட்ட மாசானது, மேல்முறையீட்டாளர் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவித்தன. மேல்முறையீட்டாளர் வழக்குரைஞராக இருப்பதால், அவருடைய வீட்டிலேயே வழக்குரைஞர் அலுவலகத்தை நடத்தி வருகிறார், ஆகவே கடுமையான அதிர்வுகளும், காற்று மாசும் அவருடைய தொழில்ரீதியான செயல்பாடுகளில் எதிர்விளைவுகளை ஏற்படுத்தத் துவங்கின.



5. மேற்கூறப்பட்ட துன்புறுத்தல் மற்றும் தொல்லையின் காரணமாக, மேல்முறையீட்டாளர் உட்கோட்ட நடுவரிடம் முறையிட, அவர், மேல்முறையீட்டாளரின் முறையீட்டின்மீது, நிர்வாக அலுவலர் அவரது அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பணித்தார். நிர்வாக அலுவலர், விசாரணைக்குபின்னர், 02.12.2003 அன்று தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

6. நிர்வாக அலுவலரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், உட்கோட்ட நடுவரானவர் இவ்வழக்கைப் புலனாய்வு செய்ய காவல் நிலைய அலுவலரை பணித்தார். எதிர்மேல்முறையீட்டாளர் தொல்லை கொடுப்பதையும், மாசுபடுத்துவதையும் நிறுத்துவதற்கு, காவல் நிலைய அலுவலர் பணித்தார், ஆனால் எதிர்மேல்முறையீட்டாளர் மேற்படி கட்டளையை நிறைவேற்றவில்லை. அந்நிலையில் எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளருக்கு எதிராக முதலேற்பு வழக்கு எண் 2518/2003-ஐ தாக்கல் செய்து, அதில் எதிர்மேல்முறையீட்டாளர் தொழில் நடத்துவதில் மேல்முறையீட்டாளர் குறுக்கிடுவதை எதிர்த்து நிலைக்கால உறுத்துக்கட்டளையை வேண்டினார்.

7. அதன்பிறகு, மேல்முறையீட்டாளர் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக முதலேற்பு வழக்கு எண் 26/2004-ஐ தாக்கல் செய்து, அதில், எதிர்மேல்முறையீட்டாளர், தொல்லை மற்றும் மாசு விளைவிக்கக்கூடிய தொழில் நடத்துவதற்கு எதிராக

நிலைக்கால உறுத்துக்கட்டளையை மேல்முறையீட்டாளர் வேண்டினார். விசாரணைக்கு பின்னர், மேல்முறையீட்டாளரின் உரிமை வழக்கு தீர்ப்பாணை இடப்பட்டு, மேற்படி இயந்திரங்களை இயக்குவதினின்றும் மற்றும் காற்று மற்றும் ஒலி மாசை பரப்புவதினின்றும் எதிர்மேல்முறையீட்டாளரை தடுத்து, விசாரணை நீதிமன்றமானது, 03.12.2012-ஆம் தேதியிடப்பட்ட நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான தீர்ப்பாணையைப் பிறப்பித்தது. மறுபுறத்தில், எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கானது, அதே தேதியிடப்பட்ட தீர்ப்பாணையின்மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

8. அலகாபாத்திலுள்ள சக்ரி, உரிமையியல் நீதிபதியால் (இளநிலை) வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையால் மனக்குறையுற்று, எதிர்மேல்முறையீட்டாளர் உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 206/2012 மற்றும் 207/2012-ஐ அலகாபாத்திலுள்ள 2-ஆவது கூடுதல் மாவட்ட நீதிபதி முன்பாக தாக்கல் செய்தார். அலகாபாத் கூடுதல் மாவட்ட நீதிபதி, உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 206 மற்றும் 207/2012-இல் 25.02.2013-ஆம் தேதியிட்ட உறுதியான பொது தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையைப் பிறப்பித்து, கருத்துரைத்ததாவது:

"i. எதிர்மேல்முறையீட்டாளரின் வீடானது, மேல்முறையீட்டாளரின் வீட்டை ஒட்டி உள்ளது மற்றும் 4" அகலம் கொண்ட மதிற்சுவர் இரு வீடுகளுக்குமிடையே இருந்தது.



ii. எதிர்மேல்முறையீட்டாளர் மாவரைக்கும் ஆலை, எண்ணெய் ஆலை, எண்ணெய் செக்கு இயந்திரம் மற்றும் ஐஸ் தொழிற்சாலை போன்ற தொழில்களை நடத்திவந்துள்ளார் மற்றும் அவர் மேற்படி இயந்திரங்களில் டீசலைப் பயன்படுத்தி வந்துள்ளார்.

iii. எதிர்மேல்முறையீட்டாளர் அவருடைய தொழிலை 1990-ஆம் ஆண்டு துவக்கினார். ஆனால், அந்நேரத்தில் அவருடைய இயந்திரங்கள் மின்சாரம் மூலமாக இயக்கப்பட்டன.

iv. 2003-ஆம் ஆண்டில், எதிர்மேல்முறையீட்டாளர் டீசலைக் கொண்டு இயக்கக்கூடிய எண்ணெய் செக்கு இயந்திரத்தைப் பயன்படுத்த துவங்கினார், அவை மிகுந்த அதிர்வுகளையும், காற்று மற்றும் ஒலி மாசையும் உருவாக்கின.

v. மேற்படி இயந்திரங்களால் ஏற்படுத்தப்பட்ட அதிர்வுகளின் காரணமாக, மேல்முறையீட்டாளரின் பக்கமாகவுள்ள மதில் சுவரில் பல இடங்களில் விரிசல் ஏற்பட்டது.

vi. அவர் நடத்திவருகின்ற தொழில், மேல்முறையீட்டாளர் மற்றும் அவருடைய குடும்பத்தாரின் ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடியதாகும்.

vii. எதிர்மேல்முறையீட்டாளரால் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களானது, அதிர்வுகளையும் மற்றும் காற்று, ஒலி, மாசையும் ஏற்படுத்தின என்று சாட்சிகளின் வாய்மொழி சான்று தெளிவுபடுத்தின.

viii. இயந்திரங்கள் ஒலி மற்றும் காற்று மாசு ஏற்படுத்தின என எதிர்மேல்முறை-யீட்டாளரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ix. மேற்படி தொழிலை நடத்துவது, தனிநபருக்கு தொல்லை கொடுத்தல் என்ற வரம்பிற்குள் வந்தது மற்றும் அத்தகைய நடவடிக்கைகள், பெரும்பான்மையான மக்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிப்பவை என்பதால் குடியிருப்பு பகுதிகளில் அவை மேற்கொள்ளப்படக்கூடாது.

x. 1990-ஆம் ஆண்டில் மேல்முறையீட்டாளர் தன் வீட்டில் வசிக்க துவங்கியபோது, எதிர் மேல்முறையீட்டாளர் மேற்படி இயந்திரங்களை மின்சாரம் மூலம் இயக்கி வந்தார் மற்றும் 2003-ஆம் ஆண்டில்தான் எதிர்மேல் முறையீட்டாளர் டீசல் இயந்திரங்களை இயக்கத் துவங்கினார், அவை அதிர்வுகளையும் மாசையும் ஏற்படுத்தின என்பது இசைந்தோருக்கிழைப்பது தீங்காதல் இல்லை என்ற எதிர்வாதம் நிலைநிறுத்தப்படாது.

xi. எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக நிலைக்கால உறுத்துக்கட்டளை பெற மேல்முறையீட்டாளர் உரிமையுடையவராவார்".

9. உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 206 மற்றும் 207/2012-இல் அலகாபாத் கூடுதல் மாவட்ட நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையால் மனக்குறையுற்று, எதிர்மேல் முறையீட்டாளர், அலகாபாத் உயர் நீதிமன்றம் முன்பு



இரண்டாம் மேல்முறையீடு எண்கள் 622/2013 மற்றும் 623/2013 தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றம், இரண்டாம் மேல்முறையீடுகள் இரண்டையும் அனுமதிக்க விரும்பி, அலகாபாத்திலுள்ள சக்ரி உரிமையியல் நீதிபதியால் (இளநிலை) 03.10.2012-ஆம் தேதியிடப்பட்டதும், அலகாபாத்திலுள்ள நீதிமன்ற எண் 2-இன் கூடுதல் மாவட்ட நீதிபதியால் 25.02.2013-ஆம் தேதியிடப் பட்டதுமான தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்து, முதலேற்பு வழக்கு எண் 26/2004-ஐயும் தள்ளுபடி செய்தது.

10. விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப் பட்டதும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டதுமான காண்முடிவுகள் எவற்றையும் உயர் நீதிமன்றம் சரிசெய்யவில்லை என்பது அதன் தீர்ப்புரையை ஆய்வு செய்ததிலிருந்து தெரியவருகிறது. அதற்கு மாறாக, உரிமை வழக்கைத் தாக்கல் செய்ததில் காலவரையறை தொடர்பாக உயர் நீதிமன்றத்தால் வகுத்தமைக்கப்பட்ட சாரமான சட்டப்பிரச்சனை கீழ்வருமாறு எடுத்துரைக்கப்படுவதாவது:

"உரிமை வழக்கானது 2004-இல் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், வழக்கின் காலவரையறை மூன்று ஆண்டுகள்தான் என்று ஒப்புக்கொண்டவகையிலும், வழக்குமூலம் 1990-இல் எழுந்தது என்ற வேண்டுரை, வழக்குரையில் வைக்கப்பட்டது என்ற காரணத்தால் வினாவிற்கிடமான உரிமை வழக்கானது காலவரையறையால் தடைசெய்யப்படுகிறதா?"

11. உயர் நீதிமன்றத்தின் கூற்றின்படி, முதலில், 1990-ஆம் ஆண்டில் மாவரைக்கும் ஆலை நிறுவப்பட்டது என்றாலும், இதிலுள்ள மேல்முறையீட்டாளரால் இடையூறு ஏதும் உணரப்படவில்லை, ஆகவே அவர் எந்த முறையீடும் செய்யவில்லை என்று பதிவாவணத்திலுள்ள சான்று காண்பிக்கிறது என்பதாகும். அந்நேரத்தில் எதிர்மேல்முறையீட்டாளர், இயந்திரத்தை மின்சாரத்தால் இயக்கியதால், அது மாசு அல்லது தொல்லை எதனையும் ஏற்படுத்தவில்லை மற்றும் 2003-ஆம் ஆண்டிலிருந்து எதிர்மேல்முறையீட்டாளர் டீசல் மின்னாக்கித் தொகுப்பு (Diesel Generator Set - டி.ஜி. தொகுப்பு) உபயோகப்படுத்த துவங்கியதால், டி.ஜி. தொகுப்பால் உருவாக்கப்பட்ட புகை மற்றும் இரைச்சல் ஆகியவை கடுமையான காற்று மற்றும் பிற மாசுக்களை ஏற்படுத்தின என்பதே ஒரே விளக்கமாகும். இவ்விளக்கமானது, திருப்தியளிப்பதாக உயர் நீதிமன்றத்தால் கண்டறியப்படவில்லை. மாவரைக்கும் ஆலை 1990-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, அதன்பிறகு 14 ஆண்டுகள் கழித்து அதாவது, 2004-ஆம் ஆண்டில்தான் உரிமை வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது என்ற பொருண்மைக்குட்பட்டு, அது காலவரையறையால் தடைசெய்யப்படுவதாக முடிவு செய்யப்பட்டது.

12. தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டபின், உயர் நீதிமன்றத்தின் அணுகுமுறையுடன் நாங்களும் உடன்படுவதாக இல்லை. வாதி/மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கிற்கு எதிர்மேல் முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்து பூர்வமான பணிந்துரைகளில் முதல் நிலையிலேயே



அத்தகைய வாதம் எடுக்கப்படவில்லை மற்றும் காலவரையறை மீதான ஏதொரு பிரச்சனையும் எழுப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய பிரச்சனை ஏதும் எழுப்பப்படாதநிலையில், தரப்பினர்கள் எந்தவொரு சான்றையும் முன்வைக்க வேண்டியதில்லை என்பது தெளிவு. காலவரையறைச் சட்டப்பிரிவு 3-இன்படி, காலவரையறை குறித்த குறிப்பிட்ட பிரச்சனை ஏதுமில்லாதநிலையிலும், உரிமை வழக்கானது காலவரையறைக்குட்பட்டதா அல்லது காலவரையறையால் தடைசெய்யப்பட்டதா என்பதைப் பார்க்கும் அதிகாரம் ஐயத்திற்கிடமின்றி நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும், காலவரையறை பிரச்சினை முதன்மையான சட்டப் பிரச்சனையாக எழுப்பப்பட்டிருந்தால் மட்டுமே, அத்தகைய ஒரு வாதமானது, எதிர்மேல்முறையீட்டாளரால் உயர் நீதிமன்றத்தின் முன்பு இரண்டாம் மேல்முறையீட்டில் எழுப்பப்பட்டிருக்கவேண்டும். தற்பொழுதைய வழக்கில், நாங்கள் இதனை சட்டம் மற்றும் பொருண்மை குறித்த கலவை வினாவாக காண்கிறோம், ஆகையால், இது, எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டில் உயர் நீதிமன்றத்தால் முதன்முறையாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கக்கூடாது.

13. அதைத் தவிர, தகுதி அடிப்படையிலும், உயர் நீதிமன்றத்தின் அணுகுமுறையிலும் நாங்கள் குறைபாட்டை காண்கின்றோம். அதற்கு குறைந்தது இருகாரணங்கள் உள்ளன, அவை கீழ்காணுமாறு:

(அ) மேல்முறையீட்டாளரால் அளிக்கப்பட்ட விளக்கமானது நியாயப்படுத்தப்பட்டது.

2003-ஆம் ஆண்டில் டி.ஜி. தொகுப்பை எதிர்மேல்முறையீட்டாளர் நிறுவி, மேற்படி மாவரைக்கும் ஆலையை இயக்கத் துவங்கியதால், அது புகையை வெளியிட்டு, அதன்மூலம் காற்று மாசை உருவாக்கி, மேலும் ஒலி மாசையும் உருவாக்கி தொல்லை ஏற்படுத்தத் துவங்கியது என்று அவர் உறுதிபட கூறியிருந்தார். ஆகவே, உரிமை வழக்கைத் தாக்கல் செய்வதற்கான வழக்குமூலம் யாதெனில், 2003-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட டி.ஜி. தொகுப்பே ஆகும். உரிமை வழக்கானது 2004-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், அது காலவரையறைக்குட்பட்டே உள்ளது.

(ஆ) மேலும், உயர் நீதிமன்றமானது வழக்கில் மிகவும் குறுகிய பார்வையைக் கொண்டுள்ளது என நாங்கள் அறிகின்றோம். எதிர்மேல்முறையீட்டாளரால் டி.ஜி. தொகுப்பு பயன்படுத்தப்பட்ட பின்னர், அதன்மூலம் இயக்கப்பட்ட இயந்திரங்களால் ஏற்பட்ட அதிர்வுகளின் காரணமாக, மேல்முறையீட்டாளர் பகுதியிலுள்ள சுவற்றின்மீது பல இடங்களில் விரிசல்களை உண்டாக்கியது என கீழமை நீதிமன்றங்களால் பதிவு செய்யப்பட்ட பொருண்மைகள் குறித்த தீர்முடிவுகள் தெளிவாக்கின. இது, 2003-ஆம் ஆண்டிற்கு பின்னர் நிகழ்ந்துள்ளது. அத்தொழிலை நடத்துவதால், அது மேல்முறையீட்டாளர் மற்றும் அவருடைய குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவிக்கும் என்பது ஐயப்பாட்டிற்கிடமற்ற மற்றொரு காண்முடிவாகும். எதிர்மேல்முறையீட்டாளரின் மாவரைக்கும் ஆலையானது, ஒலி மற்றும் காற்று மாசை ஏற்படுத்துகிறது என ஐயப்பாட்டிற்கிடமின்றி முடிவாகிவிட்டால், அது தொடர் வழக்குமூலமாகும். அத்தகையதொரு மாவரைக்கும் ஆலையை நடத்துவதால் ஏற்படும் கடும் விளைவுகள் உயர் நீதிமன்றத்தால் புறக்கணிக்கப்பட்டிருக்கக் கூடாது.



14. சுருங்கக்கூறின், உயர் நீதிமன்றம், மேற்சொன்ன முறையில் மேல்முறையீடுகளை அனுமதித்ததில் தவறிழைத்துவிட்டது என நாங்கள் அறிகிறோம். அதற்கிணங்க, இம்மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்பட்டு, கீழமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மீட்டளிக்கப்படுகிறது.

15. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதுமில்லை.

⌘❖⌘❖⌘

# இந்திய உச்ச நீதிமன்றம்

2018-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ஆம் நாள்

**முன்னிலை**

**நீதியரசர் திரு. ஆர்.கே. அகர்வால்**
**மற்றும்**
**நீதியரசர் திரு. அபய் மனோகர் சாப்ரே**

உரிமையியல் மேல்முறையீடு எண் **881/2018**

(சி.அ.ம. (உ) எண் 7470/2012-இலிருந்து எழுகிறது)

(முறையான முதல் மேல்முறையீடு எண் 1128/2008-இல் பெங்களூரிலுள்ள கர்நாடக உயர் நீதிமன்றத்தின் 20.09.2011-ஆம் தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து)

ஹெச்.வி. நிர்மலா மற்றும் ஒருவர்
... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

ஆர். ஷர்மிளா மற்றும் ஒருவர்
... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

சாட்சியச் சட்டம் (1872), பிரிவு 68/உயில், இரு உயில்கள், சான்று, நிரூபணம் குறித்து.

இரண்டு உயில்கள் எழுதப்பட்டன - எதை நம்புவது.

தந்தையால், முதல் மனைவி மூலம் பிறந்த அவரது இளவர் மகள், இளவர் மகனுக்கு ஆதரவாக பதிவுசெய்யப்பட்ட உயில் நிறைவேற்றப்பட்டது - நிரூபிக்கப்பட்டதா? - தந்தையார், தன்னுடைய சொத்துகளை தன்னுடைய இளவர் குழந்தைகளுக்கு ஆதரவாக விருப்புறுதியளித்தார், அதில் இயற்கைக்கு மாறானது ஏதுமில்லை.

அசல் உயிலானது, வாதியின் (மகளின்) வசமில்லை, ஆனால் அது 1-ஆம் பிரதிவாதியின் (மகனின்) வசமிருந்தது - அவர்களுக்காதரவாக உயிலை நிறைவேற்றுவதில், இளவர் மகன் மற்றும் மகள் தீவிர பங்காற்றினர் என்ற வினாவுக்கிடமில்லை - சார்நிலைச் சான்று - சான்றிடப்பட்ட நகல் - அனுமதிக்கத்தக்கதா? - சார்நிலைச் சான்றை சமர்ப்பிப்பதன் மூலம், அதன் சட்டமுறைமை நிரூபிக்கப்படமுடியும் - பிந்தைய உயிலானது, முதல் உயில் நிறைவேற்றப்பட்டதை குறிப்பிடவில்லை - முந்தைய உயிலானது, பதிவு செய்யப்பட்ட உயிலாதலால், அது குறித்து குறிப்பிட்டிருக்கவேண்டும் - முந்தைய உயிலின் பின்னழிப்பு குறித்து பிந்தைய உயிலில் குறிப்பிடுவது அவசியமாகும் - முதல் உயிலானது நிரூபிக்கப்பட்டது. (பத்தி 17)

**வழக்குரைஞர்கள்:**

திரு. ஆர்.எஸ். ஹெக்டே,
திரு. கிரிஷ் அனந்தமூர்த்தி,
திருமதி பர்ஹத் ஜஹான் ரேமானி,
திருமதி வைஜெயந்தி கிரிஷ்
... மேல்முறையீட்டாளர்களுக்காக



திரு. ஹெச்.என். நாக்மோகன் தாஸ்,
மூத்த வழக்குரைஞர் அவருடன்
திரு. ஷேகர் ஜி. தேவசா
திரு. மணிஷ் திவாரி,
திரு. நவீன் நாகர்ஜுனா,
தி/ள். தேவசா & கம்பெனி,
எஸ். ஸ்ரீனிவாசன்
... எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக

## தீர்ப்புரை

**நீதியரசர் திரு. அபய் மனோகர் சாப்ரே:**

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்தும் மற்றும் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கில் தீர்ப்பாணை வழங்கியும், பெங்களூரிலுள்ள கர்நாடக உயர் நீதிமன்றத்தால் முறையான முதல் மேல்முறையீடு எண் 1128/2008-இல் பிறப்பிக்கப்பட்ட, 20.09.2011-ஆம் தேதியிடப்பட்ட இறுதி தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இம்மேல்முறையீடு எழுகிறது.

3. இம்மேல்முறையீட்டில் அடங்கியுள்ள பிரச்சனைகளை மதிப்பிடும் பொருட்டு, தொடர்புடைய பொருண்மைகளை இதன் கீழே எடுத்துரைப்பது அவசியமாகும்.

4. இம்மேல்முறையீடு எழுந்துள்ள உரிமையியல் வழக்கில், மேல்முறையீட்டாளர்கள் என்போர், 2 மற்றும் 3-ஆம் பிரதிவாதிகளாவர். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்,

வாதியாவார் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரே 1-ஆம் பிரதிவாதியாவார்.

5. பிரச்சனையானது, முக்கியமாக குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயானது மற்றும் அது குடும்ப தலைவரான ராமைய்யா என்பவருக்கு ஆதியில் சொந்தமான சில சொத்துகள் தொடர்பானதாகும். பிரச்சனைகளை மதிப்பிட, குடும்ப வரைபடம் பயனுள்ளதாக இருக்கும்.

ராமைய்யா என்கிற ராமைய்யாரெட்டி
(26.11.1995 அன்று இறந்துவிட்டார்)

திருமதி ேஉறமாவதி
(முதல் மனைவி 24.02.89
அன்று இறந்துவிட்டார்)
|
(i) திருமதி ஆர். ஷர்மிளா
(மகள் - வாதி)
|
(ii) உமேஷ்
(மகன்- 1-ஆவது
பிரதிவாதி)

திருமதி எச்.வி. நிர்மலா
(2-ஆவது மனைவி)
2-ஆம் பிரதிவாதி
|
ராகேஷ் பாபு
(மகன் - 3-ஆவது
பிரதிவாதி)

6. ராமைய்யா ரெட்டிக்கு, முதலாவதாக திருமதி ேஉறமாவதி மற்றும் இரண்டாவதாக நிர்மலா என இரு மனைவிகள் இருந்தனர். முதல் மனைவியான ேஉறமாவதி உடனான திருமண பந்தத்திலிருந்து ஒரு மகளான ஷர்மிளா (வாதி) மற்றும் ஒரு மகனான உமேஷ் (1-ஆம் பிரதிவாதி) பிறந்தனர் என்பதோடு 2-ஆம் மனைவியான நிர்மலா உடனான திருமண பந்தத்திலிருந்து ஒரு மகனான ராகேஷ் பாபு (3-ஆம் வாதி) பிறந்தார்.



முதல் மனைவியான ேஉறமாவதி, 24.02.1989 அன்று இறந்துவிட்டார் மற்றும் ராமைய்யா, 26.11.1995 அன்று இறந்துவிட்டார்.

7. 11.10.1995 அன்று உமேஷ் (முதல் பிரதிவாதி), நிர்மலா மற்றும் ராகேஷ் பாபுக்கு எதிராக, மு.வ. எண் 7266/1996 என்ற உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார். இவ்வுரிமை வழக்கானது, காலஞ்சென்ற ராமைய்யா ரெட்டிக்கு சொந்தமான சொத்துகளின் பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டது. அது, இவ்வுரிமை வழக்கின் மூன்று தரப்பினர்களுக்கு ஆதரவாக ராமைய்யாவால் நிறைவேற்றப்பட்டிருப்பதாக கூறப்படும் 20.05.1995-ஆம் தேதியிடப்பட்ட உயிலின் அடிப்படையிலானதாகும்.

8. தரப்பினர்கள், உரிமை வழக்கை சமரசம் செய்து கொண்டனர். அதன்படி ஒத்திசைவுத் தீர்ப்பாணையானது, தகுதிப்பாட்டின்பேரில் எதிர்ப்பேதுமின்றி 25.01.1997 அன்று பிறப்பிக்கப்பட்டது.

9. முதல் மனைவியின் மகளான ஷர்மிளா 04.11.2000 அன்று நிர்மலா, உமேஷ் மற்றும் ராகேஷ் பாபு ஆகியோருக்கெதிராக, பெங்களூர், மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் முன்பாக, மு.வ. எண் 7592/2000-இல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார், அதிலிருந்தே, இம்மேல்முறையீடு எழுகிறது. 25.01.1997-ஆம் தேதியிடப்பட்ட மு.வ. எண் 7266/1996-இல் பிறப்பிக்கப் பட்ட ஒத்திசைவு தீர்ப்பாணையானது தன்னை கட்டுப்படுத்தாதென்ற விளம்புகைக்காகவும், ராமைய்யா அவர்களால் தனக்காதரவாக நிறைவேற்றப்பட்ட, 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலின் அடிப்படையில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகளுக்கு

தானே சட்டப்படியாக உரிமையானவரென்றும், அவ்வுரிமை வழக்கைத் தாக்கல் செய்தார்.

10. மூன்று பிரதிவாதிகளும் எதிர்வழக்குரை தாக்கல் செய்தனர். அவர்கள், வாதியால் ஏற்படுத்தப்பட்ட 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலை மறுத்து, மு.வ. எண் 7266/1996-இல் தங்களால் பெறப்பட்ட 25.01.1997-ஆம் தேதியிடப்பட்ட ஒத்திசைவுத் தீர்ப்பாணையை ஆதரித்தனர். விசாரணை நீதிமன்றமானது வழக்கெழு வினாக்களை வனைந்தது. தரப்பினர்கள் தங்களது சான்றுகளைச் சமர்ப்பித்தனர். விசாரணை நீதிமன்றமானது, 28.08.2008-ஆம் தேதியிடப்பட்ட தன்னுடைய தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் உரிமை வழக்கைத் தள்ளுபடி செய்தது. 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட அசல் உயிலை நிரூபிக்க, வாதி தவறிவிட்டார் என்றும், வழக்கானது தோல்வியுறும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதாவது வாதியால் போதிய சான்று சமர்ப்பிக்கப்படாத நிலையில், 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலானது, சட்டத்திற்குட்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதென முடிவு செய்ய இயலாது என விசாரணை நீதிமன்றம் கருதுகிறது.

11. வாதி, தனது உரிமை வழக்கு தள்ளுபடி-யானதால் மனக்குறையுற்று, கர்நாடக உயர் நீதிமன்றத்தின் முன்பாக முதல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தார், அதிலிருந்து, இம்மேல்முறையீடு எழுகிறது.

12. எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்புரை/தீர்ப்பாணையின் மூலம், உயர் நீதிமன்றமானது, மேல்முறையீட்டை அனுமதித்து, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை/ தீர்ப்பாணையை நீக்கறவு செய்து, வாதியின் உரிமை வழக்கில் தீர்ப்பாணை வழங்கியது. வாதி, தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றின்மூலம், 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலை, சட்டத்திற்குட்பட்டுள்ளதாக நிரூபித்துவிட்டார், எனவே, அவர் வழக்குச் சொத்துகள் தொடர்பான, உரிமை வழக்கில் அவரால் கோரப்படுவது போன்று விளம்புகை பெற உரிமையுடையவராவார் என்று உயர் நீதிமன்றமானது முடிவு செய்தது. 2 மற்றும் 3-ஆவது பிரதிவாதிகள் உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்புரையால் மனக்குறையுற்று, இந்நீதிமன்றத்தில், சிறப்பனுமதி மூலம், இம்மேல்முறை-யீட்டைத் தாக்கல் செய்தனர்.



13. தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டும், வழக்கின் பதிவாவணங்களைப் பார்வையிட்டும், இம்மேல்முறை-யீட்டில் தகுதிக்கூறு ஏதுமில்லை என நாங்கள் அறிகின்றோம். எங்களுடைய கருத்தில், உயர்நீதிமன்றம் தெரிவித்த அதனுடைய காரணவிளக்கமும், எடுத்த முடிவும் சரியாகவே உள்ளதென தோன்றுகிறது.

14. இம்மேல்முறையீட்டின் இறுதிமுடிவானது ஒரேயொரு வினாவைச் சார்ந்துள்ளது, அதாவது, வாதி (இதிலுள்ள முதல் எதிர்மேல்முறையீட்டாளர்) 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலை, சட்டப்படி நிரூபிக்க முடிந்ததா? என்பதாகும்.

15. மேற்குறிப்பிட்டவாறு, விசாரணை நீதிமன்றமானது, இவ்வினாவை, வாதிக்கு எதிராக முடிவு செய்தது, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமோ இவ்வினாவை வாதிக்காதரவாக முடிவு செய்தது.

16. நாங்கள் ஆராய்ந்து பார்த்து, உயர் நீதிமன்றத்தின் காரண விளக்கத்துடன் உடன்பட்டு,

அதன்படியாக, வாதியான 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்காதரவாகவும், மேல்முறையீட்டாளர்களுக்கு (2 மற்றும் 3-ஆம் பிரதிவாதிகள்) எதிராகவும், வினாவிற்கு பதிலளிக்க விரும்புகின்றோம். அதாவது, வாதி 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலை, சட்டப்படி நிரூபித்துவிட்டாரென்றும், வேறுவிதத்தில் முடிவுசெய்ய காரணம் ஏதுமில்லை என்றும், நாங்கள் முடிவு செய்கின்றோம். இதனை நாங்கள் கீழ்க்காணும் காரணங்களுக்காக கூறுகின்றோம்.

17. முதலாவதாக, 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலானது, பதிவு செய்யப்பட்ட உயிலாகும். இரண்டாவதாக, அதனை நிறைவேற்றியது தந்தையார் ராமையயாவே தவிர, வேறு எவருமில்லை, முதல் மனைவிக்கு பிறந்த அவரது இளவர் மகள்-ஷர்மிளா மற்றும் இளவர் மகன்-உமேஷ் ஆகியோருக்கு ஆதரவாக அதனை நிறைவேற்றினார். மூன்றாவதாக, தந்தையார் ராமைய்யா, தன்னுடைய சொத்துகளை, தனது இளவர் குழந்தைகளுக்கு உயில்வழி கொடுத்திருக்கிறபோது, அதில் நாங்கள் இயல்புக்கு மாறானதாக எதையும் காணவில்லை. எங்களுடைய கருத்தில், அது அன்பு மற்றும் பாசத்தினாலெழுந்த இயல்பான உயில்வழியளித்தலாகும். நான்காவதாக, இளவர் மகளும், மகனும் 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயில் தங்களுக்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்டதில், தீவிர பங்காற்றினர் என்ற வினாவுக்கு இடமில்லை. அதற்கான சாதாரண காரணம் யாதெனில், வழக்கு சொத்தை அபகரிப்பது போன்ற ஏதேனும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் அளவிற்கு, அவர்கள் மிகவும் முதிர்வயதினர் அல்லர் என்பதாகும். அதாவது, இளவர் குழந்தைகள், தங்களுடைய தந்தையாரின் சொத்துகளை அபகரித்து,



மோசடியான உயிலை உருவாக்குவதில் ஏதும் தீவிர பங்காற்றியிருப்பர் என எதிர்ப்பார்ப்பது மிகவும் அதிகப்படியானதாகும். ஐந்தாவதாக, 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட அசல் உயிலானது, வாதியின் வசமில்லை, ஆனால் அது 1-ஆம் பிரதிவாதியின் வசமிருந்தது என்று சான்றுள்ளது. வாதி, பதிவாளரின் அலுவலகத்திலிருந்து, அதன் சான்றிட்ட நகலைப் பெற்று, அதனை தாக்கல் செய்தார். ஆறாவதாக, இவ்விளக்கமானது உயர் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது எங்களுடைய கருத்திலும் அது சரியே. ஏழாவதாக, அசல் உயிலானது, வாதியின் வசமில்லாததையடுத்து, அதன் உளதாயிருத்தலும், சட்டப்பூர்வமான தன்மையும் வாதியால் சார்நிலைச் சமர்ப்பிப்பதன்மூலம் நிரூபிக்கப்பட முடியும். எட்டாவதாக, வாதி, தனது சுய சாட்சியத்தின் மூலமும், உயிலின் சான்றொப்பமிட்ட சாட்சியானவரை விசாரித்ததன்மூலமும், 1872-ஆம் ஆண்டின் சாட்சியச் சட்டத்தின் பிரிவு 68-இல் கோரப்படுவதற்குட்பட்டு, 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலை நிரூபித்துவிட்டார். எங்களுடைய கருத்தில், உயிலை நிரூபிக்க, அத்தகைய சான்று போதுமானதாகும். ஒன்பதாவதாக, பிரதிவாதிகளால் தெரிவிக்கப்பட்ட 20.05.1995-ஆம் தேதியிடப்பட்ட பிந்தைய உயிலில், உயிலவரால் 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட முதல் உயிலானது நிறைவேற்றப்பட்டிருந்தது என்ற பொருண்மை குறிப்பிடப்படவில்லை என்பது மறுப்பதற்கில்லை. எங்களுடைய கருத்தில் 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலானது பதிவுசெய்யப்பட்ட உயிலாதலால், 20.05.1995-ஆம் தேதியிடப்பட்ட உயிலில் 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட முந்தைய உயில் பற்றிய குறிப்பீடு

இருந்திருக்கவேண்டும் மற்றும் முந்தைய உயிலைக் காட்டிலும் பிந்தைய உயிலே நடைமுறையிலிருக்கும் பொருட்டு, 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட முந்தைய உயிலின் பின்னழிப்பை பிந்தைய உயிலில் குறிப்பிடுவது அவசியமாகும். இதில், அவ்வாறில்லை. பத்தாவதாக, மு.வ. எண் 7266/1996-இல் பிறப்பிக்கப்பட்ட 25.01.1997-ஆம் தேதியிடப்பட்ட ஒத்திசைவு தீர்ப்பாணையில், வாதி தரப்பினரல்லாததையடுத்து, அது அவரை கட்டுப்படுத்தாது. இறுதியாக, 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலானது சட்டப்படி நிரூபிக்கப்பட்டு விட்டதாக முடிவு செய்யப்படுமேயானால், உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாதி, உயிலவரால் தனக்கு உயில்வழி அளிக்கப்பட்ட சொத்துகளுக்கு, தான் உரிமையாளர் என தனக்கு ஆதரவாக விளம்புகை செய்யக்கோருவதற்கு உரிமையுடையவராவார்.

18. மேற்படி விவாதத்தின் துணைகொண்டு பார்க்கையில், வாதி 12.03.1980-ஆம் தேதியிடப்பட்ட உயிலை நிரூபித்துவிட்டாரென்றும், 20.05.1995-ஆம் தேதியிடப்பட்ட உயிலும் மற்றும் மு.வ. எண் 7266/1996-இல் பிறப்பிக்கப்பட்ட 25.01.1997-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்பாணையும், வாதியை கட்டுப்படுத்தாதவையென்றும், உயர் நீதிமன்றம் முடிவு செய்தது சரியே என நாங்கள் முடிவு செய்கின்றோம்.

19. அதன் விளைவாக, நாங்கள் இம்மேல்முறையீட்டில் தகுதிக்கூறு எதையும் காணவில்லை, அது தோல்வியுறுகிறது. அதற்கிணங்க தள்ளுபடி செய்யப்படுகிறது.

⌘❖⌘❖⌘



# இந்திய உச்ச நீதிமன்றம்

2018-ஆம் ஆண்டு மே திங்கள் 15-ஆம் நாள்

## முன்னிலை

**நீதியரசர் திரு. என்.வி. இரமணா**
**மற்றும்**
**நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்**

குற்றவியல் மேல்முறையீடு எண்கள் **795, 796, 797/2011**

மனோஜ் குமார் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

இமாச்சல பிரதேச மாநில அரசு
... எதிர்மேல்முறையீட்டாளர்

உடன்

சுரிந்தர் சிங் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

இமாச்சல பிரதேச மாநில அரசு
... எதிர்மேல்முறையீட்டாளர்

உடன்

---

**ஏ.ஐ.ஆர். 2018 எஸ்.சி. 2693**

ரங்கீல் சிங் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

இமாச்சல பிரதேச மாநில அரசு
... எதிர்மேல்முறையீட்டாளர்

தண்டனைச் சட்டம் (45/1860), பிரிவு 304, பகுதி II, 300, விதிவிலக்கு 4, 302 - சாட்சியச் சட்டம் (1/1872), பிரிவு 3 - கொலை அல்லது கொலையாகாத மரணம் விளைவிக்கும் குற்றம் - சாட்சியத்தை மதிப்பீடு செய்தல் - குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் ஆயுதங்களுடன் வந்து இறந்தவரை தாக்கியதில் அவருக்கு மரணம் ஏற்பட்டது - தரப்பினர்களுக்கிடையே நிலம் தொடர்பான வாய்ச்சண்டையின் காரணமாக திடீரென தாக்குதல் - இறந்தவரை தாக்க முன்திட்டமிடப்படவில்லை - இறந்தவரின் உடலில், கூர்மையான ஆயுதத்தால் தாக்கியதன் காரணமாக உச்சந்தலையில் விளைவிக்கப்பட்ட காயமும், மேலும் வலது ஆட்காட்டி விரலில் காயமும் காணப்பட்டது - உட்கருத்தேதுமின்றி, இறந்தவருக்கு அநேகமாக மரணத்தை விளைவிக்கக்கூடும் என்று நன்கு தெரிந்துதான் உச்சந்தலையில் காயம் விளைவிக்கப்பட்டது - குற்றம், பிரிவு 304, பகுதி II-இன் வரம்பிற்குட்பட்டது - பிரிவு 302-இன் கீழ் குற்றத்திற்கான தீர்ப்பு, பிரிவு 304 பகுதி II-இன் கீழ் மாற்றப்பட்டது.
(பத்திகள் 25, 28, 30, 31, 32)

**பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்:**

1. ஏ.ஐ.ஆர். 2017 எஸ்.சி. 5428. (பத்தி 27)
2. ஏ.ஐ.ஆர். 2004 எஸ்.சி. 4100 : 2004 ஏ.ஐ.ஆர். எஸ்.சி.டபிள்யூ. 4480. (பத்தி 24)



3. ஏ.ஐ.ஆர். 2000 எஸ்.சி. 1374 : 2000 ஏ.ஐ.ஆர். எஸ்.சி.டபிள்யூ. 1173. (பத்தி 26)

**வழக்குரைஞர்கள்:**

திரு. ஊிவ் ராம் ஊர்மா, ஏ.ஓ.ஆர்.,
திரு. கோபால் பிரசாத், ஏ.ஓ.ஆர்.,
திரு. புக்ராம்பம் ரமேஷ் குமார், ஏ.ஓ.ஆர்.
... மேல்முறையீட்டாளர்களுக்காக

திரு. அபினவ் முகர்ஜி,
கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர்,
திருமதி/செல்வி. பிகு ஊர்மா,
திரு. அஜய் மார்வா, ஏ.ஓ.ஆர்.
... எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக

## தீர்ப்புரை

**நீதியரசர் திரு. என்.வி. இரமணா:**

இமாச்சல பிரதேச உயர் நீதிமன்றத்தில், குற்றவியல் மேல்முறையீடு எண் 312/2006-இல் மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக பிரிவுகள் 302, 341 மற்றும் 323 உடனிணைந்த இந்திய தண்டனைச் சட்டம் (இ.த.ச.), பிரிவு 34-இன் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களுக்காக கற்றறிந்த அமர்வு நீதிபதியால் தீர்வளிக்கப்பட்டதான குற்ற மற்றும் தண்டனைத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் உறுதி செய்து, அதில் 2009-ஆம் ஆண்டு நவம்பர் 20-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரைக்கெதிராக சிறப்பு அனுமதி

மூலமான இம்மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.

2. அரசுத்தரப்பு வழக்கிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டவாறு, இம்மேல்முறையீடுகளில் விவாதிப்பதற்கு தேவையான பொருண்மைகள் யாதெனில், வருவாய்த்துறை பதிவாவணங்களின்படி ஜராம் சிங் (அ.சா.1)-ம் மற்றும் பலரும், சொத்து/நில அளவை எண் 164/220, புல எண் 605 கொண்ட நிலத்தின் உரிமையாளர்களாவர். மேற்சொன்ன ஜராம் சிங் (அ.சா.1), கிருஷ்ணன் லால் மற்றும் சுபாஷ் சந்திடம் மேற்படி நிலத்தை அடைமானம் வைத்திருந்தார், ஆனால், நிலத்தின் சுவாதீனம் பிரேம் தாஸிடம் (இறந்தவர்) இருந்தது. மேற்படி நிலத்தில் மேல்முறையீட்டாளர்கள் குறுக்கிட்டு தொல்லைக் கொடுத்ததையடுத்து, ஜராம் சிங்-அ.சா.1 மற்றும் இறந்த பிரேம் தாஸ், மேல்முறை-யீட்டாளர்களுக்கு எதிராக உரிமை வழக்கு தாக்கல் செய்ததன்மூலம் பிரச்சனைக்குரிய நிலத்தில் கட்டுமானம் ஏதும் எழுப்புவதிலிருந்து மேல்முறையீட்டாளர்களை தடுத்தனர்.

3. ஜீவன் (அ.சா.12)-குற்றமுறையீட்டாளர், 2004-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24-ஆம் தேதியன்று, இரவு சுமார் 8.30 மணியளவில், அருகிலுள்ள கிராமத்திற்கு சென்ற தனது தந்தை பிரேம் தாஸை தேடி, தனது வீட்டை விட்டுச் சென்றார், மேலும் சேது என்றழைக்கப்படும் கிராமத்திற்கு அருகில் யஷ்வந்த் சிங் (அ.சா.13) மற்றும் நார்சோ ராம் (பி.சா.1) ஆகியோருடன், தனது தந்தை பிரேம் தாஸை கண்டார். அவர்கள் அனைவரும் தங்களின் கிராமத்திற்கு திரும்பிவரும் வழியில் பிரச்சனைக்குரிய நிலத்தைக் கடந்துவந்தபோது,



மேல்முறையீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் என மொத்தம் ஏழு பேரை அங்கு பார்த்தனர். அவர்கள் திடீரென ஒரே நேரத்தில் பிரேம் தாஸை தாக்கினர். மனோஜ் குமார் (எ.4) மண்வெட்டியை (பால்சா) உபயோகப்படுத்தும் விதமாக வைத்துக்கொண்டும், சுரிந்தர் குமார் (எ.3) அரிவாளை வைத்துக்கொண்டும், மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தடிகளை வைத்துக்கொண்டுமிருந்தனர். மனோஜ் குமார் (எ.4) மண்வெட்டியால் பிரேம் தாஸின் தலையில் அடித்தும், குற்றஞ்சாட்டப்பட்டவரான சுரிந்தர் சிங் அரிவாளால் அவரை தாக்கியும், பிரேம் தாஸின் வலது கையின் ஆட்காட்டி விரலில் காயம் விளைவித்ததோடு, மற்ற குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அவரை தடிகளால் தாக்கினர். தங்களின் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு, இறந்துபோன பிரேம் தாஸ், யஷ்வந்த் சிங் (அ.சா.13), நார்சோ ராம் (பி.சா.1) மற்றும் குற்றமுறையீட்டாளர் ஜீவன் (அ.சா.12) ஆகியோர் சம்பவயிடத்திலிருந்து தாறுமாறாக ஓடிய அதே வேளையில், பிரேம் தாஸ் உயிரைப் பறிக்கவேண்டும் என்று ரங்கீல் சிங் (எ.1) கூறினார். ஜீவன் (அ.சா.12), மற்றொரு பாதைமூலம் யஷ்வந்த் சிங் (அ.சா.13)-இன் கடையை அடைந்தபோது, அங்கு, அவரது தந்தை பிரேம் தாஸ் இரத்த வெள்ளத்தில் மயங்கிய நிலையில் இருந்ததைக் கண்டார். அவர்கள், ஓட்டுநர் அசோக்குமாரை (அ.சா.2)-ஐ காயமடைந்த பிரேம் தாஸை சிங்குந்தாவிலுள்ள காவல் சாவடிக்கு அழைத்துக்கொண்டு, அவருடைய மாருதி வேனில் அழைத்துச்சென்று, அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்தனர். அதன்படி, மு.த.அ. எண் 45/2004 (அ.சா.ஆ.6/ஏ) பதிவு செய்யப்பட்டது.

4. காயமடைந்த பிரேம் தாஸை, காவல் துறையினர் சிங்குந்தாவிலுள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்கு அனுப்பினர், அங்கு மருத்துவர் பிரவீன் குமார் (அ.சா.4) அவரை பரிசோதனை செய்து, அவருக்கு மருத்துவம் சார்ந்த சட்ட சான்றிதழ் (அ.சா.ஆ.4/ஏ)-ஐ அளித்தார். அவரது நிலை மிகவும் மோசமடைந்ததால், அவர் தர்மசாலா, ராஜேந்திர பிரசாத் மருத்துவ கல்லூரி (ஆர்.பி.எம்.சி)-க்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பப் பட்டார், ஆயினும், போகும் வழியில் அவரது மகன் ஜீவனின் அழைப்புகளுக்கு, பாதிக்கப்பட்டவர் பதில் தரவில்லை எனத் தெரிகிறது. ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டதாக, அவர் (மகன்) உணர்ந்து, அவரை மீண்டும் மருத்துவர் பிரவீன் குமார் (அ.சா.4)-இடம் கொண்டுவந்தார். அவர் பரிசோதித்ததன்பேரில் காயங்களின் காரணமாக இறந்துபோனவர் மாள்வுற்றதாக அறிவித்தார்.

5. பர்தாப் சிங் (அ.சா.18) விசாரணை அதிகாரி, இறந்தவரின் மரணச் செய்தியை அறிந்ததன்பேரில், பிரேத விசாரணை (அ.சா.ஆ.11/ஏ) நடத்தி, இறந்தவரை நிழற்படங்கள் எடுப்பதற்கு நிழற்படக் கலைஞரை அழைத்தார், மேலும் சடலத்தை சடலக் கூறாய்விற்காக அனுப்பினார். அதன்பின்னர், அவர் சம்பவயிட வரைபடம் (அ.சா.ஆ.18/ஏ)-ஐ தயார் செய்து, காயமடைந்த யஷ்வந்த் சிங்கை (அ.சா.13) மருத்துவ சோதனைக்கு உட்படுத்தி, அவரது இரத்தக்கறை படிந்த சட்டை (அ.சா.ஆ.13/பி)-ஐ கைப்பற்றினார். விசாரணை அதிகாரி, விசாரணையின்போது, சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு இரத்தக்கறை படிந்த மண், கற்கள் (அ.சா.ஆ.16/ஏ) ஆகியவற்றை சேகரித்ததுடன், எ.5-இன் வசமிருந்து மண்வெட்டி (சா.ஆ.பி.2), ஓர் அரிவாள் (சா.ஆ.பி.1) மற்றும் கம்புகள் (சா.ஆ.பி.3) ஆகியவற்றை, கைப்பற்று குறிப்பாணை அ.சா.ஆ.17/ஏ-இன் மூலம் கைப்பற்றினார். 1-ஆவது மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர் (ரங்கீல் சிங்)-இன் வசமிருந்து அ.சா.ஆ.14/ஏ-இன் மூலம் அவரது இரத்தக்கறை படிந்த ஆடைகளைக் கைப்பற்றி, அவற்றை தடயவியல் ஆய்விற்காக அனுப்பிவைத்தார்.



6. விசாரணை நிறைவடைந்ததன்பேரில், வழக்கு டல்ஹௌசி, கற்றறிந்த உட்கோட்ட நீதித்துறை நடுவர் முன் தாக்கல் செய்யப்பட்டு, அவர், அதை சம்பா, கற்றறிந்த அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பினார், அவர் இ.த.ச., பிரிவுகள் 147/149, 148/149, 341/149, 323/149, 302/149 மற்றும் 506/149-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப் பட்டவருக்கெதிராக குற்றச்சாட்டுகளை வனைந்தார். ரங்கீல் சிங் (1-ஆவது எதிரி), மொஉறிந்தர் சிங் (2-ஆவது எதிரி), சுரிந்தர் சிங் (3-ஆவது எதிரி), மனோஜ் குமார் (4-ஆவது எதிரி), ரேகா தேவி (5-ஆவது எதிரி), வீணா தேவி (6-ஆவது எதிரி) மற்றும் பியாசோ தேவி (7-ஆவது எதிரி) ஆகியோர் குற்றம் புரியவில்லை என்று வாதுரைத்து, விசாரிக்கும்படி கோரினர். குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குற்றத்தை மெய்ப்பிப்பதற்காக, அரசுத்தரப்பு அதிகப்பட்சமாக 18 சாட்சிகளை விசாரணை செய்துள்ளது, மேலும் எதிர்த்தரப்பில் ஒரேயொரு சாட்சி இருந்தார். கற்றறிந்த அமர்வு நீதிபதி விசாரணையை முழுமையாக நடத்தி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், இ.த.ச., பிரிவு 506/149-இன் கீழான குற்றச்சாட்டைத் தவிர, குற்றவாளிகள் என குற்றஞ்சாட்டப்பட்டு, அது மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாகக்

கருத்து தெரிவித்தார். அதன்படி, அவர்கள், கீழே குறிப்பிட்டுள்ளபடி, அனைத்து தண்டனைகளையும் ஒருங்கிணைவாக அனுபவிக்கும்படியாக உத்தரவிடப்பட்டு, குற்ற மற்றும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டனர்.

| Fww"rhllg gllthfsþd bgah | rllg gþhþtfs | jzlid |
|---|---|---|
| midjJ Fww"rhllg gllthfSk | ,/j/r/. gþhþt 302 cld ,izej gþhþt 149 | xtbthUtUfFk Mas jzlidald U/10.000-? mguhjk/ mguhjk fllj jtwþdhy. mthfs xtbthUtUk nkYk ,uzL tUl fhy rþiwjjzlid mDgtþggjwFhþa? tuhth/ |
| midjJ Fww"rhllg gllthfSk | ,/j/r/. gþhþt 147 | xtbthUtUfFk MW khj fhyk fL'fhty rþiwj jzlidald U/10.000-? mguhjk/ mguhjk fllj jtwþdhy. mthfs xtbthUtUk nkYk ,uzL khj fhy rþiwjjzlid mDgtþggjwFhþa? tuhth/ |



| | | |
|---|---|---|
| midjJ Fww"rhllg gllthfSk | ,/j/r/. gþhþt 148 | xtbthUtUfFk MW khj fhyk fL'fhty rþiwj jzlidald U/10.000-? mguhjk/ mguhjk fllj jtwþdhy. mthfs xtbthUtUk nkYk ,uzL khj fhy rþiwjjzlid mDgtþggjwFhþa? tuhth/ |
| midjJ Fww"rhllg gllthfSk | ,/j/r/. gþhþt 323 cld ,izej gþhþt 149 | xtbthUtUfFk MW khj fhyk fL'fhty rþiwj jzlidald U/10.000-? mguhjk/ mguhjk fllj jtwþdhy. mthfs xtbthUtUk nkYk ,uzL khj fhy rþiwjjzlid mDgtþggjwFhþa? tuhth/ |
| midjJ Fww"rhllg gllthfSk | ,/j/r/. gþhþt 341 cld ,izej gþhþt 149 | xtbthUtUfFk xU khj rhjhuz rþiwffhty jzlid kwWk U/500-? mguhjk/ mguhjk fllj jtWkglrjjþy. mthfs xtbthUtUk nkYk VG ehlfSfF rhjhuz rþiwf fhty jzlid mDgtþffntzLk/ |

7. இங்குள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர்/ மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பிற்கு வழிவகுத்த, விசாரணை நீதிமன்றத்தின் சுருக்கமான காரண விளக்கத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

i. சொத்தில் பாத்தியதை கொண்டுள்ள அல்லது இறந்தவரின் நெருங்கிய நண்பர்களாக இருந்துவரும் சாட்சிகள், அக்கறைகொண்ட சாட்சிகளாகத் தகுதிபெறமாட்டார்கள்.

ii. இறந்தவருடன் சென்றதாகச் சாட்டுரைக்கப்படும் இரண்டு சாட்சிகளை விசாரிக்காதது, அரசுத் தரப்பு வழக்கைப் பாதிக்காது.

iii. குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்தவரை அடித்தார் என்ற நிகழ்வை பி.சா.1 மறுக்கவில்லை.

iv. பி.சா.1-இன் வாக்குமூலங்கள் முரண்பாடான-வையாக உள்ளதால், அவரால் முன்வைக்கப் பட்ட புனை கருத்துகள்மீது நீதிமன்றம் நம்பிக்கை வைக்க இயலாது.

v. மண்வெட்டியில் (பயன்படுத்தப்பட்டதாக சாட்டுரைக்கப்படும் ஆயுதம்) காணப்பட்ட இரத்தக் கறைகள், குற்றம் நடந்ததைச் சுட்டிக்காட்டுகிறது.

vi. இறந்தவரின் உடலின் உள்ளுறுப்புகளில் மது அருந்தியதன் அறிகுறி ஏதும் காணப்பட வில்லை.

vii. அரசுத்தரப்பு நியாயமான சந்தேகங்-களுக்கப்பால் வழக்கை மெய்ப்பிக்க முடிந்தது.



8. மனக்குறையுற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விசாரணை நீதிமன்றத்தால் தங்களுக்கு வழங்கப்பட்ட குற்ற மற்றும் தண்டனைத் தீர்ப்புக்கெதிராக உயர் நீதிமன்றத்தின் முன்பு மேல்முறையீட்டை முன்கொணர்ந்தனர். இதிலுள்ள எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரைமூலம், உயர் நீதிமன்றமானது, அவர்களது மேல்முறையீட்டினைப் பகுதியாக அனுமதிக்கையில், அவர்களுக்கு சந்தேகத்தின் பலனை நீட்டித்து, குற்றஞ்சாட்டப்பட்டவர்களான மொஉறிந்தர் சிங் (எ.2), பியாசோ தேவி (எ.7), ரேகா தேவி (எ.5) மற்றும் வீணா தேவி (எ.6) ஆகியோரை விடுதலை செய்தது. ஆயினும், உயர் நீதிமன்றம், ரங்கீல் சிங் (எ.1), சுரிந்தர் குமார் (எ.3)மற்றும் மனோஜ் குமார் (எ.4)-க்கு எதிராக விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட குற்ற மற்றும் தண்டனை தீர்ப்பினை பின்வரும் காரணங்களின்பேரில் உறுதிசெய்தது:

i. குற்றத்தின் உட்கருத்தானது, முன்பிருந்த நிலத்தகராறின் காரணமாக ஏற்பட்டது.

ii. பி.சா.1-இன் வாக்குமூலம் நம்பத்தகுந்ததாக இல்லை.

iii. 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஆடையிலிருந்த இரத்தப்பிரிவு இறந்தவரின் இரத்தத்துடன் ஒத்துப்போனது.

iv. பிற தொடர்பில்லாத குடும்ப உறுப்பினர்-களையும் இணைக்குமளவிற்கு அரசுத்தரப்பு வழக்கானது மிகைப்படுத்தப்பட்டது என்பதை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

9. உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்புரையால் மனக்குறையுற்று, மனோஜ் குமார்

(குற்றவியல் மேல்முறையீடு எண் 795/2011), சுரிந்தர் சிங் (குற்றவியல் மேல்முறையீடு எண் 796/2011) மற்றும் ரங்கீல் சிங் (குற்றவியல் மேல்முறையீடு எண் 797/2011) ஆகியோர் இந்நீதிமன்றத்தின் முன்பான மேல்முறையீட்டில் உள்ளனர். அனைத்து குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்-மேல்முறையீட்டாளர்களும் ஒரே எதிர்ப்புக்குள்ளான பொது தீர்ப்புரையை எதிர்த்ததினால், நாங்கள், இம்மேல்முறையீடுகளை இப்பொது உத்தரவின்மூலம் முடிவு செய்வதற்கு விழைகிறோம்.

10. பதிவாவணத்திலுள்ள சான்றினையும், அதற்கு எதிர்முகமாக உள்ள விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் காண்முடிவுகளின் பகுதிகளையும் ஆராய்ந்துபார்க்கையில், மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர், அரசுத்தரப்பின் வழக்கு முழுவதும் தரப்பினர்களுக்கிடையே நிலுவையிலுள்ள உரிமை வழக்குகளின் உட்கருத்தின்மீதே அமைந்துள்ளது என்றும், இறந்தவர் மற்றும் அவரது தரப்பினர்களை, குறிப்பிட்ட இடம் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் தாக்குவதற்கு மேல்முறையீட்டாளர்கள் முன்திட்டமிட்டு உள்ளனர் என்று அரசுத்தரப்பால் முன்கொணரப்பட்ட வாதத்தில் எந்தவொரு ஆதாரமுமில்லை என்றும் வாதிட்டார். அவரது கூற்றின்படி, சம்பவம் பிரச்சனைக்குரிய சொத்திற்கு அருகில் நடந்துள்ளது; அது, இறந்தவர் செல்லும் கிராமத்தின் வழி அல்ல என்றும், இறந்தவர், மேல்முறையீட்டாளர்களை தாக்குவதற்கோ அல்லது மேல்முறையீட்டாளர்களின் சொத்திற்கு ஊறுவிளை-விக்கவோ அல்லது வேறுவகையில் அழிக்கவோ வழக்குச் சொத்திற்குள் வந்தார் என்பதை அது காட்டுகிறது என்பதாகும். பிறகு, பல குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள், பல்வேறு ஆயுதங்களால் இறந்தவரின் உயிரைப்



பறிக்கும் நோக்கத்துடன் அவரை தாக்கினர் என்றால், இறந்தவரின் உடலில் காணப்படும் சாதாரணமான மிகச்சிறிய காயங்கள், இ.த.ச., பிரிவு 300 உடனிணைந்த பிரிவு 302-இன் கீழான தண்டனையை ஈர்க்கும்பொருட்டு, இறந்தவருக்கு மரணம் விளைவிக்கும் எண்ணமிருந்தது என்பதற்கு ஆதரவளிக்கவில்லை என்ற நிலைப்பாட்டில் அவர் தொடர்ந்திருந்து வருகிறார். கற்றறிந்த வழக்குரைஞர், இவ்வாதத்திற்கு ஆதரவளிக்கும்விதமாக மருத்துவச் சான்றின்மீதும் சார்வுற்றார்.

11. மறுபுறம், அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கு ஆதரவளித்து, இந்நீதிமன்றத்தின் முன்புள்ள இம்மேல்முறையீடுகளைத் தள்ளுபடி செய்யும்படி கோரினார்.

12. இருதரப்பினர்களின் வாதங்களைக் கேட்டு, பதிவாவணத்திலுள்ள சான்றாதாரங்கள் பார்வையிடப் பட்டன. எங்கள் பரிசீலனைக்கு வருகின்ற சட்டம் மற்றும் பொருண்மை பற்றிய கலவை வினா யாதெனில், இங்குள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், கொலை அல்லது கொலையாகா மரணம் விளைவிக்கும் குற்றத்திற்காக தண்டிக்கத்தக்கவர்களா, இல்லையா? என்பதாகும்.

13. அ.சா.1 (ஜராம் சிங்), தான் இறந்தவரின் சகோதரர் எனக் கூறியுள்ளார். அவர் சம்பவத்தின் கண்ணுற்ற சாட்சியல்ல, அவரது சாட்சியம் கேள்விநிலை சான்று என்பதால், அது முக்கியமான சான்றின் பகுதியல்ல என்பதாகும். ஆராயப்படவேண்டிய ஒரே அம்சமானது, நிலம் தொடர்பாக நிலவிவரும் பிரச்சனையேயாகும். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பிரச்சனையிலுள்ள நிலத்தில் வலியச்சென்று கடைகளைக் கட்டினர்

என்றும், அவர், டல்ஹௌசி நீதிமன்றத்தின் முன்பு வெளியேற்றுகைக்கான உரிமையியல் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார் என்றும் அவர் கூறுகிறார்.

14. இறந்தவர் (பிரேம் தாஸ்) மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டபோது, அ.சா.4தான் (மருத்துவர் பிரவீன் குமார்) மருத்துவராவார். அவர், அனுப்பப்பட்ட நோயாளி அமைதியுடனும், சுய நினைவுடனும், நேரத்தையும், இடத்தையும், நன்கு அறியும் நிலையில் இருந்தார் என்று கூறியுள்ளார். மேலும் அவர், 1 மற்றும் 2-ஆவது காயங்கள் கூர்மையான ஆயுதத்தால் விளைவிக்கப் பட்டுள்ளதாகத் தோன்றுகிறது என்பதோடு, இடுப்படி முக்கோண மூட்டெலும்பு பகுதியிலுள்ள மூன்றாவது காயமானது முனைமழுங்கிய ஆயுதத்தால் விளைவிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதன்பின்னர், நோயாளி மேல்சிகிச்சைக்காக தர்மசாலாவிலுள்ள ஆர்.பி.எம்.சி. மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாக அவர் கூறியுள்ளார். 22.30 மணிக்குப் பிறகு, இறந்தவர் இறந்தநிலையில் கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப்பட்டார்.

15. தர்மசாலாவிலுள்ள ஆர்.பி.எம்.சி.-இல் ஊடுகதிர் எடுப்பதற்கான அவரது அறிவுரை, வெளிநோயாளிகள் துறைப் பதிவாவணங்களில் எவ்விடத்திலும் பிரதிபலிக்கவில்லை என்பதை, அவர் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டார். இறந்தவர் தனியார் வேன் மூலம் சுகாதார மையத்திற்கு கொண்டு வரப்பட்டு, அதே வாகனத்தில் அவரது வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்பதை அ.சா.4 ஒப்புக்கொண்டார் என்று குறிப்பிடுவது சிறிது முக்கியத்துவம் பெறுகிறது. ஆயினும், நோயாளி தர்மசாலாவிலுள்ள ஆர்.பி.எம்.சி. மருத்துவக் கல்லூரிக்குச் செல்வதற்குப் பதிலாக



வீட்டிற்கு திரும்பிவிட்டார் என்பதை அவர் பின்னர் மறுத்துள்ளார். நோயாளியின் நிலைமை மிகவும் மோசமாக இல்லை என்று சிகிச்சையின் தன்மையின்பேரில் அவர் கூறியுள்ளார்.

16. அ.சா.5 (மருத்துவர் அரவிந்த் கன்வர்) உச்சந்தலைப் பகுதியைத் திறந்து பார்த்து, காயங்களின் தன்மையைப் பின்வரும் முறையில் குறிப்பிட்டுள்ளார்.

உச்சந்தலையின் மேல்பாகத்தை திறந்து பார்த்ததில், நெற்றிப் பொட்டெலும்பின் வலதுபுறத்தில் மண்டை ஓட்டிற்கும் மூளைக்கும் இடையிலும், மூளையின் உள் மற்றும் நடு உறை இடையிலும் குருதிப்போக்கு காணப்பட்டது. விரிவடைந்த நிலையில் இருந்தது. மூளையில் இரத்தம் உறைந்து, உச்சந்தலைப் பகுதியில் உடைவு ஏதுமின்றி காணப்பட்டது.

அவரது குறுக்கு விசாரணையில், உச்சந்தலை மேலுள்ள காய எண்.2-ஆனது மூளையில் குருதிப் போக்கினை ஏற்படுத்தக்கூடிய தன்மையுடைய கொடுங்காயம் என்று தன்னியலாக அவர் கூறியுள்ளதைக் குறிப்பிடுவது உகந்ததாகும். தலைக்காயத்தின்மீது உடைவு ஏதுமில்லை என்று கருத்துரைப்பது சரியே. மருத்துவர் மோடி மருத்துவஞ்சார்ந்த சட்டவியல் துறையின் அதிகாரி என்பது சரியே. மருத்துவர் மோடியின் 18-ஆம் பதிப்பை நான் பார்த்தேன், அதில் பக்கம் 229-இல், அவர் கொடுங்காயம் குறித்து வரையறுத்துள்ளார், நான், அந்த வரைவிலக்கணத்துடன் உடன்படுகிறேன். நான், பிரேதப் பரிசோதனை சமயத்தில், குற்றத்திற்குரிய ஆயுதத்தைப் பார்க்கவில்லை. காய எண் 2-ஆனது, நீதிமன்றத்தில் என்னிடம்

காண்பிக்கப்பட்ட சா.ஆ.பி.1-இல் உள்ள மருத்துவர் பயன்படுத்தக்கூடிய சிறு கத்தி (blade)-ஆல் விளைவிக்கப்பட்டிருக்கலாம். காய எண் 2-ஆனது கூர்மையான முனைக்கொண்ட பொருளால் குத்தியதன் விளைவாக ஏற்பட்டது என்பது சரியே. ஆனால் அது, பயன்படுத்தப்படும் வேகத்தையும், வலிமையையும் பொறுத்துள்ளது. நான் பிரேதப் பரிசோதனை அறிக்கையில், உச்சந்தலைக் காயத்தின் ஆழத்தைக் குறித்து குறிப்பிட்டிருக்கவில்லை. உச்சந்தலை காயத்தின் ஆழத்தை உறுதிசெய்யாமல், அது கொடுங்காயம் எனக் கருத்துரைப்பது இயலாததாகும் என்பது சரியே.

(வலியுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது)

17. இறந்தவரின் மகனான அ.சா.12 (ஜீவன்) சாட்டுரைக்கப்பட்ட சம்பவத்திற்கு, ஒரு கண்ணுற்ற சாட்சியென தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது முன்னிலையில், குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களான யஷ்வந்த் சிங் (அ.சா.13) மற்றும் நார்சோ ராம் (பி.சா.1) திடீரென்று இறந்தவரை தாக்கினர் என்று அரசுத்தரப்பின் வழக்கு விவரத்தையே அவர் மீண்டும் முழுமையாக கூறியுள்ளார். இறந்தவரை காப்பாற்றுவதற்கு யஷ்வந்த் சிங் தலையிட்டபோது, அவரும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களால் அடிக்கப்பட்டார். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், அ.சா.12 (ஜீவன்)-ஐ நோக்கி விரைந்தபோது, அவர் அந்த இடத்திலிருந்து ஓடிவிட்டார். அவர் ஓடிக் கொண்டிருக்கையில் பின்புறம் திரும்பி பார்த்தபோது, இறந்தவர் தலைக்காயம் உட்பட பல்வேறு காயங்களடைந்த யஷ்வந்த் சிங் மற்றும் நார்சோ ராம் அவ்விடத்திலிருந்து ஓடிக்கொண்டிருந்தனர். சிகிச்சையைப் பொறுத்தவரையில், இறந்தவர் சிங்குந்தாவிலுள்ள பி.ஹெச்.சி.-க்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு அவருக்கு முதல் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், பின்னர் தர்மஷாலாவிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகவும், அவர் தெரிவித்துள்ளார். இறந்தவர் சிகிச்சையின்பேரில் செயலாற்றாததால், அவர் மீண்டும் சிங்குந்தாவிலுள்ள பி.ஹெச்.சி.-க்கு கொண்டுவரப்பட்டு, அங்கு அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டார்.



18. குற்றம் நடந்த இடத்தில் இருந்ததாகச் சாட்டுரைக்கப்பட்ட மற்றொரு முக்கியமான சாட்சி, அ.சா.13 (யஷ்வந்த் சிங்) ஆவார். அவரும் அரசுத்தரப்பின் வழக்கு விவரத்தையையே திரும்பக் கூறியுள்ளார். இறந்தவர் சிங்குந்தாவிலுள்ள பி.ஹெச்.சி-யில் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்ட பின்னர் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டார் என்று இந்த சாட்சி திட்டவட்டமாகக் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அதன்பின்னர், இறந்தவரின் நிலைமை மோசமடைந்ததால் அவர், சிங்குந்தாவிலுள்ள பி.ஹெச்.சி.-க்கு கொண்டுவரப்பட்டு, அங்கு அவர் இறந்ததாக அறிவிக்கப்பட்டார்.

19. அரசுத்தரப்பு சாட்சியை குறித்து கருத்தறிவிக்கையில், நாங்கள் எதிர்த்தரப்பு சாட்சியின் மேல் கவனம் செலுத்தவேண்டும். உண்மையிலேயே பி.சா.1-நார்சோ ராம், முதலில் அரசுத்தரப்பு சாட்சியாவார். மேலும், அரசுத்தரப்பு கோட்பாட்டின்படி, பி.சா.1 கண்ணுற்ற சாட்சியாவார். பி.சா.1-இன் கூற்றுப்படி, அவர் யஷ்வந்த் சிங் (அ.சா.13) உடன் சேர்ந்து, துகர்வர் கிராமத்தை நோக்கி சென்று கொண்டிருக்கையில், அவர்கள், இறந்துபோன பிரேம் தாஸை, 50 கெச அளவு தூரத்தில் சந்தித்தனர்; அவர்கள் மதுக்கடைக்கு

சென்றனர்; வழக்குச் சொத்திற்கு அருகில் கடைக்காக சில அறைகள் கட்டப்பட்டிருந்தன, அக்கடைகளை குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மூடிக்கொண்டிருந்ததைப் பார்த்து, அந்த நேரத்தில் இறந்தவரும், அ.சா.13-ம் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களை திட்ட தொடங்கினர்; மேலும் குற்றஞ்சாட்டப்பட்ட சுரீந்தர் சிங் மற்றும் மனோஜ் குமார் (குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 796/2011 மற்றும் 795/2011-இன் முறையே மேல்முறையீட்டாளர்கள்) கைகளில் ஏதுமின்றி வீட்டிலிருந்து வருவதை அவர் பார்த்தார் என்பதாகும்.

20. இறந்தவரும் அ.சா.13-ம் சாராயம் குடித்திருந்தனர் என்பதாக பி.சா.1 சாட்சியம் அளித்திருந்தாலும், இறந்தவரின் குடலில் சாராயம் இருந்ததாக தடய அறிவியல் ஆய்வக அறிக்கையில் (அ.சா.ஆ.18/சி) குறிப்பிடவில்லை என்பதால் அச்சாட்சியத்தை உயர் நீதிமன்றம் நம்பவில்லை. இதைத் தவிர, உயர் நீதிமன்றம் பி.சா.1-இன் வாக்குமூலத்தின் ஒரு பகுதியைத்தான் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது. சில சாட்சிகளின் சாட்சியத்தின் ஒரு பகுதி மட்டும் நம்பப்படவில்லையென்றாலும், அவரது முழு சாட்சியமும் புறக்கணிக்கப்பட்டுவிட்டதாகப் பொருளல்ல. பி.சா.1, சம்பவத்தின்போது அங்கிருந்தார் என்பதான அரசுத்தரப்பின்கூற்றுங்கூட ஏற்றுக்கொள்ளப்பட்டது. இறந்தவர், தொடர்புடைய சமயத்தில் அங்கிருந்த மேல்முறையீட்டாளர்கள் தரப்பினரைத் திட்ட தொடங்கினார் என்ற அவரது சாட்சியம், அக்காரணத்திற்காக ஏற்கத்தக்கது மற்றும் இறந்தவரின் இந்த நடவடிக்கையானது மேல்முறையீட்டாளர்களை பழிக்குப்பழி வாங்கத் தூண்டியிருக்கவேண்டும்



என்பதாகும். இக்கருத்துரையானது, குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 313-இன் கீழ், அவர்களின் விசாரணையில், அவர்களால் முன்வைக்கப்பட்ட எதிர்த்தரப்பின் வாதத்தை ஓரளவுக்கு உறுதிப்படுத்துகிறது.

21. பொருண்மைப் பற்றிய பிரச்சனையின் அடிப்படையிலான சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, மரணம் விளைவிக்கும் குற்றம் தொடர்பான சட்டப் பிரச்சனையை முழுமையாக ஆராய்வது பொருத்தமானதாகும். மேல்முறையீட்டாளர்-களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதுரைத்ததாவது, இறந்துபோன தரப்பினர் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தவுடன், அங்கிருந்த அ.சா.13, குற்றஞ்சாட்டப் பட்டவர்களை வாய்வார்த்தைகளால் திட்ட தொடங்கியதைத் தொடர்ந்து, அது திடீர்ச்சண்டையாகி, இறந்தவருக்கு காயங்கள் விளைவிப்பதில் முடிவுற்றது, அவ்வாறிருக்கையில் மேல்முறையீட்டாளர்-குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் முன்திட்டமிடுதல் ஏதுமில்லை என்றும், முழு சம்பவமும் திடீர்ச்சண்டையின் காரணமாகவே நடந்தது என்றும் மதிப்பீடு செய்வதற்கு உயர் நீதிமன்றம் தவறிவிட்டது மற்றும் உயர் நீதிமன்றம், இ.த.ச., பிரிவு 300-இன் விதிவிலக்கு 4-ஐ துணை கொண்டிருக்கவேண்டும் என்பதே சாட்சியத்திலிருந்து வெளிப்படும் எதிர்வாதமாகும்.

22. இ.த.ச., பிரிவு 300-இன் விதிவிலக்கு 4-ஆனது பின்வருமாறு எடுத்துரைக்கப்படுவதாவது:

விலக்கு 4 - குற்றவாளி, தகாத அனுகூலத்தை எடுத்துக்கொள்ளாதநிலையிலும் அல்லது கொடூரமான அல்லது அசாதாரணமான முறையில் நடந்து

கொள்ளாதநிலையிலும் ஒரு திடீர்த்தகராறில் உண்டான உணர்ச்சி வேகத்தில் ஏற்பட்ட திடீர்ச்சண்டையில் மரணம் விளைவிக்கும் குற்றத்தை முன்திட்டமிடுதலின்றிச் செய்தால், அது கொலைக்குற்றமாகாது.

23. இ.த.ச. பிரிவு 300-இன் விதிவிலக்கு 4-க்குரிய ஆக்கக்கூறுகளைக் குறித்து மறுப்புரை ஏதுமில்லை, பின்வரும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்படவேண்டும், அதாவது,

(i) சம்பவம் முன் திட்டமிடுதலின்றி;

(ii) திடீர்ச்சண்டையில்;

(iii) உணர்ச்சி வேகத்தில்;

(iv) திடீர்த்தகராறின் பேரில் மற்றும்

(v) குற்றவாளி தகாத அனுகூலத்தை எடுத்துக் கொள்ளாதநிலையிலும் அல்லது கொடூரமான அல்லது அசாதாரணமான முறையில் நடந்து கொள்ளாதநிலையிலும் நடந்திருக்க வேண்டும்.

24. **ஸ்ரீதர் புயான் -எதிர்- ஒரிசா மாநிலம் (2004) 11 எஸ்.சி.சி. 395 (ஏ.ஐ.ஆர். 2004 எஸ்.சி. 4100)** என்ற வழக்கில் கீழ்காணுமாறு தீர்மானிக்கப்பட்டதைக் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கலாம்:

இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 300-இன் விதிவிலக்கை செயற்படுத்துவதற்கு, முன்திட்டமிடுதலின்றி, திடீர்த்தகராறில் உண்டான உணர்ச்சி வேகத்தில் ஏற்பட்ட திடீர்ச்சண்டையில், குற்றவாளி தகாத அனுகூலம் எடுத்துக்கொள்ளாதநிலையில் அல்லது கொடூரமான அல்லது அசாதாரணமான முறையில் நடந்துகொள்ளாத



நிலையில் அச்செயலானது புரியப்பட்டது என்பதை நிலைநாட்டவேண்டும்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 300-இன் நான்காவது விதிவிலக்கானது, திடீர்ச்சண்டையில் புரியப்படும் குற்றச்செயல்களை உள்ளடக்குகிறது. மேற்சொன்ன விதிவிலக்கானது, முதல் விதிவிலக்கில் உள்ளடக்கப்படாத குற்ற வழக்கு நடவடிக்கையை விவாதிப்பதற்குட்பட்டே, அதற்குரிய நிலை மிகவும் பொருத்தமுடையதாக விளங்கும். அவ்விரண்டு விதிவிலக்குகளிலும் முன்திட்டமிடுதல் இல்லாததால் அவை ஒரே கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆயினும், விதிவிலக்கு 1-ஆனது முற்றிலும் சுயக் கட்டுப்பாட்டை இழக்கும் நிலைமையையும், அதே வேளையில் விதிவிலக்கு 4-ஆனது மனிதனின் நிதானத்தை மறைத்து அவர்கள் செய்யக்கூடாத செயல்களைச் செய்யுமளவிற்கு தூண்டும் உணர்ச்சி வேகத்தையும் குறித்து மட்டுமே விவாதிக்கிறது. விதிவிலக்கு 1-இல் உள்ளவாறே, விதிவிலக்கு 4-ம் ஆத்திரமூட்டல் குறித்து விவாதிக்கிறது; ஆனால் காயம் விளைவித்தல் என்பது ஆத்திரமூட்டலின் நேரடியான விளைவன்று. அடித்து தாக்கப்பட்டிருக்கலாம் அல்லது பிரச்சனையின் ஆரம்பத்தில் ஏதோ ஆத்திரப் பட்டிருக்கலாம் அல்லது எவ்விதத்தில் சண்டை ஆரம்பித்திருந்தாலும், இரு தரப்பினர்களின் பின்னிட்ட நடத்தையானது, குற்றத்தைப் பொறுத்தவரையில் அவர்களை சமஅளவிலேயே வைக்கிறது என்பதான நேர்வுகளை விதிவிலக்கு 4-ஆனது உள்ளபடியே கையாள்கிறது. "திடீர்ச்சண்டை" என்பது ஒருவருக்-கொருவர் ஆத்திரமடைந்து ஒவ்வொரு தரப்பும்

தாக்கிக்கொள்ளுதலைக் குறிப்பிடுகிறது. கொலை புரியப்பட்ட பின்னர், அதை ஒருசார்பான ஆத்திரமூட்டல் என்பதை தெளிவாகக் கண்டறியவோ அல்லது அத்தகைய நேர்வுகளில் முழு குற்றச்சாட்டையும் ஒரு தரப்பின்மேல் வைக்கப்படவோ இயலாது என்பது தெளிவாகிறது. அவ்வாறிருக்கும்பட்சத்தில், மிகவும் பொருந்தத்தக்க விதிவிலக்கானது, 1-ஆம் விதிவிலக்காக இருக்கும். சண்டையிடுவதற்கு முற்சிந்தனையோ அல்லது தீர்மானமோ இருக்காது. திடீர்ச்சண்டை நடந்ததற்காக ஏறக்குறைய இரு தரப்பினர்களுமே குற்றஞ்சாட்டப்படவேண்டியவர்கள். அவர்களுள் ஒருவர் அதை தொடங்கியிருந்தாலும், மற்றொருவர் அவரது சுயநடத்தையின்மூலம் நிலைமையை மோசமாக்கி இருக்காவிட்டால் அது கடுமையான விளைவினை ஏற்படுத்தக்கூடிய நிலையை அடைந்திருக்காது. ஒருவருக்கொருவர் ஆத்திரமடைந்து, நிலைமையை மோசமாக்கிவிட்டால், சண்டையிட்டவர் ஒவ்வொருவரையும் இணைக்கின்ற குற்றச்சாட்டின் பங்கினை பிரிப்பது கடினமானதாகும். இறப்பானது, (அ) முன்திட்டமிடுதலின்றி (ஆ) ஒரு திடீர்ச்சண்டையில் (இ) குற்றவாளி தகாத அனுகூலம் எடுத்துக்கொள்ளாமலும் அல்லது கொடூரமான அல்லது அசாதாரணமானமுறையில் நடந்திருக்காத நிலையிலும் (ஈ) சண்டையானது கொல்லப்பட்ட மனிதனுடன் ஏற்பட்டிருக்கவேண்டும் என்ற நிலையிலும் மரணம் விளைவிக்கப்பட்டிருந்தால், 4-ஆவது விதிவிலக்கின் உதவியைக்கோர இயலும். வழக்கினை விதிவிலக்கு 4-க்குள் ஒரு வழக்கைக் கொண்டுவருவதற்கு, அதில் குறிப்பிடப்பட்ட அனைத்து ஆக்கக்கூறுகளையும் அறிந்துகொள்ளவேண்டும். இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 300-இன் விதிவிலக்கு 4-இல் காணப்படும் "சண்டை" என்பது இந்திய தண்டனைச் சட்டத்தில் பொருள் வரையறுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு சண்டையிடுவதற்கு இருவர் தேவைப்படுகின்றனர். உணர்ச்சி வேகத்திற்கு தேவைப்படுவது, உணர்ச்சிகளைத் தணிப்பதற்கான அவகாசமிருக்கக்கூடாது என்பதாகும் மற்றும் இவ்வழக்கில் தரப்பினர்கள் ஆரம்பத்தில் வாய்ச்சண்டையிட்டதன் காரணமாக கோபமுற்றனர் என்பதாகும். சண்டை என்பது ஆயுதங்களுடனோ அல்லது ஆயுதங்களின்றியோ இருவருக்கும், அதற்கும் மேற்பட்டோருக்கிடையே நடக்கும் ஒரு யுத்தமாகும். எது திடீர்ச்சண்டையாகக் கருதப்படும் என்பது குறித்து பொதுவிதி ஏதும் தெளிவுபடக்கூற இயலாது. இது ஒரு பொருண்மை குறித்த பிரச்சனையாகும் மற்றும் சண்டை, திடீர் என்று ஏற்பட்டதா, இல்லையா என்பது ஒவ்வொரு வழக்கிலுமுள்ள மெய்ப்பிக்கப்பட்ட பொருண்மைகள்மீது இன்றியமையாதவகையில் சார்ந்திருக்கவேண்டும். விதிவிலக்கு 4-ஐப் பயன்படுத்துவதற்கு அங்கு திடீர்ச்சண்டை நடந்தது என்றும், அதற்கு முன்திட்டமிடுதல் ஏதுமில்லை என்பதைக் காண்பிப்பதும் போதுமானதன்று. குற்றவாளி தகாத அனுகூலம் எடுத்துக்கொள்ளவில்லை என்றோ அல்லது கொடூரமான அல்லது அசாதாரணமான முறையில் நடந்துகொள்ளவில்லை என்றோ மேலும் காண்பிக்கப்படவேண்டும். சட்டவகையத்தில் பயன்படுத்தப்பட்ட "தகாத அனுகூலம்" என்ற சொற்றொடர் "நேர்மையற்ற அனுகூலம்" என்று பொருள்படும்.



25. எனவே, கையிலுள்ள வழக்கின் ஒட்டுமொத்த சூழ்நிலைகளும், அங்கு திடீர் வாய்ச் சண்டை நடந்தது என்பதையும், வெளிப்படையாகவே இறந்தவரை தாக்குவதற்கான முன்திட்டமிடுதல் ஏதுமில்லை

என்பதையும் தெளிவாகக் காட்டுகிறது. இரு குடும்பத்தினருக்குமிடையே ஏற்கெனவே உரிமையியல் வழக்கு நிலுவையிலிருந்ததன் காரணமாக, ஒரு சிறிய வாய்ச்சண்டையானது திடீரென உடற்ரீதியான தாக்குதலாக பெரிதாகியது.

26. **கமிலோ வாஸ் -எதிர்- கோவா மாநில அரசு (2000) 9 எஸ்.சி.சி. 1 (ஏ.ஐ.ஆர். 2000 எஸ்.சி. 1374)** என்ற வழக்கில், சட்டத்தின் பிரிவு 304-இன் சுற்றெல்லையைக் குறிப்பிட்டு, இந்நீதிமன்றம் இதேபோன்ற சூழ்நிலைகளில் இவ்வாறாக தீர்மானித்ததாவது:

"இப்பிரிவு இரண்டு பகுதிகளையுடையது. இப்பிரிவை ஆராய்ந்து பார்க்கையில், இருவேறு சூழ்நிலைகளுக்கு இருவிதமான தண்டனைகளை வகைசெய்கிறது. (1) மரணம் விளைவிக்கின்ற ஒரு செயலானது மரணம் விளைவிக்கும் அல்லது அநேகமாக மரணம் விளைவிக்கக்கூடுமான அத்தகைய உடற்காயத்தை விளைவிக்கும் உட்கருத்துடன் செய்யப்படுமானால்; இங்கு "உட்கருத்து" என்பது முக்கியமான ஆக்கக்கூறாகும்; (2) அச்செயலானது, அநேகமாக மரணத்தை விளைவிக்கக்கூடும் என்று அறிந்தும், மரணம் விளைவிக்கும் அல்லது அநேகமாக மரணத்தை விளைவிக்கக்கூடிய அத்தகைய உடற்காயத்தை உட்கருத்தன்றி செய்திருப்பாராயின், ஒரு நபர், மற்றொரு நபரை, உடலின் உயிர்நிலையான பகுதியில் தடியால் தாக்குகிறபோது, தாக்குதலுக்குள்ளான அந்த நபர் மரணத்தைத் தழுவினாரெனில், அது



குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிந்தே செய்த செயலெனக் குறித்துரைக்கப்படவேண்டும். அச்சூழ்நிலையில், வழக்கு தற்போதைய வழக்கிலுள்ளவாறு இ.த.ச., பிரிவு 304-இன் பகுதி II-இன் கீழ் வரும்."

27. மீண்டும் இந்நீதிமன்றம் **தியோநாத் ராய் -எதிர்- பீகார் மாநில அரசு மற்றும் பலர், ஏ.ஐ.ஆர். 2017 எஸ்.சி. 5428**-இல் கருத்துரைத்ததாவது:

"வழக்கின் ஒட்டுமொத்த பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் மற்றும் பதிவாவணத்தில் உள்ள சான்றினையும் ஆராய்ந்தால், குற்றஞ்சாட்டப்பட்ட பரசுராம் ராய், வாளால் மோகன்ராயை தாக்கியதில்தான், அவரது தாக்குதலில் கடுமையான காயங்களடைந்து, இறுதியாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போதே மேற்படி காயத்தின் காரணமாக இறந்தவரான மோகன்ராய் இறந்துவிட்டார் என்பது தெளிவாகிறது.

இறந்துபோனவர் பிரச்சனைக்குரிய நிலத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த போதுதான் சம்பவம் நடந்தது மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் பக்கத்து நிலத்தில் நெல்மணிகளை விதைப்பதில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அங்கிருந்து அவர்கள், மோகன்ராய் தங்களின் நிலத்தை கடந்துச்செல்வதைப் பார்த்தனர். இறந்துபோனவரை கொலை செய்வதற்கு, குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் எந்த விதமான முன்திட்டமுமில்லை. ஆயினும்,

குற்றஞ்சாட்டப்பட்டவரான வகில் ராய் வந்து, மோகன் ராய்வுடன் சண்டையிட தொடங்கியபோது மற்ற குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்துகொண்டனர் என்று கண்ணுற்ற சாட்சிகள் சான்றுரைத்துள்ளனர். சண்டை முன்திட்டமின்றி திடீரென ஏற்பட்டதோடன்றி, அது வலுவடைந்து விட்டது. உயர் நீதிமன்றத்தால் சரியாக முடிவுசெய்தவாறு முழு சம்பவமும் திடீரென நிகழ்ந்து சற்று நேரத்திற்குள்ளாகவே கைமீறிச் சென்றுவிட்டது.

வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, உயர் நீதிமன்றம் இ.த.ச., பிரிவு 302 மற்றும் 302/149-இலிருந்து இ.த.ச., பிரிவு 304, பகுதி II-க்கு குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்திற்கான தீர்ப்பை மாற்றியதில் நியாயப்படுத்தப்பட்டாலும், அது குற்றஞ்சாட்டப்பட்டவரின் மீது குறைந்தபட்ச தண்டனை விதித்ததில் நியாயப்படுத்தப்படவில்லை..."

28. சடலக்கூறாய்வு நடத்திய அ.சா.5 மருத்துவர் அரவிந்த் கன்வரின் சாட்சியத்தை ஆராய்வது முக்கியமாகும். அவரது கூற்றின்படி, வலது காதுக்கு மேல் வலது மண்டையோட்டின் உச்சிப்பகுதியின் மீது 4" மற்றும் 10" அளவிலான வெட்டுக்காயமும், வலது ஆட்காட்டி விரலின்மீது 1" அளவிலான மற்றொரு வெட்டுக்காயமும் இருந்தது. "உச்சந்தலையில் உடைவு ஏதுமில்லை என்றாலும், மூளையில் குருதி உறைந்து காணப்பட்டது" என்று அவர் சான்றுரைத்துள்ளார்.



உச்சந்தலையிலுள்ள காயம் எண் 2-ஆனது மூளையில் குருதிப்போக்கு ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு "கொடுங்காயம்" என்று அவர் குறுக்கு விசாரணையில் ஓர் இடத்தில் குறிப்பிட்டிருந்தபோதும், இக்குறிப்பிட்ட பொருண்மையானது, சடலக்கூறாய்வு அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. அ.சா.5 அத்தகைய காயத்திற்கான காரணம் குறித்து குறிப்பிடுகையில், அது கூர்மையான பொருளால் தாக்கியதன் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும், உச்சந்தலைக்காயத்தின் ஆழமானது அப்பொருள் பயன்படுத்தப்படும் வேகத்தையும், வலிமையையும் பொறுத்ததாகும். அது, "உச்சந்தலைக் காயமேயன்றி", மண்டையோட்டு காயம் அல்ல என்ற நிலைப்பாட்டை அவர் கொண்டிருந்தார். மேலும், அவர் காயத்தை வகைப்படுத்துவதற்கு அவசியமானதான தலைக்காயத்தின் ஆழத்தை அளவிடவில்லை.

29. தலைக்காயமானது, மண்டை ஓட்டிற்கும், மூளைக்கும் இடையிலான குருதிப்போக்கினையும், மூளையின் உள் மற்றும் நடு உறை இடையிலான குருதிப்போக்கினையும் விளைவித்தது என்பதை நாம் குறித்துக்கொள்ளலாம். கையிலுள்ள வழக்கில் நிகழ்ந்துள்ளவாறு, பல நேர்வுகளில் அதனுடைய அந்த அறிகுறிகள் தென்படுவதற்கு சிலமணிநேரமாகலாம் (மோடியின் மருத்துவ சட்டவியல் மற்றும் நச்சூட்டாய்வியல் பாடநூல் 25-ஆவது பதிப்பு, பக்கம் 701) என்ற பொருண்மையை நாங்கள் அறிகிறோம். மேலும் அத்தகைய நேர்வுகளில் ஒரு விரிவான சடலக்கூறாய்வு அவசியமானதாக இருக்கலாம் என நாங்கள் அறிகிறோம் மற்றும் முந்தைய மருத்துவ விவரக்

குறிப்பு உளதாயிருப்பதையும், அதன் தகுதிப்பாட்டினை அறிவதும் முக்கியமாகும். இவ்வழக்கில், சடலக் கூறாய்வு நடத்திய மருத்துவரால் அளிக்கப்பட்ட பொதுக்கருத்து யாதெனில், இறந்தவருக்கு மருத்துவஞ்சார்ந்த பிரச்சனை ஏதும் உள்ளதா என்று அவர் தற்செயலாக விசாரித்திருந்தார் என்பதாகும். மேலும், மோடியின் மருத்துவ சட்டவியல் மற்றும் நச்சூட்டாய்வியல் என்ற பாடநூலிலிருந்து எடுக்கப்பட்ட பகுதியைக் குறிப்பிடுவது உகந்ததாகும், அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

வயது அல்லது நோய் காரணமாக, முன்னரே எளிதில் நோய்வாய்ப்படும் ஒரு நபருக்கு, தலையில் ஏற்படும் சிறுகாயமும் மூளையில் இரத்தப்போக்கை ஏற்படுத்தலாம் (அந்நூலில் பக்கம் 704-இல் உள்ளவாறு).

30. மேற்படி கருத்துரையானது, உச்சந்தலையின் மீதான காயம் எண் 2 குருதிப் போக்கை விளைவித்தது என்பதற்கு சரியான விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதைக் காண்பிக்க மேற்படி கருத்து விழைகிறது. மேலும், ஒரு கட்டுப்பாடற்ற சண்டையில் இறந்தவருக்கு அநேகமாக மரணத்தை விளைவிக்கும் என நன்கு அறிந்துதான் மேற்சொன்ன தாக்குதல் நடத்தப்பட்டது என்பதை தாக்குதலின் வேகமும் கடுமையும் சுட்டிக்காட்டுகிறது. அவர், இறந்தவருக்கு மரணத்தை விளைவிக்கும் உட்கருத்துடன் அத்தகையதொரு காயத்தை விளைவித்திருந்தால், அவர் தேவைக்கேற்ற வலிமையுடன் ஆயுதத்தை உபயோகப்படுத்தியிருக்கக்கூடும். மேலும் அத்தகையதொரு நேர்வில், கண்டிப்பாக அது மண்டை ஓட்டில் உடைவு ஏற்படுத்தும் அளவிற்கு ஓர் ஆழமான காயத்தை ஏற்படுத்தி



இருக்கக்கூடும். கையிலுள்ள வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை மதிப்பீடு செய்கையில், இந்நீதிமன்றம் இக்குறிப்பிட்ட அம்சத்துடன் சிறிது ஒத்துப்போவதைக் காட்டுவதற்கு கடமைப்பட்டுள்ளது.

31. கையிலுள்ள வழக்கைப் பொறுத்தவரையில், மரணம் திடீர் என்று ஏற்பட்டதல்ல என்றாலும், இறந்தவர், குருதிப்போக்கின் காரணமாக சிறிது நேரங்கழித்து இறந்துவிட்டார். குற்றஞ்சாட்டப்பட்ட குழுவைச் சேர்ந்த பல நபர்கள் ஆயுதங்களால் இறந்தவரை தாக்கியிருக்கிறபோது, இரண்டு காயங்கள் மட்டும் காணப்படுவது, அதுவும், இரண்டு சாதாரணமான காயங்கள் மட்டுமே விளைவிக்கப்பட்டுள்ளன என்பது வியப்புக்குரியதாகும். இயல்பாகவே, அத்தகையதொரு, சாதாரண காயம் சிறிது நேரம்/நாட்கள் கழித்து மரணத்தை விளைவிக்கக்கூடியதாக மாறிவிடுகிறது. மேல்முறையீட்டாளர், இறந்தவரின் உச்சந்தலையில் காயத்தை விளைவிக்க அவரால் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் அவருக்கு மரணத்தை விளைவிக்கலாம் என்று அறிந்திருந்தாலும், அவருக்கு மரணம் விளைவிக்கும் உட்கருத்து ஏதுமில்லை என்று இச்சூழ்நிலை வெளிப்படுத்துகிறது. மரணத்தை விளைவிக்கும் அல்லது அநேகமாக மரணத்தை விளைவிக்கக்கூடிய, அத்தகைய உடற்காயத்தை விளைவிக்கும் உட்கருத்து ஏதுமில்லாத நிலையில் குற்றம், இ.த.ச., பிரிவு 300-இன் வரம்பிற்குட்படாது, ஆனால் அது இ.த.ச., பிரிவு 304-இன் பகுதி II-இன் கீழ் வரும்.

32. எனவே, மேல்முறையீட்டாளர்களான மனோஜ் குமார், ரங்கீல் சிங் மற்றும் சுரிந்தர் சிங் ஆகியோர் இ.த.ச., பிரிவு 304 பகுதி II-இன் கீழ்

தண்டிக்கத்தக்க குற்றத்திற்கான குற்றவாளிகளாவரேயன்றி, இ.த.ச., பிரிவு 300-இன் கீழான குற்றத்திற்காக அல்ல என்று நாங்கள் தீர்மானிக்கிறோம். ஆகவே, இ.த.ச., பிரிவு 302-இன் கீழான அவர்களின் குற்றத்திற்கான தீர்ப்பு நீக்கறவு செய்யப்படுகிறது. அதற்கிணங்க குற்றத்திற்கான தீர்ப்பை மாற்றியமைக்கையில், மேல்முறையீட்டாளர்கள் பத்தாண்டு கால கடுங்காவல் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி தண்டனையளிக்கப் படுகின்றனர். ஆயினும், மேல்முறையீட்டாளர்கள், இதுவரை 11½ ஆண்டுகளுக்கு மேலாக ஏற்கெனவே சிறைத்தண்டனை அனுபவித்துள்ளதாக எங்களுக்கு தெரிவிக்கப்பட்டதன் விளைவாக, மேல்முறையீட்டாளர்கள், வேறு எந்த வழக்கிற்கும் தேவைப்படாவிட்டால் அவர்களை உடனடியாக விடுவிக்கும்படி உத்தரவிடப் படுகின்றது.

33. அதன்படி, மேற்சொன்ன நிபந்தனைகளுடன் இம்மேல்முறையீடுகள் முடிக்கப்படுகின்றன.

... அதன்படி உத்தரவிடப்படுகிறது

⌘❖⌘❖⌘



# இந்திய உச்ச நீதிமன்றம்

2018-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ஆம் நாள்

## முன்னிலை

**நீதியரசர் திரு. என்.வி. இரமணா**
**மற்றும்**
**நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்**

குற்றவியல் மேல்முறையீடு எண் **381/2018**

(குற்றவியல் மேல்முறையீடு (எம்.டி.) எண் 298/2013-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரை நீதியராயத்தால் வழங்கப்பட்ட 23.01.2015-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் இறுதி உத்தரவிலிருந்து)

(சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண் 9297/2016-இலிருந்து எழுகிறது)

சுதாகர் என்கிற சுதர்சன்
... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

தமிழ்நாடு மாநில அரசு சார்பாளராக
காவல்துறை ஆய்வாளர்,
ஸ்ரீரங்கம் காவல் நிலையம்,
திருச்சி, தமிழ்நாடு.
... எதிர்மேல்முறையீட்டாளர்

**2018-2-லா வீக்லி (கிரி.) 148**

**இ.த.ச.,** பிரிவு 302, சாட்சிகள், வேறுபாடு குறித்து.

**குற்ற விசாரணை**/ சாட்சி, 'உறவுமுறையானது' 'அக்கறைகொண்டது'; வேறுபாடு.

வேற்றிட வாதம் - சாட்சிகள், தங்களுடைய முதல் விசாரணையில், அரசுத்தரப்பு வழக்கை மறுத்தல். (பத்தி 14)

அ.சா.1 மற்றும் 5-ஆவது சாட்சிகள், குற்றம் சாட்டப்பட்டவரான மேல்முறையீட்டாளருக்கு நெருங்கிய உறவினர்கள் - குற்றஞ்சாட்டப்பட்டவரான மேல்முறையீட்டாளருக்கும், அ.சா.1 மற்றும் 5-க்குமிடையிலான உறவானது, செயற்கைத்தனமானது, விளைவு குறித்து. (பத்தி 16)

உறவுமுறையான மற்றும் அக்கறைகொண்ட சாட்சிகளின் சாட்சியம் - மதிப்பிடுதல், வரம்பு. (பத்தி 17)

உறவுமுறையான சாட்சிக்கும், அக்கறைகொண்ட சாட்சிக்குமிடையிலான வேறுபாடு - உறவுமுறையான சாட்சி, "அக்கறைகொண்ட" சாட்சிக்கு இணையானவரல்லர் - சாட்சியானவர், ஆணோ அல்லது பெண்ணோ, ஓர் உரிமை வழக்கின் தீர்ப்பாணையிலோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படுவதைக் கண்டோ, ஏதோ சில ஆதாயமடைபவராக இருப்பின், அவர் "அக்கறை கொண்ட சாட்சியென அழைக்கப்படுவார் - அரசுத்தரப்பு வழக்கானது தனிப்பட்ட சாட்சிகளால் ஆதரிக்கப்படாததால், நியாயமான ஐயப்பாடு - அ.சா.1 மற்றும் 5-இன் மீதான நம்பகத்தன்மையில் நம்பிக்கையின்மை. (பத்தி 18)



**பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்:**

1. சர்வன் சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு, (1976 (4) எஸ்.சி.சி. 369).
2. லத்தேஷ் -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு, (குற்றவியல் மேல்முறையீடு எண் 1301/2015, 2018-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30-ஆம் நாள் முடிவு செய்யப்பட்டது)

## தீர்ப்புரை

**நீதியரசர் திரு. என்.வி. இரமணா:**

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. குற்றவியல் மேல்முறையீடு (எம்.டி.) எண் 298/2013-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரை நீதியராயம், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கு இணங்க, குற்றஞ்சாட்டப்பட்டவர்/மேல்முறையீட்டாளரால், இ.த.ச., பிரிவு 302-இன் கீழான அவரது தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்து, உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட, 2015-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23-ஆம் நாளிட்ட தீர்ப்புரையை எதிர்த்து, இம்மேல்முறையீடானது தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

3. அரசுத்தரப்பினால் முன்வைக்கப்பட்ட பொருண்மைகளின் சுருக்கம் யாதெனில், இங்குள்ள மேல்முறையீட்டாளர், குடிப்பழக்கமுடையவர்; அவர், தன்னுடைய பாட்டி வீட்டின் எதிரில் வசித்து வந்தார்;

எப்பொழுதும் அவரிடம் பணம் கேட்டு சண்டையிடுவார். இச்சம்பவமானது, 2013-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 17-ஆம் நாளன்று மாலை சுமார் 06.30 மணியளவில் நிகழ்ந்துள்ளது. மேல்முறையீட்டாளர், தன்னுடைய பாட்டியான மாரியாயி (மரணமடைந்தவர்)-இன் கழுத்தை, தன்னுடைய கைகளால் நெரித்துக்கொண்டிருந்தபோது, மரணமடைந்தவரின் அலறலைக் கேட்டு பக்கத்து அறையில் உறங்கிக் கொண்டிருந்த, மரணமடைந்தவரின் மருமகனான ஜெயராஜ்-அ.சா.1 என்பவர், அங்கு ஓடிச் சென்று பார்த்தபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரது பாட்டியிடம் குற்றம் புரிந்துகொண்டிருப்பதைக் கண்டார். மேல்முறையீட்டாளர் பின்னர் மரணமடைந்தவரிடமிருந்த சுருக்குபையை (பணப்பையை) எடுத்துக்கொண்டு, அங்கிருந்து ஓடிவிட்டார்.

4. ஜெயராஜ் (அ.சா.1) ஓர் ஆட்டோவை வாடகைக்கு எடுத்து, தன்னுடைய மாமியாரை ஏ.பி.சி. மருத்துவமனைக்கு கொண்டுசென்றதோடு, சம்பவத்தைப்பற்றி தன்னுடைய மனைவியான மருதாயிடமும் (அ.சா.5) தொலைபேசியில் தகவல் அளித்தவுடன், அ.சா.5-ம் மருத்துவமனையை அடைந்தார். பாதிக்கப்பட்டவர், மாலை 7.30 மணியளவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் மற்றும் மருத்துவர் முகமது கவுஸ் கான் (அ.சா.8) பாதிக்கப்பட்டவரைப் பரிசோதித்து பார்த்ததில், அவர் சுயநினைவுடன் இருந்தாரேயன்றி அமைதியற்றவராகக் காணப்படுவதை அறிந்தார். மாரியாயி மாலை 7.55 மணியளவில் மரணமடைந்துவிட்டார். ஜெயராஜ் (அ.சா.1) இரவு சுமார் 11.30 மணியளவில், ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் குற்றமுறையீட்டைத் தாக்கல் செய்தார், அதன் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கெதிராக குற்ற



எண் 22/2013 பதிவுசெய்யப்பட்டது. அ.சா.15-காவல் துறை ஆய்வாளர் (பாலுசாமி), மு.த.அ.-ஐ (அ.சா.ஆ.12) நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து, சம்பவம் நடந்த இடத்தை ஆய்வுசெய்தார். அதன்பிறகு, பார்வை மகசர் (அ.சா.ஆ.2) தயார் செய்தல், மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.13) வரைதல், போன்ற பிற விதிமுறைகளும், பிரேத விசாரணையும் செய்யப்பட்டு, பிணம், சடலக் கூறாய்விற்காக அனுப்பிவைக்கப்பட்டது. இதற்கிடையில், குற்றஞ்சாட்டப்பட்டவர்-மேல்முறையீட்டாளர், காவலிலெடுக்கப்பட்டு, அவருடைய ஒப்புதலுரையைப் பதிவுசெய்தபின்னர், காவல்துறையானது, அவர் வசமிருந்த சுருக்குப்பையைக் (பணப்பை)-(சா.பொ.1) கைப்பற்றினர்.

5. இறந்தவரான மாரியாயின் சடலத்தின்மீது மருத்துவர் ஆர்.வி.எஸ். ரேணுகா தேவி (அ.சா.9) அவர்களால் சடலக் கூறாய்வு நடத்தப்பட்டு, அவரது உடலில் வெவ்வேறு அளவிலான வரிகோடுகள், முன்கழுத்தில் அடிப்பட்ட காயமும், குரல்வளை குருத்தெலும்பிலும், மூச்சுக்குழல் வளையங்களிலும் முறிவு, முன்மார்பு சுவரில் கன்றிய காயங்கள், இடது தோள்பட்டையிலும், 4-ஆவது விலாவெலும்பு இணைந்திருக்கும் இடத்தில் குறுக்காக உள்ள மார்பெலும்பிலும் முறிவு ஏற்பட்டிருப்பதுடன், அதனைச் சுற்றியுள்ள பகுதியில் கன்றிய காயங்களையும் கண்டறிந்தார். "மரணமடைந்தவர், கழுத்தை நெரித்ததாலும், மார்பு காயங்களாலும் இறந்திருப்பதாக தோன்றுகிறது என மருத்துவர் கருத்து தெரிவித்துள்ளார்.

6. குற்றஞ்சாட்டப்பட்டவரான மேல்முறை-யீட்டாளர், தான் குற்றம் புரிந்ததான குற்றச்சாட்டை

மறுத்து, விசாரணை நடத்துமாறு கோரினார். குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்கும்பொருட்டு, அரசுத்தரப்பு அதிகபட்சமாக 15 சாட்சிகளை விசாரித்து 16 சான்றாவணங்களைக் குறியீடு செய்தது. அவ்வாறிருக்கையில், குற்றஞ்சாட்டப்பட்டவர், தன்னுடைய எதிர்வாதத்தில், தன்னுடைய மாமியார் மாலாவை பி.சா.1-ஆக விசாரித்து, ஆவணமேதும் குறியீடு செய்யவில்லை. எனினும், அங்கு இரண்டு சான்றுப்பொருட்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று, சுருக்குப்பை (பணப்பை), மற்றொன்று, தொகை ரூ.140/- ஆகும், அவை இரண்டும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் வசமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

7. விசாரணை நீதிமன்றமானது, அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், குறிப்பாக அ.சா.1 மற்றும் அ.சா.5-இன் சாட்சியங்களின்மீது சார்வுற்று, குற்றம் சாட்டப்பட்டவர், தன்னுடைய பணத் தேவையைப் பூர்த்தி செய்யக்கோரி, அடிக்கடி மரணமடைந்தவருடன் தகராறு செய்துவந்தார் என்றும், குற்றம் புரிவதற்கான உட்கருத்து கொண்டிருந்தார் என்றும் முடிவுக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து, குற்றஞ்சாட்டப்பட்டவர், மரணமடைந்தவரின் வீட்டிற்கு வந்து, அவருடைய கழுத்தை நெரித்து, கீழே தள்ளியதால் மரணமடைந்தவர், மூச்சு திணறலால் அவதியுற்று, தனது மார்பு சுவற்றிலும் விலா எலும்புகளிலும் காயங்களடைந்தார். மேலும், மரணமடைந்தவர், கழுத்து நெரிக்கப்பட்டதாலும் மார்பில் காயங்களடைந்ததாலும் மரணமடைந்தார் என்பதை பதிவாவணத்திலுள்ள மருத்துவச்சான்றானது, தெளிவாக நிலைநாட்டியுள்ளதாக முடிவு செய்தது. எனவே, சாட்சிகளின் சாட்சியங்களிலுள்ள சிறு குறைபாடுகள், அரசுத்தரப்பு வழக்கைப் பாதிக்காது என்றும், மேல்முறையீட்டாளர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் கொலைக்குற்றம் புரிந்த குற்றவாளி என்றும், விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதற்கிணங்க விசாரணை நீதிமன்றமானது, குற்றஞ்சாட்டப்பட்டவரான மேல்முறையீட்டாளரை, இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டனைத் தீர்ப்பளித்து, ஆயுள் தண்டனை அனுபவிக்கவும், ரூ.1,000/- அபராதம் செலுத்தவும், அபராதம் செலுத்தத் தவறினால், மேலும் ஆறு மாத காலத்திற்கு கடுங்காவல் சிறைத்தண்டனையை அனுபவிக்கவும் தண்டனை விதித்தது.



8. பாதிப்படைந்த மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டில் உயர் நீதிமன்றத்தை அணுகியதில், "கற்றறிந்த விசாரணை நீதிபதியால் விதிக்கப்பட்ட குற்ற மற்றும் தண்டனைத் தீர்ப்பு, தண்டனை வகையங்களுக்கு உட்பட்டே உள்ளது. அதில் குறைபாடேதுமில்லை" என்ற கருத்துடன், அதை தள்ளுபடி செய்தது. எனவே, குற்றம் சாட்டப்பட்டவர், இம்மேல்முறையீட்டின்மூலமாக எங்கள் முன்புள்ளார்.

9. நாங்கள், தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களைக் கேட்டு, பதிவாவணத்தில் உள்ள சான்றாதாரங்களைப் பார்வையிட்டோம்.

10. குற்றஞ்சாட்டப்பட்டவர்/மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர், உறுதியாக வாதிட்டதாவது: அரசுத்தரப்பு வழக்கானது, முற்றிலும் சான்றாதார முறைகேடுகளையும் சாட்சிகளால் கொடுக்கப்பட்ட முரண்பட்ட சான்றுரைகளையும் கொண்டிருந்தபொழுதிலும், மேல்முறையீட்டாளருக்கு தண்டனைத் தீர்ப்பளித்ததன் மூலம், கீழமை நீதிமன்றங்கள் தவறிழைத்துவிட்டன என்பதாகும். குற்றஞ்சாட்டப்பட்டவர், சம்பவம் நடந்த சமயத்தில்,

அவருடைய பாட்டியின் வீட்டில் இல்லை, அவர் அவருடைய மாமியார் வீட்டில்தான் இருந்தார். 17.01.2013 அன்று இரவு 11.00 மணியளவில் அங்கிருந்துதான், காவல் துறையினர் அவரை விசாரணைக்காக அழைத்துச்சென்றனர் என்று பிறிதோர் இடத்திலிருந்ததாகக்கூறும் மேல்முறையீட்டாளரின் சம்பவ மறுப்பு வாதத்தை நம்பாமல் கீழமை நீதிமன்றங்கள் வெளிப்படையாகத் தவறிழைத்துவிட்டன எனக் கற்றறிந்த வழக்குரைஞர் சுட்டிக்காட்டினார். அரசுத் தரப்பு உட்கருத்து என்ற பகுதியையும் வெற்றிகரமாக நிலைநாட்டவில்லை எனக் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார். ஆனால், அரசுத்தரப்பு சாட்சிகளின் மிகைப்படுத்தப்பட்ட கூற்றுகளின் அடிப்படையில், கீழமை நீதிமன்றங்கள், மேல்முறையீட்டாளருக்கு தண்டனைத் தீர்ப்பளித்துவிட்டன. அனைத்து அரசுத்தரப்பு சாட்சிகளும், குறிப்பாக, அ.சா.1 மற்றும் அ.சா.5, சொத்து பிரிவினைத் தொடர்பாக, மேல்முறையீட்டாளருடன் காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்ததாலும் மற்றும் மேல்முறையீட்டாளரின் சொத்தைப் பறிக்கும் எண்ணங்கொண்டு, அவரை ஒழித்துவிட விரும்புவதாலும் அவர்கள் அக்கறை சாட்சிகளாவர். அக்கருத்தை மனதிற்கொண்டு, அ.சா.1 மற்றும் அ.சா.5, குற்றம் சாட்டப்பட்டவரை குற்றத்துடன் இணைத்துவிட்டதால், அது, கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்கு பெறுவதினின்று, அவரை அருகதையற்றவராக்கிவிடும்.

11. மேலும் வாதிடப்பட்டதாவது, சாட்டுரைக்கப் பட்ட குற்றத்திற்கு, தனிப்பட்ட சாட்சி ஏதுமில்லை என்றும், அ.சா.1-இன் கீழ் குற்றமுறையீடு தாக்கல் செய்ததிலான காலதாமதத்திற்கும் மற்றும் மு.த.அ., குற்றவியல் நடுவரை சென்றடைந்ததிலான காலதாமதத்திற்கும்



திருப்திகரமான விளக்கம் இல்லை. கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, 3 மற்றும் 4 அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்கவில்லை. தன்னுடைய தாயார், (மரணமடைந்தவர்) வீட்டில் கீழே விழுந்துகிடந்த-தாகவும், அதனால் மூர்ச்சையாகிவிட்டதாகவும் மரணமடைந்தவரின் மகளான அ.சா.5-ஆல் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது, அக்கூற்று விபத்து பதிவேட்டில் 'விழுதல் என்ற நிகழ்வு' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு உரியவகையில் சான்றளிக்கிறது. பின்னர், நீதிமன்றத்தின் முன்பாக, அ.சா.5 அவ்வாறு கூறியதை மறுத்து, மேல்முறையீட்டாளரை குற்றத்துடன் இணைக்கும் பொருட்டு, தன்னுடைய வாக்குமூலத்தை மாற்றிவிட்டார். சடலக் கூறாய்வறிக்கையின்படி, மரணமடைந்தவரின் உடலின்மீது விலாவெலும்பிலும், இடது தோள்பட்டை எலும்பிலும், மேலும் மேல்மார்பெலும்பிலும் முறிவுகள் இருந்தன. அது கழுத்து நெரிப்பு என்ற நிகழ்வை ஆதரிக்கவில்லை, ஆனால், அது, அ.சா.5-ஆல் மருத்துவரிடம் கூறப்பட்டவாறு, விழுதல் என்ற நிகழ்வை ஆதரிக்கின்றது என்ற அம்சத்தை மிகவும் வலியுறுத்தினார். கற்றறிந்த வழக்குரைஞர், தன்னுடைய வாதங்களின் முடிவாக, அரசுத்தரப்பு வழக்கில் அனைத்து முரண்பாடுகளும் இருந்தபொழுதிலும், கீழமை நீதிமன்றங்கள் அவற்றிற்கும்மேலே சென்று, மேல்முறையீட்டாளருக்கு தண்டனை விதித்தன மற்றும் அத்தீர்ப்புரையானது, இந்நீதிமன்றத்தால் நீக்கறவு செய்யப்படுவதற்குரியதாகும் எனப் பணிந்துரைத்தார்.

12. அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், தன்னுடைய வாதங்களை முன்வைக்கையில், கீழமை நீதிமன்றங்கள் இரண்டும், மேல்முறையீட்டாளரை குற்றவாளி என ஒருங்கிணைவாக

கண்டறிந்திருக்கையில், இந்நீதிமன்றத்தின் குறுக்கீட்டைக் கோரும் வழக்கு, மேல்முறையீட்டாளரால் நிரூபிக்கப் படவில்லை என வாதிட்டார். அவருடைய கூற்றின்படி, குற்றஞ்சாட்டப்பட்டவர், குடிப்பழக்கமுடையவர் மற்றும் அடிக்கடி தன்னுடைய பாட்டியாருடன் (மரணமடைந்தவர்) பணம் கேட்டும், சொத்தை மாற்றித்தருமாறு கேட்டும் சண்டையிடுவது வழக்கம். சம்பவத்தினத்தன்றுங்கூட, குற்றஞ்சாட்டப்பட்டவர், மரணமடைந்தவருடன் காலை சுமார் 11.00 மணியளவில் சண்டையிட்டார் மற்றும் அ.சா.1, அவரை அமைதியாக வெளியே அனுப்பி வைத்தார். மீண்டும் அன்று மாலையிலேயே, அ.சா.1, அவருடைய வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபொழுது, குற்றஞ்சாட்டப்பட்டவர், உள்ளே நுழைந்து, குற்றம் புரிந்துவிட்டார். விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும், சம்பவத்திற்கு கண்ணுற்ற சாட்சியாக விளங்கிய அ.சா.1-இன் ஒருமித்த, உறுதிவாய்ந்த சாட்சியத்துடன் இணைந்த உறுதியூட்டப்பட்ட மருத்துவ சாட்சியத்தையும் சரியாகவே சார்ந்துநின்று, காரண விளக்கத்துடன்கூடிய உத்தரவின்மூலம், குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு தண்டனைத் தீர்ப்பளித்தன. குற்றஞ்சாட்டப் பட்டவரின் வசமிருந்து கைப்பற்றப்பட்ட சுருக்குப்பை (பணப்பை)-ஆனது, குற்றம் புரியப்பட்டதையும், அரசுத்தரப்பு வழக்கையும் மெய்ப்பிக்கிறது என்றும், குற்றஞ்சாட்டப்பட்டவர், பி.சா.1-இன் மூலம் பிறிதோரிடத்திலிருந்ததாக எதிர்வாதத்தை முன்வைத்திருந்தபொழுதும், எதிர்த்தரப்பு தனது முயற்சியில் வெற்றிபெறவில்லை என்றும், குற்றம் சாட்டப்பட்டவர், பி.சா.1-இன் வீட்டிலிருந்து, காவலர்களால் பிடிக்கப்பட்டார் என்பதை உறுதிப்படுத்தவோ மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர், பேருந்து நிலையத்திலிருந்து



கைது செய்யப்பட்டார் என்னும் அரசுத்தரப்பு வழக்கை பொய்யாக்க, அவர்கள் எடுத்த முயற்சியில் புலனாய்வு அலுவலரிடம் ஒரு வினாவையோ அல்லது கருத்துரையோ வைக்கவில்லை.

13. இரு தரப்பினர்களின் பணிந்துரைகளின் துணைகொண்டு கவனமாகப் பரிசீலித்ததன்பேரிலும், பதிவாவணத்திலுள்ள சான்றாதாரங்களைப் பார்வையிட்ட பிறகும், பரிசீலனைக்குரிய வினாவானது, "இரு கீழமை நீதிமன்றங்களும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டனைத் தீர்ப்புரைத்தது சரியா?" என்பதாகும்.

14. 18.01.2013 அன்று காலை சுமார் 11.00 மணியளவில், குற்றஞ்சாட்டப்பட்டவர், பேருந்து நிலையத்தில், அ.சா.11 மற்றும் 12-இன் முன்னிலையில் கைது செய்யப்பட்டார் மற்றும் வேறு இடத்திலிருந்ததாக, பி.சா.1-இன் சாட்சியத்தின் மூலம், குற்றஞ்சாட்டப் பட்டவரால் தக்க ஆதாரத்துடன் முன்வைக்கப்பட்ட வாதம் ஒதுக்கப்பட்டது என்ற அரசுத்தரப்பு கூற்றே, கீழமை நீதிமன்றங்கள் இரண்டும், குற்றஞ்சாட்டப் பட்டவரை தண்டித்ததற்கான ஒட்டுமொத்த காரணமாகும் எனத் தோன்றுகிறது. இவ்விரு சாட்சிகளும் (அ.சா.11 மற்றும் 12), தங்களது முதல் விசாரணையில், தங்களின் முன்னிலையில், குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டு, அவர் வசமிருந்த சான்றுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்ற அரசுத்தரப்பு கூற்றை மறுத்து விட்டனர் மற்றும் அவர்கள் பிறழ் சாட்சிகளாயினர் என்பதைக் குறிப்பிடுவது உகந்ததாகும். இப்பொருண்மை, குற்றஞ்சாட்டப்பட்டவரை கைது செய்தது குறித்த அரசுத்தரப்பு வழக்கின்மீது கடும் ஐயப்பாட்டை பதிக்கிறது.

15. ஒப்புக்கொண்டவகையில், சாட்டுரைக்கப்பட்ட சம்பவ நேரத்தில், குற்றம் நிகழந்ததாகக் கூறப்படும் இடத்திற்கருகே, அ.சா.5 (அ.சா.1-இன் மனைவி) மற்றும் அ.சா.6 (அ.சா.1 மற்றும் 5-இன் மகன்) ஆகியோர் இல்லை. தனிப்பட்ட சாட்சிகளின் (அ.சா.2, 3 மற்றும் 4) சாட்சியத்தைப் பொறுத்தவரையில், அவர்கள், மரணமடைந்தவர் வசித்துவரும் தெருவில் வசித்து வந்தவர்களும், கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டவர்களுமாவர், அ.சா.2 (அ.சா.5-இன் வாடகைதாரர்) பிறழ் சாட்சியாக மாறி, அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்கவில்லை. அவர் சான்றுரைத்ததாவது, 17.01.2013 அன்று மாலை 07.00 மணியளவில், மரணமடைந்தவரின் வீட்டின் முன்பு கொஞ்சம் கூட்டம் கூடியிருப்பதைக் கண்டு, அவர் அங்கு விரைந்துசென்று பார்த்தபோது, மரணமடைந்தவர், சுயநினைவற்ற நிலையில் இருந்ததைக் கண்டார். பின்னர், அவர் அ.சா.3 மற்றும் 4 உடனிணைந்து, மரணமடைந்தவரை ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றனர் மற்றும் அது குறித்து, அ.சா.1 மற்றும் 5-க்கு தகவலளித்தனர், அவர்கள், மரணமடைந்தவரை, ஏ.பி.சி. மருத்துவமனைக்கு கொண்டுவருமாறு அவர்களை கேட்டுக்கொண்டனர்; அங்கு அ.சா.1 மற்றும் 5, அவர்களுடன் பின்னர் சேர்ந்துகொண்டனர். அவரது குறுக்கு விசாரணையில், சம்பவ நாளன்று அ.சா.1, ஸ்ரீரங்கத்தில் இல்லை எனக் கூறினார். அ.சா.3 மற்றும் 4-ங்கூட பிறழ் சாட்சிகளாக மாறி, அவர்களாலும் அதே கூற்றுகள்தான் உரைக்கப்பட்டன. அரசுத்தரப்பு வழக்கில் மற்றொரு குறைபாடு யாதெனில், அ.சா.1, காவல் துறையினரிடம் வாய்மொழியில் முறையிட்டதாக



சான்றுரைத்துள்ளார், ஆனால், அ.சா.15 புலனாய்வு அலுவலர், தான் அ.சா.1-யிடமிருந்து எழுத்துமூல முறையீட்டைப் பெற்றதாக, ஒரு முரண்பட்ட கூற்றை முன்வைத்தார்.

16. மேற்கூறப்பட்ட பொருண்மைகளிலிருந்து, அரசுத்தரப்பின் ஒட்டுமொத்த வழக்கும், குற்றம் சாட்டப்பட்டவரும்/மேல்முறையீட்டாளருமானவரின் நெருங்கிய உறவினர்களான அ.சா.1 மற்றும் 5-இன் சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது எனத் தோன்றுகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர் அ.சா.5-இன் சகோதரனின் மகனேயன்றி வேறு யாருமல்ல மற்றும் அ.சா.1, அ.சா.5-இன் கணவராவார். அ.சா.6, அ.சா.1 மற்றும் 5-இன் மகனாவார். அ.சா.1, 5 மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்/மேல்முறையீட்டாளருக்கிடையிலான உறவில் சொத்து பிரச்சனையால் விரிசல் ஏற்பட்டு, அவர்கள் பகைவர்களாயிருந்தனர் என்பது தெளிவாகிறது. அவர்களுக்கிடையில், சொத்துகளின் பாகப்பிரிவினைக்கான உரிமையியல் வழக்கும் நிலுவையிலிருந்தது என்பதும் தெளிவாகிறது.

17. உறவுமுறை சாட்சி மற்றும் அக்கறை கொண்ட சாட்சிகளின் சாட்சியம் தொடர்பான சட்ட நிலைப்பாடு கவனிப்பதற்குரியதாகும். **சர்வன் சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு (1976 (4) எஸ்.சி.சி. 379), பத்தி 10** என்ற வழக்கில், இந்நீதிமன்றம் இவ்வாறாக கருத்து தெரிவித்ததாவது:

> "...... அக்கறைகொண்ட சாட்சியின் சாட்சியமானது, எக்குறைபாட்டினாலும் பாதிப்படைவதில்லை, அப்படியிருக்க,

> நீதிமன்றங்களுக்கு தேவைப்படுவது, அறிவுபூர்வமான விதியேயன்றி, சட்ட விதியல்ல, அத்தகைய சாட்சிகளின் சாட்சியமானது, சற்று கவனத்துடன் ஆய்வு செய்யப்படவேண்டும். நீதிமன்றமானது அந்த அணுகுமுறையை மேற்கொண்டு, அக்கறைகொண்ட சாட்சியின் சாட்சியமானது, உண்மையின் வளையத்திற்குள் இருப்பதாக திருப்தியுறுமானால், அத்தகைய சாட்சியமானது, உறுதியூட்டப்படாமலே நம்பப்படலாம்."

அக்கறைகொண்ட சாட்சிகளின் சாட்சியமானது, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடாது என்றும், அவர்களை சாட்சிகளாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் கடினமான விதி ஏதுமில்லை என்பது அறுதியிடப்பட்ட சட்டமாகும். ஆனால், அவ்வழக்குகளில் நீதிமன்றங்கள்மீது பதியவைக்கப்படும் ஒரே பொறுப்பு யாதெனில், குற்றத்தில் பொய்யாகப் பிணைக்கும் சாத்தியத்தன்மையை விலக்குவதற்கான சான்றினை மதிப்பீடு செய்கையில், நீதிமன்றங்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்பதாகும். எப்பொழுதும் தனிப்பட்ட சாட்சியைப் பெறுவது சாத்தியமில்லாததால், உறவுமுறையானது, சாட்சியின் நம்பகத்தன்மையை பாதிக்கும் காரணியாக ஒருபோதும் இருக்கக்கூடாது.

18. பின்னர், 'உறவுமுறை சாட்சிக்கும், அக்கறைகொண்ட சாட்சிக்கும் என்ன வேறுபாடு?' என்ற வினா அடுத்து எழுகிறது. "உறவுமுறை சாட்சி", "அக்கறைகொண்ட சாட்சி"-க்கு சமமாகாது என, "உறவுமுறை சாட்சி", "அக்கறைகொண்ட சாட்சி" என்ற வாதங்கள், இந்நீதிமன்றத்தால் சுருக்கமாக விளக்கப்பட்டு



உள்ளது. ஓர் உரிமையியல் வழக்கில், ஓர் ஆணோ அல்லது பெண்ணோ தீர்ப்பாணையின் விளைவாக, அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்படுவதை கண்டு ஆதாயமடைபவரே, "அக்கறைகொண்ட சாட்சி" எனப்படுவர். கையிலுள்ள இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் 5 'உறவுமுறை சாட்சி' என்பதோடன்றி, அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்/மனுதாரர் தண்டிக்கப்படுவதில் நிதி ஆதாயம் பெறுபவர்களாக இருப்பதால், "அக்கறைகொண்ட சாட்சிகளுமாவர்". [பார்வையிடுக: **உத்தரபிரதேச மாநில அரசு -எதிர்- கிஷன்பால் மற்றும் பலர் (2008) 16 எஸ்.சி.சி. 73**]. அரசுத்தரப்பானது, அக்கறைகொண்ட சாட்சிகளின் சான்றை சார்ந்திருப்பதால், இவ்வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் அத்தகைய சான்றை ஆய்வுசெய்கையில், எச்சரிக்கையுடன் இருப்பது அறிவுடைமையாகும். இச்சாட்சிகளைத் தவிர, அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்க, தனிப்பட்ட சாட்சி எவருமில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

19. குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தண்டனை தீர்ப்பளிக்கையில், கீழமை நீதிமன்றங்கள், அ.சா.1 மற்றும் 5-இன் சான்றுகளை மதிப்பீடு செய்ததில் நீதிய விருப்பத்தேர்வைச் செயற்படுத்தினவா? என்பது பரிசீலனைக்குரியதாகும். குற்றஞ்சாட்டப்பட்டவர், தனது பாட்டியிடம் பணம் கேட்டும், வீட்டை தனது பெயரில் எழுதிவைக்கக்கோரியும், முந்தைய சந்தர்ப்பங்களிலும், குறிப்பாக, சம்பவம் நடந்த தினத்தன்றும் தகராறு செய்தார் என்னும் அரசுத்தரப்பின் கூற்றை ஆதரிக்கும் சான்றேதும் பதிவாவணத்திலில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மரணமடைந்தவர்

மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டபொழுது, விபத்து பதிவேட்டில், 'விழுதல் என்ற நிகழ்வு' என்று எழுதப்பட்டது என பதிவாவணத்திலுள்ளது. அரசுத் தரப்பு வழக்கின்படி, மரணமடைந்தவரின் வாய் மற்றும் மூக்கிலிருந்து குருதி வந்தது, ஆனால், மரணமடைந்தவரின் குருதிகறை படிந்த உடை ஏதும் கைப்பற்றப்படவில்லை எனவும், அது தொடர்பான இரசாயன ஆய்வு ஏதுமில்லை எனவும் தெரிகிறது. இவ்வாறாக, சாட்டுரைக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளாலும், புலனாய்வு முகமையாலும் அளிக்கப்பட்ட முரண்பட்ட சான்றுகள், அரசுத்தரப்பால் நிறுவப்பட்டுள்ள வழக்கென்னும் மாளிகைக்கு தீங்கு ஏற்படுத்துவதோடு, அரசுத்தரப்பு வழக்கின் அடித்தளத்திற்கே கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

20. மேலும், அரசுத்தரப்பு வழக்கிலும், முக்கிய சாட்சிகளான அ.சா.1 மற்றும் 5-இன் சான்றுரைகள் உட்பட அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலும் முக்கியமான குறைபாடுகளும், முறைகேடுகளும் மற்றும் முரண்பாடுகளும் குறிப்பிட்ட அளவிற்கு உள்ளதாக நாங்கள் அறிகிறோம். அ.சா.1, தனது குறுக்கு விசாரணையில், தன்னுடைய மனைவி (அ.சா.5), குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் அவருடைய குடும்பத்தாருக்கெதிராக, பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளதை உறுதிபட தெரிவித்துள்ளார் என்பதோடு அ.சா.5, அதனை, தனது குறுக்கு விசாரணையில் மறுக்கின்றார். அதுபோன்றே, முதன்மையாக, சம்பவம் நிகழ்ந்தது, பாதிக்கப்பட்டவரை மருத்துவமனைக்கு கொண்டுசென்றது, சாட்டுரைக்கப்பட்ட சம்பவத்தின்பொழுது அ.சா.1 முன்னிலையாகியிருந்தது,



குற்றஞ்சாட்டப்பட்டவரை பேருந்து நிலையத்திலிருந்தோ அல்லது அவருடைய மாமியார் வீட்டிலிருந்தோ கைது செய்தது, குற்றஞ்சாட்டப்பட்டவர் வசமிருந்து, சான்றுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டது மற்றும் அ.சா.1-ஆல் குற்ற முறையீடு தாக்கல் செய்யப்பட்டது போன்ற இன்னபிற அம்சங்களில் சாட்சிகளின் முரணான கூற்றுகள் உள்ளன மற்றும் ஒட்டுமொத்த வழக்குமே முற்றிலும் நம்பத்தகாத ஒன்றாகத் தோன்றுகிறது. இதற்கு மேலாக, ஏ.பி.சி. மருத்துவமனையைப் பாதிக்கப்பட்டவருடன் அடைந்து, அ.சா.1 மற்றும் 5-ம் அவசர சிகிச்சைப்பிரிவுக்கு போகாமலே, எவ்வாறு நேரடியாக மருத்துவர் முகமது கவுஸ் கானை அணுக முடிந்தது? மற்றும் அது சட்டஞ்சார்ந்த மருத்துவ வழக்காக இருக்கையில், மருத்துவர்கள், ஏன் காவல்துறைக்கு தகவலளிக்கவில்லை? என்ற எதிர்த்தரப்பினரால் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு அரசுத்தரப்பிலிருந்து விளக்கமேதும் அளிக்கப்படவில்லை. குற்றத்தை நிரூபிப்பதில் குற்றஞ்சாட்டப்பட்டவரால் அளிக்கப்பட்ட வேறுபாடான மற்றும் முரண்பாடான கூற்றுகள் முக்கியமல்ல என இரு கீழமை நீதிமன்றங்களும் சாதாரணமாகக் குறிப்பிட்டுள்ளன. கீழமை நீதிமன்றங்களால் தரப்பட்ட காரணவிளக்கம் வெளிப்படையாக சட்டவிரோதமானது என நாங்கள் உணர்கின்றோம்.

21. இந்நீதிமன்றமானது, **லத்தேஷ் -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு** [2018-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 30 அன்று தீர்மானிக்கப்பட்ட குற்றவியல் மேல்முறையீடு எண் 1301]-இல் ஓர் ஐயம் குறித்து ஏற்படும் கூடுதல் எச்சரிக்கையுணர்வுக்கும், கூடுதல் கவனமின்மைக்குமிடையே பொருள்படும்விதமாக

நியாயமான ஐயத்தை, தெளிவான விதத்தில் விளக்கியுள்ளது. மேலும், நியாயமான ஐயம் என்பது, நடைமுறை சார்ந்த ஒன்றாக இருக்கவேண்டுமேயன்றி போலியான புனைவுக்கொள்கையாக இருக்கக்கூடாது என்றும் விளக்கியுள்ளது.

22. மேற்படி விவாதத்தினைக் கருத்திற்கொண்டு, அரசுத்தரப்பு வழக்கானது தனிப்பட்ட சாட்சிகளால் ஆதரிக்கப்படாமலும், அதில் முரண்பாடுகளும், பொய்யான வழக்கிற்குரிய நல்ல நோக்கமும் இடம் பெற்று, சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகள் நிறைந்துள்ளதாலும், இவ்வழக்கில் நியாயமான ஐயம் இருப்பதாகவே நாங்கள் கருதுகின்றோம். மேலும், போதுமான சாட்சியமில்லை என்பதோடன்றி, அ.சா.1 மற்றும் 5-இன் நம்பகத்தன்மையிலும் நம்பிக்கையில்லை, அது அரசுத்தரப்பு வழக்கையும், குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டுரைக்கப்பட்ட குற்றத்தையும் பொய்யாக்கும் நிலையையடைந்தது. ஆகவே, அரசுத்தரப்பானது, குற்றஞ்சாட்டப்பட்டவர்/மேல்முறையீட்டாளரின் குற்றத்தை நியாயமான சந்தேகத்திற்கப்பால், நம்பகமான சாட்சியமளிப்பதன் மூலம் நிலைநாட்டத் தவறிவிட்டது என்பது, எங்களுடைய பரிசீலிக்கப்பட்ட கருத்தாகும். கீழமை நீதிமன்றங்கள், தத்தமது வழியில் முற்றிலும் தவறாக வழிநடத்தப்பட்டன மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்மீது விசாரணை நீதிமன்றத்தால், விதிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்ட தண்டனைத் தீர்ப்பு, சட்டப்படி வெளிப்படையான பிழையாலும் மற்றும் தவறான அணுகுமுறையாலும் பாதிப்படைகிறது மற்றும் அது நீக்கறவு செய்யப்படுவதற்குரியதென நாங்கள் தீர்வுசெய்கிறோம்.



23. முடிவாக, மேல்முறையீடானது அனுமதிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையானது நீக்கறவு செய்யப்படுகிறது. மேல்முறையீட்டாளர், சிறையிலிருப்பதாக கூறப்படுகிறது. அவர் வேறு வழக்கெதிலும் தேவைப்பட்டாலன்றி, அவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். விண்ணப்பமேதும் நிலுவையிலிருக்குமானால், அவையும் முடிக்கப்பெறுகின்றன.

⌘❖⌘❖⌘

# மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

2018-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8-ஆம் நாள்

**முன்னிலை**

**நீதியரசர் திரு. ஆர். சுப்பையா**
**மற்றும்**
**நீதியரசர் திரு. பி.டி. ஆதிகேசவலு**

உரிமையியல் பல்வகை மேல்முறையீடு எண் **4173/2008**

எஸ். முருகேசன் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

சந்தானலக்ஷ்மி ... எதிர்மேல்முறையீட்டாளர்

இந்து சட்டம் - மண உறவை முறித்தல் - கைவிடல் - இந்து திருமணச் சட்டம், பிரிவுகள் 13 மற்றும் 23 - மேல்முறையீட்டாளர்/கணவரும், எதிர்மேல் முறையீட்டாளர்/மனைவியும் இந்து சடங்குகள் மற்றும் பழக்க வழக்கங்களின்படி மணம்புரிந்துகொண்டனர் - மேல்முறையீட்டாளர், எதிர்மேல்முறையீட்டாளரின் கற்புநெறியை சந்தேகித்ததால், அவர் (மனைவி) மேல்முறையீட்டாளருடனான இல்வாழ்வைத் துறந்து விட்டார் - பிறர்மனை புணர்தல் அடிப்படையில் மண உறவை முறித்தலுக்காக மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது - குறிப்பிடப்பட்ட சில ஆண்டுகளுக்குப் பின்னர், கைவிடல்

**(2018) 6 எம்.எல்.ஜெ. 327**

என்ற காரணத்தின்பேரில் மண உறவை முறித்தலுக்காக மேல்முறையீட்டாளர், இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13(1)(i-பி)-இன் கீழ் மனு தாக்கல் செய்தார் - எதிர்மேல் முறையீட்டாளர், தன்னிச்சையாக இல்வாழ்வைத் துறந்துவிட்டார் என்பதை நிரூபிக்க, மேல்முறையீட்டாளர் தவறிவிட்டார் என்ற காண்முடிவின்பேரில், குடும்பநல நீதிமன்றமானது மனுவைத் தள்ளுபடி செய்தது, எனவே இம்மேல்முறையீடு - கைவிடல் என்பதன் அடிப்படையில் மண உறவு முறித்தல்கோரி மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்ததில் குடும்பநல நீதிமன்றம் நியாயப்படுத்தப்படுகிறதா? - எதிர்மேல்முறையீட்டாளருடனான மணவாழ்வில் தொடர்ந்து ஈடுபட்டு வருகையிலேயே மேல்முறையீட்டாளர், சாட்டுரைக்கப்பட்ட நபருடனான இரண்டாம் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டதாக, எதிர்மேல் முறையீட்டாளர் குற்றஞ்சாட்டினார் என முடிவு - குடும்பத்தலைவராக மேல்முறையீட்டாளரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப அட்டையில், சாட்டுரைக்கப்பட்ட நபரின் பெயர் குறிப்பிடப்பட்டு இருப்பதாக எதிர்மேல்முறையீட்டாளர் சாட்சியம் அளித்துள்ளார் - குடும்ப அட்டையில் பணிப்பெண்ணின் பெயரை அச்சிடுவதற்கான வாய்ப்பே இல்லை என குடும்பநல நீதிமன்றம் திட்டவட்டமான காண்முடிவை வழங்கியது - இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 23-இல் குறிப்பிடப்பட்டுள்ளதுபோன்று, மேல்முறையீட்டாளர், தன்னுடைய தவறைச் சாதகமாக எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படமுடியாதென குடும்பநல நீதிமன்றம் சரியாகவே முடிவெடுத்துள்ளது - எதிர்மேல்முறை-யீட்டாளரின் கைவிடலானது, தன்னிச்சையானதென்பதை மேல்முறையீட்டாளர் நிரூபிப்பதற்குரியவராவார், அது



ஏற்கத்தக்க சான்றுடன் நிரூபிக்கப்படவில்லை என்று குடும்பநல நீதிமன்றம் திட்டவட்டமான காண்முடிவு வழங்கியுள்ளது - குடும்பநல நீதிமன்றத்தின் உத்தரவு உறுதி செய்யப்படுகிறது - மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்:**

1. ஆர். பிரெடரிக் -எதிர்- ஹெச். மாலினி (2018) 1 எம்.எல்.ஜெ. 325. (பத்தி 6)
2. ஆர். சீனு -எதிர்- என். பொற்கொடி (2018) 1 எம்.எல்.ஜெ. 336. (பத்தி 6)

**வழக்குரைஞர்கள்:**

திரு. வி. இராகவாச்சாரி
... மேல்முறையீட்டாளருக்காக

திரு. ஏ.எஸ். நரசிம்மன்
... எதிர்மேல்முறையீட்டாளருக்காக

## தீர்ப்புரை

**நீதியரசர் திரு. ஆர். சுப்பையா:**

இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 13(1)(i-பி)-இன் கீழ் கைவிடல் என்ற காரணத்தின்பேரில் மண உறவை முறித்தலுக்காக, மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட முதலேற்பு மனுவானது, சென்னை, கற்றறிந்த முதல் கூடுதல் குடும்பநல நீதிமன்றக் கோப்பிலுள்ள கு.நீ.மு.ம. எண் 2157/2004-இல் தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட, 31.07.2005-ஆம் தேதியிட்ட

உத்தரவால் பாதிப்படைந்த மேல்முறையீட்டாளரால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குடும்பநல நீதிமன்றத்தின் முன்பாக மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட கு.நீ.மு.ம. எண் 2157/2004-இல் வைக்கப்பட்ட கூற்றுகள் யாதெனில், 09.11.1981 அன்று மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மேல் முறையீட்டாளருக்குமிடையே திருமணமானது, எண் 13, மல்லன் பொன்னப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னையில் உள்ள நடராஜா கல்விக் கழக கல்யாண மண்டபத்தில் இந்து சடங்குகள் மற்றும் வழக்கப்படி நடந்தது. இத்திருமண பந்தத்தின் விளைவாக, 02.01.1983 அன்று எதிர்மேல்முறையீட்டாளர் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, திருமண வாழ்வானது, ஒரு குறுகிய காலத்திற்கு மகிழ்ச்சியாகவும், நிறைவாகவும் இருந்தது. அதன்பின்னர், எதிர்மேல்முறையீட்டாளர், சென்னை, திருவல்லிக்கேணி, ஜான் ஜான்கரண் தெருவிலுள்ள ஒரு மளிகை சாமான் கடையை நடத்திவரும் மோகன்குமார் என்பவருடன் கள்ள உறவு கொண்டதன் காரணமாக, மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மேல்முறையீட்டாளருக்கும் இடையே மணவியல் தகராறுகள் தோன்றின. இத்தருணத்தில் மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மேல் முறையீட்டாளருக்குமிடையில் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. மேல்முறையீட்டாளரும், எதிர்மேல்முறை-யீட்டாளரும் 17.02.1986 வரைதான் சேர்ந்து வாழ்ந்தனர். அதன்பின்னர், எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறை-யீட்டாளருடனான மணவாழ்வைத் துறந்துவிட்டார். அதை துறந்தபின்னர், பிறன்மனை புணர்தல் அடிப்படையில் மண உறவை முறித்தலுக்காக மேல்முறையீட்டாளர்



மு.ம. எண் 1028/1988-ஐ தாக்கல் செய்தார், அது, எதிர்மேல்முறையீட்டாளரால் எதிர்க்கப்பட்டது. இறுதியாக மு.ம. எண் 1028/1988-ஆனது, 03.01.1992-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் குடும்பநல நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. மேல்முறை-யீட்டாளர், தனது தொழில் தொடர்பாக நகருக்கு வெளியே இருந்ததனால், அவர், மு.ம. எண் 1028/1988-ஐ தள்ளுபடி செய்த 03.01.1992-ஆம் தேதியிட்ட உத்தரவை எதிர்த்து, மேல்முறையீடொன்றைத் தாக்கல் செய்ய முடியவில்லை. மண உறவை முறித்தலுக்காக மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் தொடர்ச்சியாக, எதிர்மேல்முறையீட்டாளர் வாழ்வாதாரத் தொகை கோரி வாழ்வாதார வழக்கெண் 32/1996-ஐ குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 125-இன் கீழ் தாக்கல் செய்ததில், மாதமொன்றுக்கு ரூ.100/- என்ற வீதத்தில் எதிர்மேல்முறையீட்டாளருக்கு வாழ்வாதாரத் தொகை செலுத்துமாறு மேல்முறை-யீட்டாளர் பணிக்கப்பட்டார். அதன்பின்பு, வாழ்வாதாரத் தொகையை உயர்த்தி தரக்கோரி, எதிர்மேல்முறையீட்டாளர் ப.ம. எண் 845/2004-ஐ தாக்கல் செய்ததில், மாதமொன்று ரூ.1000/- என்ற வீதத்தில் வாழ்வாதாரத் தொகை வழங்குமாறு மேல்முறையீட்டாளரை பணித்து, 20.09.2004-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டது. இளவர் குழந்தையின் பாதுகாப்புப் பொறுப்புக்கோரி மேல்முறையீட்டாளர் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளதாகவும், குடும்பநல நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத் தொடர்ந்து, இளவர் குழந்தை பாதுகாப்புப் பொறுப்பு மேல்முறையீட்டாளரிடம் ஒப்படைக்கப்பட்டதென்றும், மேல்முறையீட்டாளரே குழந்தையின் பாதுகாப்புப் பொறுப்பிலுள்ளார் என்றும்,

அவருடைய தகுதிக்கேற்ப, அவனுக்கு கல்வியளித்து வருகின்றார் என்றும் முதலேற்பு மனுவில் கூறப் பட்டுள்ளது. இளவர் குழந்தை பருவமடைந்ததும், அவர் எதிர்மேல்முறையீட்டாளருடன் சென்று தங்கிவிட்டார். மேற்படி நடவடிக்கைகளின் நிலுவையின்பொழுது, எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளருடன் இணைந்து மகிழ்ச்சிகரமான இல்வாழ்வை நடத்தத் தவறி, அவரை புறக்கணித்துவிட்டார். மேல்முறையீட்டாளரும், எதிர்மேல்முறையீட்டாளரும் 18 ஆண்டுகளாகப் பிரிந்து வாழ்கின்றனர். அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கான வாய்ப்பேதுமில்லை. ஆகவே, மேல்முறையீட்டாளர், கைவிடல் என்ற காரணத்தின்பேரில் மண உறவை முடித்தலுக்காக தற்பொழுதைய கு.நீ.மு.ம. எண் 2157/2007-ஐ தாக்கல் செய்துள்ளார்.

3. முதலேற்பு மனுவின் கூற்றுகள் பொய்யானவை என்றும், ஆகவே, அவை ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றும் கூறி, எதிராணையுறுதியாவணம் தாக்கல் செய்ததன் மூலம், எதிர்மேல்முறையீட்டாளரால் முதலேற்பு மனு எதிர்க்கப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளர், மோகன்குமார் என்ற ஒருவருடன் கள்ள உறவுகொண்டு வாழ்ந்துவருகின்றார் என்ற கூற்றானது பொய்யானதும், தவறாக வழிநடத்தக்கூடியதும் என்பதால், அது மறுக்கப்படுகிறது. மு.ம. எண் 1028/1988-ஆனது, பிறர்மனை புணர்தல் என்னும் காரணத்தின்பேரில் மண உறவை முறித்தலுக்காக தாக்கல் செய்யப்பட்டதென்றும், அது, எதிர்மேல்முறையீட்டாளரால் எதிர்க்கப்பட்டதென்றும், முடிவில், அது 03.01.1992 அன்று தள்ளுபடி செய்யப்பட்டதென்றும் மேலும் கூறப்பட்டது. தள்ளுபடி உத்தரவிற்கெதிராக, மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யாததால், அது இறுதியாகிவிட்டது.



மேலும் கூறப்பட்டதாவது, மேல்முறையீட்டாளர் வேறொரு பெண்ணை மணம்புரிந்துகொண்டாரென்றும், அவர் மூலம் ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளதென்றும், முதலேற்பு மனுவில், எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக கூறப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுக்காக மேல்முறையீட்டாளர் வருத்தம் தெரிவிக்க விரும்பவில்லை ஆதலால், அவர் தனித்து வசிக்கின்றார். எதிர்மேல்முறையீட்டாளர், மோகன்குமார் என்பவருடன் கள்ள உறவு கொண்டு வாழ்ந்து வருகின்றார் என்று அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள், அவருக்கு மனவேதனையளித்துள்ளது. எதிர்மேல்முறையீட்டாளர் தன்னிச்சையாக மேல்முறையீட்டாளரை ஒருபோதும் கைவிட்டதில்லை, மேலும், மேல்முறையீட்டாளரால், எதிர்மேல்முறையீட்டாளருக்கு நிகழ்த்தப்பட்ட கொடுமையும், அவருடைய கொடுமையான மனப்பான்மையின் காரணமாகவுமே கைவிட நேர்ந்தது. எந்நிகழ்விலும், பிறர் மனை புணர்தலென்னும் காரணத்தின்பேரில் மேல்முறையீட்டாளரால் மண உறவை முறித்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட முதலேற்பு மனுவானது ஒருமுறை தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால், கைவிடல் என்ற காரணத்தின்பேரில் அதே பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள தற்பொழுதைய முதலேற்பு மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. மண உறவை முறித்தலுக்காக முந்தைய மனுவில் கூறப்பட்டுள்ள அதே கூற்றுக்களே, தற்பொழுதைய முதலேற்பு மனுவிலும் கூறப்பட்டுள்ளதால், தற்பொழுதைய முதலேற்பு மனுவும் நிலைக்கத்தக்கதல்ல. தற்பொழுதைய மனுவானது, எதிர்மேல்முறையீட்டாளரை துன்புறுத்தவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளருடன் சேர்ந்து வாழ தயாராகவும்,

விருப்பமுடனும் இருப்பதால் முதலேற்பு மனுவைத் தள்ளுபடி செய்வதற்காக அவர் வேண்டினார்.

4. குடும்பநல நீதிமன்றத்தின் முன்பாக மேல்முறையீட்டாளர் தன்னை ம.சா.1-ஆக விசாரித்துக் கொண்டார் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் தன்னை எ.சா.1-ஆக விசாரித்துக்கொண்டார். எத்தரப்பாலும் ஆவணமேதும் குறியீடு செய்யப்படவில்லை. குடும்பநல நீதிமன்றம், மேல்முறையீட்டாளராலும், எதிர்மேல் முறையீட்டாளராலும் அளிக்கப்பட்ட வாய்மொழி சாட்சியங்களைப் பரிசீலித்து, பிறர்மனை புணர்தல் என்ற காரணத்தின்பேரில் மண உறவை முறித்தலுக்காக மேல்முறையீட்டாளர் ஏற்கெனவே முதலேற்பு மனு எண் 1028/1988-ஐ தாக்கல் செய்துள்ளார், அது 03.01.1992 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது, ஆகவே, கைவிடல் என்ற காரணத்தின்பேரில் மண உறவை முறித்தலுக்கான தற்பொழுதைய முதலேற்பு மனு நிலைக்கத்தக்கதல்ல என்ற காரணத்தின்பேரில் 31.07.2005 அன்று மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட முதலேற்பு மனுவைத் தள்ளுபடி செய்தது.

5. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்ததாவது, மேல்முறை-யீட்டாளர், பத்மினி என்ற பெண்ணை மணந்துகொண்டு, அவர்மூலம் கோமதி என்ற பெண் குழந்தையைப் பெற்றார் என்று எதிர்மேல்முறையீட்டாளரால் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களால் குடும்பநல நீதிமன்றம் உணர்ச்சிவயப்பட்டுவிட்டது. எனினும், அத்தகையதொரு குற்றச்சாட்டை உறுதிசெய்ய, ஏதொரு ஆவணச் சான்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை கவனிக்க கீழமை நீதிமன்றம் தவறிவிட்டது.



மேல்முறையீட்டாளர் தன்னுடைய சுய தவறை சாதகமாக்கிக்கொண்டுவிட்டதால் அவர் மணமுறிவுத் தீர்ப்பாணைபெற அருகதையற்றவர் என்று குடும்பநல நீதிமன்றமானது எந்தவித அடிப்படையுமின்றி முடிவுசெய்துள்ளது. மேல்முறையீட்டாளருடன் சேர்ந்து இல்வாழ்கை நடத்த, தான் எந்தவித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்றும், 17.02.1986 முதல் தனித்து வசித்துவருவதாகவும் எ.சா.1/எதிர்மேல் முறையீட்டாளர் தன்னுடைய சாட்சியத்தில் ஒப்புக் கொண்டிருப்பதையுங்கூட, குடும்பநல நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை. எதிர்மேல்முறையீட்டாளர் தனது எதிராணையுறுதியாவணத்தில், மேல்முறையீட்டாளர் பத்மினி என்ற பெண்ணை மணந்து கொண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டை தான் கூறியிருந்தபொழுதிலும், தான், மேல்முறையீட்டாளருடன் சேர்ந்துவாழ தயாராகவும், விருப்பமுடனும் இருப்பதாக கூறியுள்ள பொழுதிலுங்கூட எதிர்மேல்முறையீட்டாளர், மேல் முறையீட்டாளருடனான மணவியல் உரிமைகளை மீட்டமைத்தலுக்கான மனு எதையும் தாக்கல் செய்ய-வில்லை என்ற பொருண்மையையும் குடும்பநல நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை. மேலும், கைவிட்ட நாள் முதல், மேல்முறையீட்டாளரின் பொறுப்பிலுள்ள இளவர் மகனைப் பார்க்க, எதிர்மேல்முறையீட்டாளர் எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை. எந்நிகழ்விலும் 17.02.1986 முதல் மேல்முறையீட்டாளரும், எதிர் மேல்முறையீட்டாளரும் கடந்த 32 ஆண்டுகளாக தனித்தே வசித்துவருவதால், திருமண பந்தத்தை உயிர்ப்புடனிருக்க செய்வதால் எந்தவித பயனுள்ள நோக்கமும் நிறைவேறப்போவதில்லை. மேல்முறை-யீட்டாளருக்கும், எதிர்மேல்முறையீட்டாளருக்கும்

இடையிலான திருமண உறவானது, சீராக்கமுடியாதவாறு முறிந்துவிட்டதால், குடும்பநல நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்யுமாறு, மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வேண்டினார்.

6. மேல்முறையீட்டாளரும் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளரும் தனித்தே கடந்த 32 ஆண்டுகளாக வசித்துவருகின்றனர். அவர்களுக்கிடையிலான மணவாழ்க்கை சீர்ப்படுத்தமுடியாதவாறு முறிந்துவிட்டதால், அவர்களின் திருமண பந்தத்தை குறைபடாமல் வைப்பதன் மூலம், பயனுள்ள நோக்கமேதும் நிறைவேறப்போவதில்லை என்ற வாதக்கூறை ஆழமாகப் பதிவு செய்வதற்கு இந்நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத்தின் **ஆர். பிரெடரிக் -எதிர்- ஹெச். மாலினி 2018-1-லா வீக்லி 19 : எல்.என்.ஐ.என்.டி. 2017 மெட்ராஸ் 3844 : (2018) 1 எம்.எல்.ஜெ. 325** என்ற வழக்கையும், **ஆர். சீனு -எதிர்- என். பொற்கொடி எல்.என்.ஐ.என்.டி. 2017 மெட்ராஸ் 3919 : (2018) 1 எம்.எல்.ஜெ. 336** என்ற வழக்கையும் மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர், தன்னுடைய வாதத்திற்காதரவாக சார்ந்து நின்றார்.

7. அதற்குமாறாக, எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டதாவது, முதலேற்பு மனுவானது, கைவிடல் என்ற காரணத்தின்பேரில் மண உறவை முறித்தலுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அப்படியிருக்கையில், எதிர்மேல்முறையீட்டாளர் தன்னிச்சையாகவே மேல்முறையீட்டாளருடனான இல்வாழ்வைத் துறந்துவிட்டார் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு மேல்முறையீட்டாளரின்மீது பதிகிறது.



எனினும், எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளருடனான இல்வாழ்வை தன்னிச்சையாகவே துறந்துவிட்டார் என்று முதலேற்பு மனுவிலோ அல்லது ம.சா.1-ஆன மேல்முறையீட்டாளரின் சான்றுரையிலோ எந்தக் கூற்றுமில்லை. உள்ளபடியே, எதிர்மேல்முறையீட்டாளர் மோகன்குமார் என்ற ஒருவருடன் கள்ள உறவு கொண்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, கொடுமைக்குள்ளாக்கப்பட்டார் என்பதால், மேல்முறையீட்டாளருடனான இல்வாழ்வை எதிர்மேல்முறையீட்டாளர் மனமின்றி, வலிந்து துறந்துவிட்டார். மேலும், பிறர்மனை புணர்தல் என்ற காரணத்தின்பேரில் மண உறவை முறித்தலுக்காக மேல்முறையீட்டாளர் ஏற்கெனவே மு.ம. எண் 1028/1988 என்ற முதலேற்பு மனுவைத் தாக்கல் செய்தார். அது, எதிர்மேல்முறையீட்டாளரால் எதிர்க்கப்பட்டது. முடிவில், 03.01.1992 அன்று மு.ம. எண் 1028-ஆனது தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யவில்லை. இவ்வாறாக, எதிர்மேல்முறையீட்டாளர் கள்ள உறவில் ஈடுபட்டு வாழ்ந்து வருகின்றார் என்பதாக அவருக்கெதிராக சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள், மேல்முறையீட்டாளரால் உறுதிசெய்யப்படவில்லை. ஆகவே, குடும்பநல நீதிமன்றத்தால் சரியாகவே சுட்டிக்காட்டப்பட்டவாறு, கைவிடல் அடிப்படையில் மண உறவை முறித்தலுக்கான தற்பொழுதைய முதலேற்பு மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. அனைத்திற்கும் மேலாக, எதிர்மேல்முறையீட்டாளர் எ.சா.1-ஆக தனது சான்றுரையில் உறுதிபடக் கூறியுள்ளதாவது, மேல்முறையீட்டாளர் தன்னுடனான திருமண வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும்போது, பத்மினி என்ற பெண்ணை மணந்துகொண்டார், அவர் மூலம்

கோமதி என்ற பெண் குழந்தையும் பிறந்தது என்பதாகும். எதிர்மேல்முறையீட்டாளர் தனது சாட்சியத்தில், மேல்முறையீட்டாளரின் பெயர், குடும்பத் தலைவராக குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப அட்டையில், மேற்படி பத்மினியின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதை தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். மேல்முறையீட்டாளர், குறுக்கு விசாரணையில், தன்னுடைய குடும்ப அட்டையில் பத்மினி என்ற பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்டு, மேற்படி பத்மினி, வீட்டின் பணிப் பெண் மட்டுமே எனக் கூறியுள்ளார். அத்தகைய சூழ்நிலையில், பணிப்பெண்ணின் பெயர் குடும்ப அட்டையில் அச்சிடப்படமுடியாதென சுட்டிக்காட்டிய குடும்பநல நீதிமன்றம், ஒருவர் தன்னுடைய தவறை சாதகமாக்கிக்கொள்ள அனுமதிக்கப்படமுடியாதென சரியாகவே தீர்ப்பளித்துள்ளது. எந்நிகழ்விலும், எதிர்மேல்முறையீட்டாளரின் கைவிடலானது தன்னிச்சையானதென்பதை, மேல்முறையீட்டாளர் நிலைநாட்டத் தவறிவிட்டார் மற்றும் மேல்முறை-யீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட முதலேற்பு மனுவைத் தள்ளுபடி செய்கையில் குடும்பநல நீதிமன்றத்தால் சரியாகவே மதிப்பீடு செய்யப்பட்டது. ஆகவே, இம்முதலேற்பு மனுவைத் தள்ளுபடி செய்து, குடும்பநல நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரையை உறுதிசெய்யுமாறு எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வேண்டினார்.

8. இருதரப்பு வழக்குரைஞர்களின் பணிந்துரைகளையும் கருத்திற்கொண்டு, குடும்பநல நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டு, இம்மேல்முறையீட்டில் எதிர்ப்பிற்குள்ளான உத்தரவு உட்பட, பதிவாவணத்தில் வைக்கப்பட்ட சான்றாதாரங்களை நாங்கள் கவனமாகப் பரிசீலித்துள்ளோம். மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மேல்முறையீட்டாளருக்குமிடையே 09.11.1981 அன்று திருமணம் நிகழ்ந்து, அதன்மூலம், அவர்களுக்கொரு ஆண் குழந்தை 02.01.1983 அன்று பிறந்தது. மேல்முறையீட்டாளர், எதிர்மேல்முறையீட்டாளரின் கற்புநெறியைச் சந்தேகித்ததாகவும், அது, தம்பதியருக்-கிடையே அடிக்கடி தகராறுக்கு வழிகோலியதாகவும் தோன்றுகிறது. எதிர்மேல்முறையீட்டாளர், மோகன்குமார் என்பவருடன் கள்ள உறவு வைத்துக்கொண்டிருந்தார் என்பதும், அதுவே, இல்லற வாழ்வை சீர்குலைத்து விட்டது என்பதும் மேல்முறையீட்டாளரின் குறிப்பிட்ட வழக்கு விவரமாகும். இத்தறுவாயில், இல்லறப் பிரச்சனைகள் சூடுபிடித்து, மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மேல்முறையீட்டாளருக்கும் இடையே வேறுபாடுகள் தலைதூக்கின, இறுதியாக, எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளருடனான இல்வாழ்வை, 17.02.1986 அன்று துறந்துவிட்டார். அதன்பின்னர், மேல்முறை-யீட்டாளர் தோல்வியடைந்து, பிறர்மனை புணர்தல் அடிப்படையில் மண உறவை முறித்தலுக்காக மு.ம. எண் 1028/1988-ஐ தாக்கல் செய்து, எதிர்வழக்கிற்கு பின்னர், மேற்படி மனுவானது 03.01.1992 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. ஒப்புக்கொண்டபடி, 03.01.1992-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவிற்கெதிராக, மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு எதனையும் முன்கொணரவில்லை மற்றும் 03.01.1992-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவு இறுதியாகியது. முதலேற்பு மனு எண் 1028/1988-ஆனது தள்ளுபடியான 12 ஆண்டுகளுக்கு பின்னர், மேல்முறையீட்டாளர் கைவிடல் என்ற காரணத்தின்பேரில் மண உறவை

முறித்தலுக்காக தற்பொழுதைய முதலேற்பு மனு எண் 2157/2004-ஐ தாக்கல் செய்துள்ளார். அவ்வாறிருக்கையில், கைவிடல் என்ற காரணத்தின்பேரில் மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட பிந்தைய மு.ம. எண் 2157/2004 பிற்சிந்தனையான ஒன்றேயாகும்.

9. குடும்பநல நீதிமன்றம் முன்பாக, மேல்முறையீட்டாளர் தன்னை ம.சா.1-ஆக விசாரித்துக் கொண்டார் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் எ.சா.1-ஆக விசாரிக்கப்பட்டார். மு.ம. எண் 2157/2004-இல் தாக்கல் செய்யப்பட்ட எதிராணையுறுதியாவணத்தில், மேல்முறையீட்டாளர், தன்னுடனான திருமண வாழ்வைத் தொடர்ந்து நடத்திவரும்பொழுது, பத்மினி என்பவரை இரண்டாவதாக மணம் புரிந்துகொண்டார் என எதிர்மேல்முறையீட்டாளரால் குற்றஞ்சாட்டப்பட்டும், குடும்பநல நீதிமன்றத்தின் முன்பான அவருடைய சான்றுரையிலும் திரும்பக் கூறியுள்ளார். மேலும், மேற்படி பத்மினியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப அட்டையில், மேல்முறையீட்டாளரின் பெயர் குடும்பத் தலைவராக குறிப்பிடப்பட்டுள்ளது என்று எதிர்மேல்முறையீட்டாளர் சான்றுரைத்துள்ளார். குறுக்கு விசாரணையின்பொழுது, மேல்முறையீட்டாளர் பத்மினி என்ற பெண்ணை மணந்துகொண்டதை மறுத்தார், ஆனால், பத்மினி என்ற பெண், தன்னுடைய வீட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிந்து, சமையலராகவும் இருந்துவருகின்றார் என்று ஒப்புக்கொண்டார். மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளரின் மேற்படி சாட்சியங்களை மதிப்பீடு செய்ததில், வீட்டின் பணிப்பெண் அல்லது சமையலரின் பெயரைக் குடும்ப அட்டையில் அச்சிடுவதற்கான வாய்ப்பே இல்லை என்று குடும்பநல நீதிமன்றம் திட்டவட்டமான காண்முடிவு ஒன்றை வழங்கியுள்ளது. இச்சூழ்நிலைகளில், இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 23-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, மேல்முறையீட்டாளர் தன்னுடைய தவறை சாதகமாக்கிக்கொள்ள அனுமதிக்கமுடியாது என குடும்பநல நீதிமன்றம் சரியாகவே தீர்ப்பளித்துள்ளது. குடும்பநல நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அத்தகையதொரு காண்முடிவுடன் நாங்கள் முற்றிலும் உடன்படுகின்றோம். மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர், மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் இருவரும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக பிரிந்து வசித்துவருகின்றனர் என வாதிட்டபொழுதிலும், இவ்வழக்கிலுள்ள பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில், மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மேல்முறையீட்டாளருக்குமிடையேயான சடங்குமுறைப்படியான மண உறவை முறிப்பதற்கான பொருண்மைமீது நாங்கள் கவனம் செலுத்தவில்லை. கைவிட்டதற்காக மனு தாக்கல் செய்த மேல்முறையீட்டாளர், எதிர்மேல்முறையீட்டாளரின் அக்கைவிடலானது, தன்னிச்சையானது என்பதை நீதிமன்றம் திருப்தியுறும் வகையில் நிரூபிக்கக் கடமைப்பட்டவராவார் என்றும், ஆனால், அவர் அதனை ஏற்கத்தக்க சான்றுடன் உறுதி செய்யவில்லை என்றும், குடும்பநல நீதிமன்றமானது சரியாகவே திட்டவட்டமான காண்முடிவை வழங்கியுள்ளது என்பதையும் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். குடும்பநல நீதிமன்றத்தின் இக்காண்முடிவானது, ஏற்குந்தகுதியை மட்டும் பெறுகிறது. எந்நிகழ்விலும், மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட கு.நீ.மு.ம. எண் 2157/2004-ஐ தள்ளுபடி செய்து, குடும்பநல நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட நன்கு பரிசீலிக்கப்பட்ட

உத்தரவில் நாங்கள் குறுக்கிட, எந்தக் காரணத்தையும் அறியவில்லை.

10. முடிவில், சென்னை முதல் கூடுதல் குடும்பநல நீதிமன்றத்தின் கோப்பிலுள்ள கு.நீ.மு.ம. எண் 2157/2004-இல் பிறப்பிக்கப்பட்ட 31.07.2005-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை, நாங்கள் உறுதிசெய்கின்றோம். உரிமையியல் பல்வகை மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை ஏதுமில்லை.

... மேல்முறையீடானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

⌘❖⌘❖⌘



# மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

2018-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 6-ஆம் நாள்

## முன்னிலை

**நீதியரசர் திரு. எம்.எம். சுந்தரேஷ்**
**மற்றும்**
**நீதியரசர் திரு. என். ஆனந்த் வெங்கடேஷ்**

முதலேற்புப் பிரிவு மேல்முறையீடு எண் **127/2018**

1. டி. அஷோக் சுரானா
2. டி. ராஜேஷ் சுரானா ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

1. சுரேஷ் சுரானா
2. நரேஷ் சுரானா ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

**வேண்டுரை**: முதலேற்புப் பிரிவு மேல்முறையீடானது, உ.வ. எண் 83/2011-இல் 24.02.2017 அன்று பிறப்பிக்கப் பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கெதிராக, முதலேற்புப் பிரிவு விதிகள், கட்டளை 36, விதி 1 உடன் இணைந்த உரிமைப் பட்டயக் கூறு 15-இன் கீழ் தாக்கல் செய்யப்படுகிறது.

சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 (4/1882), பிரிவு 44 - உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், 1908 (5/1908) - பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்கு - வாதி, வழக்குச் சொத்துக்களில் 1/4 பங்கைக் கோரினார் -

தனியமர் நீதியரசர் பாகப்பிரிவினைக்கான முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கினார் - பகுதி பாகப்பிரிவினை என்னும் எதிர்வாதம் எழுப்பப்பட்டது - வரையறுக்கப்பட்ட சட்டம் யாதெனில், குடும்பச் சொத்தில் எதையேனும் விட்டுவிடுதல், பாகப்பிரிவினை வழக்கை பாதிக்கும் என்பதாகும் - விடுபட்ட சொத்தானது, கிடைக்கத்தக்கதென நிறுவப்படவேண்டும் - பாகப்பிரிவினை வழக்கின் வழக்குத் தரப்பினர்களுக்கு பொருந்தக்கூடியதல்ல - பிரதிவாதிகள் வழக்குரையைத் திருத்தி, வாதியால் விடப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்களின் அட்டவணையைச் சேர்த்தனர் - நியமிக்கப்பட்ட வழக்குரைஞர் ஆணையர், அத்தகைய பொருட்கள் ஏதுமில்லை என அறிந்தார் - முடிவு, பிரதிவாதிகளாலான வெற்று குற்றச்சாட்டுகள் - வாதியிடமோ அல்லது பிரதிவாதியிடமோ தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் இருந்ததை நிலைநாட்ட சான்றாதாரம் ஏதும் அறவே இல்லை - மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது - தனியமர் நீதியரசரின் உத்தரவானது உறுதிசெய்யப்பட்டது.

**வழக்குரைஞர்கள்:**

திரு. வி.வி. கிரிதர்
... மேல்முறையீட்டாளர்களுக்காக

திரு. கே. இராமன்
... 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்காக

திரு. டி.எஸ். பாஸ்கரன்
... 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்காக



## தீர்ப்புரை

**நீதியரசர் திரு. என். ஆனந்த் வெங்கடேஷ்:**

1. இம்முதலேற்புப் பிரிவு மேல்முறையீடானது, உ.வ. எண் 83/2011-இல் தனியமர் நீதியரசரால் பிறப்பிக்கப்பட்ட 24.2.2017-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையால் பாதிப்படைந்த உரிமை வழக்கின் 1 மற்றும் 3-ஆவது பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மேல்முறையீட்டைத் தீர்மானிப்பதற்குத் தேவையான பொருண்மைகளின் சுருக்கமாவது, உ.வ. எண் 83/2011-இன் தரப்பினர்கள் காலஞ்சென்ற தேஜ்முல் சுரானா என்பவரின் மகன்களாவர். இம்மேல்முறையீட்டில் வாதியான 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் வழக்கு அட்டவணைச் சொத்துகளில் 1/4 பங்கை ஒதுக்கி, பாகப்பிரிவினை பரிகாரம் கோரி உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார். வாதியின் வழக்கு யாதெனில், "அ" அட்டவணைச் சொத்து, வாதி மற்றும் பிரதிவாதிகளின் தந்தையாருக்குரியதாகும். அதைத்தவிர, பிரிக்கப்படாத இந்து குடும்ப வருவாய், வாடகை வருவாய், பங்குகளில் முதலீடு, பல்வகை கடனாளிகள், கையிருப்பு மற்றும் வங்கி இருப்புநிதி ஆகியவை வழக்குரை அட்டவணையில் "ஆ" என விவரிக்கப்பட்டுள்ளன. அதைத்தவிர, வழக்குரையானது, வேறுசில அசையும் சொத்துகளை கையாளுகின்ற அட்டவணை "இ"-ஐ கொண்டுள்ளது. வாதியின் வழக்கு யாதெனில், அவர்களுடைய தந்தையார் மற்றும் தாயாரின் இறப்பிற்குப் பின்னர், ஒவ்வொரு சகோதரரும் வழக்குச் சொத்துகளில் 1/4 பங்கிற்கு உரிமையுடையவராவர்

மற்றும் சொத்துகளை பரஸ்பரம் பகிர்ந்துகொள்ள அவருடைய சகோதரர்கள் ஒத்துழைக்காததையடுத்து, பாகப்பிரிவினை பரிகாரம் கோரி, தற்பொழுதைய வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது.

3. வழக்கை எதிர்க்கும் 1 மற்றும் 3-ஆவது பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்ததில், அவர்கள் தரப்பினர்களுக்கிடையிலான உறவுமுறையை மறுக்கவில்லை மற்றும் ஒவ்வொரு சகோதரரும் வழக்குச் சொத்துகளில் 1/4 பங்கைப் பெற உரிமையுடையவர்கள் என்ற பொருண்மையையும் மறுக்கவில்லை. பிரதிவாதிகளான மேல்முறையீட்டாளர்களால் வைக்கப்பட்ட ஒரே ஆக்கப்பூர்வமான எதிர்வாதம் யாதெனில், பிரிக்கப்படாத இந்து குடும்பத்திற்குரியதும், அவர்களுடைய தாயாருக்குரியதுமான தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் உள்ளன, அவை உரிமை வழக்கின் சுற்றெல்லைக்குள் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை, ஆகவே உரிமை வழக்கானது பகுதி பாகப்பிரிவினை அடிப்படையில் பிழையானது என்பதாகும்.

4. உரிமை வழக்கு நிலுவையின்பொழுதுங்கூட, வழக்குரையைத் திருத்தி, தங்க அணிகலன்களையும், வெள்ளிப் பொருட்களையும் காண்பிக்கின்ற "ஈ" அட்டவணையைச் சேர்ப்பதற்கு மேல்முறையீட்டாளர்கள் விண்ணப்ப எண் 2702/2013-ஐ தாக்கல் செய்தனர். அவர்களின் கூற்றுப்படி, அவையும் வழக்குச் சொத்துகளின் பகுதியாக அமையவேண்டும் என்பதாகும். இவ்விண்ணப்பத்தில், தங்க அணிகலன்களும் மற்றும் அதுபோன்ற பிற பொருட்களும் இருப்பதாக எதிர்ப்பார்க்கப்படும் இரு அலமாரிகளை உடைத்து பார்ப்பதற்கு, வழக்குரைஞர் ஆணையரை நியமித்து,



கற்றறிந்த தனியமர் நீதியரசரால் 10.09.2013 அன்று உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அவ்வுத்தரவைத் தொடர்ந்து, வழக்குரைஞர் ஆணையர், தன்னுடைய பணியை முடித்து, "எந்த அலமாரிகளிலும் தங்க பொருட்களோ அல்லது அணிகலன்களோ மற்றும் வெள்ளிப் பொருட்களோ ஏதுமிருப்பதாகக் கண்டறியப் படவில்லை" என்னும் அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

5. வாதி தரப்பில், சா.ஆ.பி.1 முதல் பி.19 வரையிலானவை குறியீடு செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் மூலம் சா.ஆ.சி.1 முதல் சி.4 வரை குறியீடு செய்யப் பட்டன. வாதி தன்னை வா.சா.1-ஆக விசாரித்துக் கொண்டார், மேலும், 1 மற்றும் 2-ஆவது பிரதிவாதிகள், தங்களை பி.சா.1 மற்றும் பி.சா.2-ஆக விசாரித்துக் கொண்டனர்.

6. அறிவார்ந்த தனியமர் நீதியரசர், பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் விரிவாகப் பரிசீலித்தும், மேலும், வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகளை மதிப்பீடு செய்ததன்பேரிலும், வேண்டப் பட்டவாறு உரிமை வழக்கில் தீர்ப்பாணை வழங்கி, வழக்குத் தரப்பினர்கள் ஒவ்வொருவரும், வழக்குச் சொத்துகளில் 1/4 பங்கினைப் பெற உரிமையுடையவர்கள் என்பதாக முதல்நிலைத் தீர்ப்பாணை ஒன்றைப் பிறப்பித்தார்.

7. உரிமை வழக்கைத் தீர்மானிக்கையில், பகுதி பாகப்பிரிவினை என்பதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளர்களால் எழுப்பப்பட்ட ஆட்சேபணை தொடர்பாக, ஒரு குறிப்பிட்ட சட்ட வினா வனையப்பட்டு, அது, விரிவாக விவாதிக்கப்பட்டது. அறிவார்ந்த தனியமர் நீதியரசர் அனைத்து சான்றாதாரங்களையும்

விரிவாகப் பரிசீலித்து, அத்தகைய தங்க அணிகலன்களோ அல்லது வெள்ளிப் பொருட்களோ, உண்மையில் இல்லை எனக் கண்டறிந்தார். இதன்பொருட்டு, அறிவார்ந்த தனியமர் நீதியரசர், பி.சா.1-ஆக விசாரிக்கப்பட்டவரான 2-வது பிரதிவாதியின் சாட்சியத்தையும், மேலும், பி.சா.2-ஆக விசாரிக்கப்பட்டவரான 3-ஆவது பிரதிவாதியின் சாட்சியத்தையும் சார்வுற்றார். வி. எண் 2702/2013-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவையும், வழக்குரைஞர் ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையையும் அறிவார்ந்த தனியமர் நீதியரசர் பரிசீலனைக்கெடுத்துக்கொண்டார். இச்சான்றாதாரங்கள் அனைத்தையும் விரிவாகப் பரிசீலித்த பின்னர், அறிவார்ந்த தனியமர் நீதியரசர் இங்குள்ள மேல்முறையீட்டாளர்களால் கோரப்படுவதுபோன்று, அத்தகைய தங்க அணிகலன்களோ அல்லது வெள்ளிப் பொருட்களோ இல்லையென்றும், எனவே உரிமை வழக்கானது பகுதி பாகப்பிரிவினை என்ற அடிப்படையில் பிழையானதல்ல என்றும் முடிவிற்கு வந்தார்.

8. வழக்கானது, பகுதி பாகப்பிரிவினை என்ற அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கவேண்டும் என மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞர் வாதிட்டார். அவருடைய வாதங்களை வலியுறுத்த, கற்றறிந்த வழக்குரைஞர், வழக்குரையின் பத்தி 8-இல் உள்ள வாதுரைகளை எங்கள் கவனத்திற்கு கொண்டுவந்தார், அது பின்வருமாறு எடுத்தியம்பப்படுவதாவது:

> "காலஞ்சென்ற திருமதி ஜவாரி குமாரி சுரனாவால், 2010-ஆம் ஆண்டு ஜூன் திங்களில், வழக்குத் தரப்பினர்களுக்கு ஏற்கெனவே பிரித்தளிக்கப்பட்டிருந்த அவருடைய தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்களைத் தவிர, இதன்கீழ் "சி" அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பாகப்பிரிவினைக்காக விட்டுச்செல்லப்பட்ட அசையும் சொத்துகளில், வாதி 1/4 பங்கைப் பெற உரிமையுடையவராவார். பிரதிவாதிகள் அவற்றிற்கு கணக்குத் தரவும், அவற்றில் 1/4 பங்கை வாதிக்கு அளிக்கவும் பொறுப்புடையவர்களாவர்."



9. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் குறுக்கு விசாரணையின்பொழுது வா.சா.1-இன் சாட்சியத்தையும் எங்கள் கவனத்திற்கு கொண்டுவந்தார், வாதி பின்வருமாறு கூறியுள்ளதாவது:

> "என்னுடைய தாயாரின் இறப்புவரையில், பாகப்பிரிவினைக்குரிய தங்க அணிகலன்கள் மற்றும் வெள்ளிப் பொருட்களின் மொத்த அளவு குறித்து எனக்கு ஏதும் தெரியாது. என்னுடைய தாயார் அவருடைய வாழ்நாளின்பொழுது எந்த அணிகலன்களையும் பகிர்ந்தளிக்கவில்லை. வெள்ளிப் பொருட்கள் தொடர்பாக எந்தப் பாகப் பிரிவினையும் இல்லை."

10. தங்கம் மற்றும் வெள்ளி இருந்ததைக் குறித்து குறிப்பிட்டுள்ள, தந்தையார் மற்றும் தாயாரின் 31.03.2007 மற்றும் 31.03.2008 ஆண்டுகளுக்கான இலாப நட்ட கணக்குகளான சா.ஆ.பி.6 முதல் சா.ஆ.பி.9 வரையிலானவற்றையும் மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் எங்களுடைய கவனத்திற்கு கொண்டுவந்தார்.

11. இவ்வனைத்து சான்றாதாரங்களையும் சுட்டிக்காட்டி, தொடர்புடைய தரப்பினர்கள் அனைவருக்கும் தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் அவருடைய தாயாரால் உண்மையில் பிரித்தளிக்கப் பட்டதா? என்பது குறித்து வாதி தெளிவுபடுத்தவில்லை என்றும், வழக்குரையில் உள்ள விவரத்திற்கும் மற்றும் சாட்சியாக தெரிவிக்கப்பட்ட கூற்றுக்குமிடையே முரண்பாடுள்ளதென்றும் மேல்முறையீட்டாளர்-களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வலுவாக வாதிட்டார்.

12. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் முன்கொணரப்பட்ட வாதத்தில், நாங்கள் வலிமை எதையும் காணவில்லை. சா.ஆ.பி.6 முதல் 9 வரையிலானவை, தாயார் உயிருடன் இருந்தபோதான 2007-2008-ஆம் ஆண்டுகளுக்குரியவையாகும். இந்த சான்றாவணங்கள், தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் இருந்ததைப்பற்றி தெரிவித்தபொழுதிலும், 2008-ஆம் ஆண்டிற்குப் பின்னர், இப்பொருட்களுக்கு என்ன நேர்ந்தன என்பது குறித்து காண்பிக்க சான்றாதாரம் ஏதுமில்லை. தாயார் 2010-ஆம் ஆண்டு ஜுன் திங்களில் அனைத்து தங்க அணிகலன்களையும், வெள்ளிப் பொருட்களையும் அனைத்து சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கும் அளித்துவிட்டார் என்பதை பி.சா.1-இன் சாட்சியம் தெளிவுபடுத்துகிறது. ஆகவே, சா.ஆ.பி.6 முதல் பி.9-இல் உள்ளடக்கப்பட்ட அனைத்து தங்க அணிகலன்களும் மற்றும் வெள்ளிப் பொருட்களும் தாயாரால் அனைத்து குழந்தைகளுக்கும் ஏற்கெனவே பிரித்தளிக்கப்பட்டுவிட்டன.

13. வாதி வழக்குச் சொத்தில் வசிக்கவில்லை என்றும், பி.சா.2 மட்டுமே தனது தாயாருடன் "அ



அட்டவணைச் சொத்தான இரண்டாவது மாடியில் வசித்து வந்து, தாயாரை கவனித்துக்கொண்டார் என்றும் பி.சா.2-இன் சாட்சியத்திலிருந்து தெளிவாகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும். மேலும், பி.சா.2, தன்னுடைய தாயார் படிக்காதவரென்றும், அவரால் இந்தியில் மட்டுமே கையெழுத்திட முடியும் என்றும் கூறினார். வழக்குச் சொத்தின் விவகாரங்களை மட்டுமே அவர் மேலாண்செய்து, தாயாரையும் கவனித்து வந்ததாகவும், ஆனால் தாயாரின் இறப்பின் பொழுது, அவரிடமிருந்த அசையும் சொத்துகளின் விவரங்கள் ஏதும் அவருக்கு தெரியாதென்பதும் பி.சா.2-இன் ஒட்டுமொத்த சாட்சியமும் காண்பிக்கிறது. மேலும், தன்னுடைய தாயாருக்கும், தந்தையாருக்கும், தனக்கும் மற்றும் தனது மூத்த சகோதரனுக்கும் ஒரு பொதுவான கணக்காயர் இருந்தார் என்று பி.சா.2 தனது சாட்சியத்தில் கூறியிருந்தார். அப்படியிருக்கும் நேர்வில், பி.சா.2, தாயாரின் இறப்புக்குப்பின் அடுத்தடுத்துவரும் ஆண்டுகளுக்கான வருமானவரி கணக்கை எளிதாகத் தாக்கல் செய்திருக்க முடியும். தாயார் மற்றும் தந்தையாரின் வருமானவரி கணக்கை அடுத்தடுத்துவரும் ஆண்டுகளுக்கு சமர்ப்பிப்பதற்கு பி.சா.2-க்கு ஒரு வாய்ப்பளிக்கப்பட்டது, ஆனால் அவர் அக்கணக்குகள் எவற்றையும் தாக்கல் செய்யத் தவறிவிட்டார். ஆகவே பாகப்பிரிவினைக்கு தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் உள்ளன என்ற வெற்று குற்றச்சாட்டை வைத்ததைத் தவிர, மேற்படி எதிர்வாதத்தை மேல்முறையீட்டாளர்கள் எவ்வித சான்றாதாரத்துடனும் மெய்ப்பிக்க முடியவில்லை. அதாவது, வாதியிடமோ அல்லது வேறு பிரதிவாதிகளிடமோ தங்கம் மற்றும்

வெள்ளிப் பொருட்கள் இருக்கின்றன என்பதைக் காண்பிப்பதற்கு எள்ளளவு சான்றுமில்லை.

14. வாதி, வழக்குச் சொத்துகளின் பட்டியலில் அசையும் சொத்துகளான அட்டவணை "ஆ" மற்றும் அட்டவணை "இ"-யைச் சேர்த்துள்ளார் என்பதும், தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் இருந்திருக்குமானால், அவை வழக்குச் சொத்துகளின் பட்டியலின் பகுதியாக அமைந்திருக்கக்கூடும் என்ற பொருண்மையையும் நாங்கள் பரிசீலனைக்கெடுத்துள்ளோம்.

15. பகுதி பாகப்பிரிவினையானது, ஒரு குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்களான நபர்கள் தொடர்பாகவோ அல்லது அதனைச் சார்ந்த சொத்துகள் தொடர்பாகவோ இருக்கலாம். ஓர் உரிமை வழக்கில் வாதி இருக்கக்கூடிய சொத்துகளனைத்தையும் சேர்க்கவில்லை என்ற ஒரே காரணத்தின் அடிப்படையிலேயே பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்கானது தள்ளுபடி செய்யப்படுவதற்குரியது என்பது நன்கு வரையறுக்கப்பட்ட சட்டக் கோட்பாடாகும். அதாவது, பாகப்பிரிவினைக்கான வழக்கில் குடும்பச் சொத்துகளனைத்தையும் சேர்க்காமையானது, வழக்கைப் பாதிக்கிறது. இக்கோட்பாட்டைப் பயன்படுத்தும்பொருட்டு, சேர்க்காமல் விடுபட்டு இருப்பதாக கூறப்படும் சொத்தானது உண்மையில் கிடைக்கத்தக்கதாக இருத்தல்வேண்டும். பகுதி பாகப்பிரிவினையை எதிர்வாதமாக வைக்கும் தரப்பினர் எவரும், இருக்கக்கூடிய சொத்து தொடர்பான சில ஆதாரங்களை நீதிமன்றத்தின் முன்பாக வைத்து, அதனை நிலைநாட்டக்கூடியவராக இருத்தல்வேண்டும். பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்கில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் என தரப்பினர்களை புரிந்துகொள்ளும் மரபுமுறை பொருந்துவதில்லை, பிரதிவாதியாக வரிசைப்படுத்தப்பட்ட நபருங்கூட, விடுபட்ட தரப்பினர்களைச் சேர்த்தோ அல்லது விடப்பட்ட சொத்துகளைச் சேர்த்தோ வழக்குரையைத் திருத்தி, மனு தாக்கல் செய்ய முடியும். வழக்கின் தரப்பினர் என்ற கோட்பாடானது, பாகப்பிரிவினை வழக்கிற்குப் பொருந்தாது.



16. உண்மையில், மேல்முறையீட்டாளர்கள் இக்கோட்பாட்டை நன்கு புரிந்துகொண்டு, தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்களைக் காண்பிக்கின்ற வழக்குரையில் "ஈ" அட்டவணையைச் சேர்க்க விண்ணப்ப எண் 2702/2013-ஐ தாக்கல் செய்து வழக்குரையைத் திருத்த முயற்சி மேற்கொண்டுள்ளனர். எனினும், 2 அலமாரிகளை உடைத்து, அதனுள் தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்களை கண்டறியுமாறு இந்நீதிமன்றத்தால் ஒரு வழக்குரைஞர் ஆணையர் நியமிக்கப்பட்ட பின்னருங்கூட, அத்தகைய பொருட்கள் ஏதும் இருந்ததாகவோ அல்லது அடையாளமோ காணப்படவில்லை. மேல்முறையீட்டாளர்களால் வைக்கப்பட்ட வெற்று குற்றச்சாட்டைத் தவிர, மேல்முறையீட்டாளர்களால் கோரப்பட்டது போன்று, தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் ஏதும் இருந்ததை நிலைநாட்டுவதற்கு சான்றாதாரங்கள் ஏதும் அறவே இல்லை. உண்மையில் இருக்கின்ற கிடைக்கக்கூடிய சொத்தேதும் வினாவிற்கிடமாகும் பொழுது, பகுதி பாகப்பிரிவினை என்ற கோட்பாடானது பயன்படுத்தப்படவே முடியாது. எப்படியிருந்தாலும் ஒரு (அசையும் மற்றும் அசையாச்) சொத்தானது

உண்மையில் இருப்பதைத்தான் பிரிக்கமுடியுமேயன்றி, வெறுமையானதை அல்ல.

17. அறிவார்ந்த தனியமர் நீதியரசரின் நன்கு பரிசீலிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கிட நாங்கள் காரணம் எதையும் காணவில்லை மற்றும் இந்த முதலேற்புப் பிரிவு மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்வதன்மூலம், அறிவார்ந்த தனியமர் நீதியரசரின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நாங்கள் உறுதி செய்கின்றோம். எனினும், வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில், செலவுத்தொகைகள் குறித்து உத்தரவேதுமில்லை. அதன் விளைவாக, தொடர்புடைய விண்ணப்பமானது முடிக்கப்படுகிறது.

⌘❖⌘❖⌘



# மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

**(மதுரை நீதியராயம்)**

2017-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ஆம் நாள்

## முன்னிலை

**நீதியரசர் திரு. டி.எஸ். சிவஞானம்**
**மற்றும்**
**நீதியரசர் திரு. பி. வேல்முருகன்**

நீதிப்பேராணை மேல்முறையீடு (எம்.டி.) எண் **220/2017**
மற்றும்
உரிமையியல் பல்வகை மனு (எம்.டி.) எண் **2270/2017**

1. பள்ளி கல்வி இயக்குனர்,
கல்லூரி சாலை,
சென்னை - 600 006.

2. தலைவர்,
ஆசிரியர்கள் தேர்வாணையம்,
கல்லூரி சாலை,
சென்னை - 600 006.

3. அரசு முதன்மை செயலாளர்,
உயர் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை.

---

**2018 (1) சி.டி.சி. 524**

4. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
நாகர்கோயில்,
கன்னியாகுமரி மாவட்டம்
... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

எல். ஆர். மீனா ... எதிர்மேல்முறையீட்டாளர்

**வேண்டுரை**: நீ.பே.ம. (எம்.டி.) எண் 16069/2012-இல் பிறப்பிக்கப்பட்ட 29.01.2013-ஆம் தேதியிட்ட உத்தரவை நீக்கறவு செய்வதற்கு, உரிமைப் பட்டயக் கூறு 15-இன் கீழ் நீதிப்பேராணை மேல்முறையீடு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

பணிச் சட்டம் - நியமனம் - கல்வித் தகுதி - அரசுப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியரின் நியமனம் - பணிநாடுபவர், உயர் கல்வி, பட்டயப் படிப்பு மற்றும் இளநிலை பட்டப்படிப்பு (10+3+2) என்ற முறையில் கல்வித் தகுதி பெற்றுள்ளார் - அரசாணையானது, பத்தாம் வகுப்பு, மேல்நிலை பள்ளிக் கல்வி மற்றும் இளநிலை பட்டப்படிப்பு என்பதாக கல்வித் தகுதி முறையினை வகுத்துரைத்தது - மேல்நிலைப் பள்ளிக் கல்வித் தகுதியைப் பெறாதவருக்கு நியமனம் மறுக்கப்பட்டது - மாநில அரசால் வழங்கப்பட்ட செயலாணை, இரண்டு வருட மேல்நிலை பள்ளிப்படிப்புக்குப் பதிலாக, மூன்று வருட பட்டயப் படிப்பு நிறைவு செய்தலை அங்கீகரிக்கிறது - செயலாணை, எதிர்காலத்திற்கு பொருந்துமேயன்றி கடந்தகாலத்திற்கல்ல என்பது தேர்வு முகமையின் வாதமாகும் - முடிவு, அரசாணை, விதிக்கான திருத்தமல்ல மற்றும் அது இருந்துவரும் நிலைக்கான தெளிவாக்கமே - பணிநாடுவோரால் பெறப்பட்ட மூன்று வருட பட்டயப் படிப்பு செல்லத்தக்க பட்டயப் படிப்பாகும் என்று அரசு அங்கீகரித்தது - நீதிப்பேராணை மனுதாரருக்கு செயலாணையின் பலனை நீட்டிக்கின்ற தனியமர் நீதியரசரின் உத்தரவானது, எந்த வலிமைக்குறைவாலும் பாதிக்கப் படவில்லை - நீதிப்பேராணை மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.



**வழக்குரைஞர்கள்:**

திரு. வி. முருகானந்தம்,
கூடுதல் அரசு வழக்குரைஞர்
... மேல்முறையீட்டாளர்களுக்காக

திரு. டி. செந்தில் ... எதிர்மேல்முறையீட்டாளருக்காக

## தீர்ப்புரை

**நீதியரசர் திரு. டி.எஸ். சிவஞானம்**:

1. மேல்முறையீட்டாளர்/எதிர்மனுதாரர்களுக்காக ஆஜரான கற்றறிந்த கூடுதல் அரசு வழக்குரைஞர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்/நீதிப்பேராணை மனுதாரருக்காக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. டி. செந்தில் ஆகியோரின் வாதங்கள் கேட்கப்பட்டு, பதிவாவணத்தில் வைக்கப்பட்ட சான்றாதாரங்களும் கவனமாகப் பார்வையிடப்பட்டது.

2. நீ.பே.ம. (எம்.டி.) எண் 16069/2012-இல் பிறப்பிக்கப்பட்ட 29.01.2013-ஆம் தேதியிடப்பட்ட

உத்தரவை எதிர்த்து, பள்ளிக் கல்வி இயக்குனர் மற்றும் மூன்று பேர்களால் இந்த நீதிப்பேராணை மேல் முறையீடானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இரண்டாம் மேல்முறையீட்டாளர்/இரண்டாம் எதிர்மனுதாரரால் பிறப்பிக்கப்பட்ட 05.12.2012-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை செல்லாததாக்கவும், இரண்டாம் மேல்முறையீட்டாளர்/இரண்டாம் எதிர்மனுதாரரால் நடத்தப்பட்ட 2012-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வுக்கிணங்க, அரசுப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியர் (இளங்கலை பட்டதாரி ஆசிரியர்)-ஆக தன்னை நியமிப்பதற்கு 1 மற்றும் 2-ஆவது மேல்முறையீட்டாளர்கள்/1 மற்றும் 2-ஆவது எதிர்மனுதாரர்களை பணிக்கவும், எதிர்மேல்முறையீட்டாளர்/நீதிப்பேராணை மனுதாரரால் நீ.பே.ம. (எம்.டி.) எண் 16069/2012-இல் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. எதிர்மேல்முறையீட்டாளர்/நீதிப்பேராணை மனுதாரர் பட்டதாரி ஆசிரியராக நியமனஞ்செய்யப் படுவதற்கு தேவையான தகுதியைப் பெற்றிருந்தார் என்பது பரிசீலிக்கப்பட்டுள்ளதா? என்பதே இந்த நீதிப்பேராணை மனுவில் எழுப்பப்பட்ட பிரச்சனையாகும். காரணம் யாதெனில், எதிர்மேல்முறையீட்டாளர்/நீதிப்பேராணை மனுதாரர் பத்தாம் வகுப்பை முடித்த பிறகு, மூன்று வருடங்கள் பட்டயப் படிப்பைப் படித்து முடித்து, அதன்பிறகு, மூன்று வருடங்கள் பட்டப் படிப்பை (10+3+3) நிறைவு செய்தார் என்பதாகும். இந்த நீதிப்பேராணை நீதிமன்றம் 18.12.2012-ஆம் தேதியிடப்பட்ட மேல்நிலை கல்வித் துறையின் அ.ஆ. (பல்வகை) எண் 242-இன் அரசாணையைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இரண்டு வருட மேல்நிலைப் பள்ளிப்படிப்பு தகுதிக்கு பதிலாக, முறைப்படி மூன்று வருட பட்டயப் படிப்பை நிறைவு செய்தலை அரசு ஏற்றுக்கொண்டது. ஒரு நபர், பத்து வருட பள்ளிப் படிப்பையும், மூன்று வருட பட்டயப் படிப்பையும், அதன்பிறகு, இரண்டு வருட பட்டப்படிப்பையும் நிறைவு செய்திருந்தால், அவர் தகுதியுடையவராவார் என்று மேலும் கருத்தறிவிக்கப் பட்டது. எதிர்மேல்முறையீட்டாளர்/நீதிப்பேராணை மனுதாரர், வரலாறு பாடத்தில் மூன்று வருட இளங்கலை பட்டப்படிப்பை நிறைவு செய்வதற்கு முன்பு, கட்டடப் பொறியியலில் மூன்று வருட பட்டயப் படிப்பை படித்திருந்தார் என்று இந்த நீதிப்பேராணை நீதிமன்றம் கண்டறிந்தது. இவ்வாறாக வழக்கு மேற்படி அரசாணையால் உள்ளடக்கப்படுகிறது என்று தீர்மானித்து, நீதிப்பேராணை மனு அனுமதிக்கப்பட்டது.



5. மேற்படி பணியிடத்திற்கு தேர்வுசெய்வதற்கான அறிவிக்கை 07.03.2012 அன்று வெளியிடப்பட்டது மற்றும் அ.ஆ. (பல்வகை) எண் 242-இல் 18.12.2012 அன்று அரசாணை வழங்கப்பட்டது, ஆகவே இது முன்னுற செயல்படுவதாகக் கருதமுடியாது என்று மேல்முறையீட்டாளர்கள்/எதிர்மனுதாரர்களுக்காக ஆஜரான கற்றறிந்த கூடுதல் அரசு வழக்குரைஞர் வாதிட்டார்.

6. 18.12.2012-ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ. (பல்வகை) எண் 242 என்ற அரசாணையைப் பார்வையிட்டால், அது விதிக்குரிய திருத்தமல்ல, ஆனால், இருந்துவரும் நிலைக்குரிய தெளிவாக்கமே எனத் தெரியவருகிறது. 06.10.2010-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தைக் குறிப்பிடுகின்ற மேற்படி அரசாணையின்

முகப்புரை பகுதியைக் குறிப்பிடுவதன்மூலம் அது தெளிவாகக்கூடும், மேற்படி அரசாணையின் பொருட்பகுதி பின்வருமாறு எடுத்தியம்பப்படுவதாவது:

> @ghhit xdwþy goffggIl muR fojjjþy. gjjhk tFggþwFg gþd gIlag gogg gojJ gþdg. (B.E.) gIlg goggfsþy neuo ,uzIhk MzL gogg Kojj khzthfs. +2 gojJ KojJ. gþ/,/ Kojj khzthfSId rkkhff fUjggIL. cjtþg bghwþahsh gzþfF vLjJfbfhssggLfþdwdh vdWk. nkYk. gjjhk tFgg gojJ. gIlag goggþwFg gþd. jþwejbtsþ gyfiyffHfk Kykhf gIlggogg bgwW. gy muR gzþfsþy Vwfdnt ntiyaþy cssthfs. gzþtudKiw bratJ bjhIhghf jdþahfs bjhIheJ muRfF tþz zgg'fis mDggþ tUtjhy. ,gbghUs FwþjJ bjsþthd murhiz btsþaþLtjwfhf. 10Mk tFggþwF gþdg. nkyeþiy gssþg gogg (+2) goffhky. gIlaggogg gojJ. gþdg jþwejbtsþ gyfiyffHfk Kykhf gIlggogg gojJssthfis. 10Mk tFgg. nkyeþiy tFgg (+2) gojJ. gþdg jþwejbtsþ gyfiyf fHfk Kykhf gIlk bgwwthfSfF ,izahf ntiythaggþwF fUjyhkh vdw bghUs FwþjJ ,izf fytþ eþhzaj jFjþ FGtþy ghþryþjJ. mfFGtþd ghþeJiuaþid muRfF mDggþitfFkhW brayhsh. jkþHehL muRggzþahsh njhthizak nfILf bfhssggIlhh/@



7. மேலேயுள்ளதைப் பார்வையிட்டதன்பேரில், மேற்படி அரசாணை வெளியிடப்பட்டதன் நோக்கமே, பல்வேறு துறைகளில் ஏற்கெனவே பணியிலிருந்து கொண்டு, தங்களது பணிகளை முறைப்படுத்தலுக்கு கோருபவர்களான பணிநாடுவோர் வகையிலுள்ளோரைப் பரிசீலிப்பதற்காகவே எனத் தெரிகிறது. மேலும், பத்தாம் வகுப்பு தேர்ச்சியே தகுதிக்கான அளவுகோல் என்பதால், பணிநாடுவோரால் பெறப்பட்ட மூன்றாண்டுகள் பட்டயப் படிப்பு, செல்லத்தக்க பட்டயப் படிப்பே என்பதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது. இவ்வாறு அரசு அனைத்து அம்சங்களையும் பரிசீலித்து, 10+3+3 முறையில் படித்திருக்கும் பணிநாடுவோர், 10+2+3 முறையில் படித்திருக்கும் பணிநாடுவோருக்கு நிகரானவர்களாவர் என்று தீர்மானித்தது. ஆதலால் அரசால் பரிசீலிக்கப்படுவதற்கு நிலுவையில் இருக்கின்ற அனைத்து விடயங்களையும் அரசாணை உள்ளடக்குகிறது, ஆகவே, அரசாணையானது, 07.03.2012-ஆம் தேதியிடப்பட்ட தேர்ந்தெடுப்பு அறிவிக்கைக்கு முன்னதாகச் செயல்பாட்டிலிருப்பதாக கருதப்படவேண்டும். விடயத்தின் இந்த அம்சமானது, **ஏ. மங்களாம்பிகை -எதிர்- அரசு செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை மற்றும் ஒருவர், சி.டி.ஜெ. 2013 எம்.ஹெச்.சி. 4233**-இல் இந்த நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டது.

8. நீதியர் ஈராயம், **தமிழ்நாடு அரசு மற்றும் பலர் -எதிர்- ஆர். மலர்விழி, 2015 ரிட். எல்.ஆர். 912**-இல், பத்தாம் வகுப்பு தேர்ச்சிபெற்று, அதன்பிறகு 10+2+3 முறையில் உயர்நிலைக் கல்வி படிக்காமல், இளங்கலை தமிழ் இலக்கியத்தில் (பி.லிட்.) தேர்ச்சி

பெற்றவரான பணிநாடுவோரின் விடயத்தைப் பரிசீலிக்கையில், மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் தேர்ச்சிக்கான செல்லத்தக்க பதிலமைவாக இரண்டாண்டு ஆசிரியர் கல்விப் பட்டயப் படிப்பை பரிசீலிக்கலாமா? என்பதைக் குறித்த பிரச்சனையை பரிசீலனை செய்து, 18.12.2012-ஆம் தேதியிடப்பட்ட மேல்நிலைக் கல்வித்துறையின் அ.ஆ. (பல்வகை) எண் 242-இன் அரசாணையைக் கருத்திற்கொண்டபிறகு, தொடர்பில்லாத பாடங்களில் பெறப்பட்ட மூன்றாண்டுகள் கால அளவுடைய முறையான பட்டயப் படிப்புங்கூட மேல்நிலைப் பள்ளிப்படிப்பில் தேர்ச்சிபெற்றதற்கு நிகராகக் கருதப்படலாம் எனத் தீர்மானித்தது.

9. **நாடார் தங்க சுபா லஷ்மண், ஏ. -எதிர்- தமிழ்நாடு அரசு, 2014 (3) சி.டி.சி. 433** என்ற வழக்கில், நீதியர் பேராயத்திற்கு குறித்தனுப்பப்பட்ட கேள்வி யாதெனில், ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து பெறப்பட்ட பட்டமானது, மற்றொரு பல்கலைக் கழகத்திலிருந்து பெறப்பட்டதற்கு நிகரானது என அறிவித்து, அரசால் அமைக்கப்பட்ட குழுவால் வழங்கப்பட்ட சமமதிப்புச் சான்றிதழ் எதிர்கால செயல்பாட்டிற்காக மட்டுந்தானா? மற்றும் 01.07.2013-ஆம் தேதியிடப்பட்ட நீதிப்பேராணை மேல்முறையீடு (எம்.டி.) எண் 312/2013-இல் **என். கீதா -எதிர்- தமிழ்நாடு அரசு** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத்தால் எடுக்கப்பட்ட கருத்து சரிதானா? என்பதாகும். பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனத்தால் பட்டப்படிப்பு சான்றிதழ் எதுவும் வழங்கப்பட்ட தேதியிலிருந்து அதன் செல்லுந்தன்மையைக் கொண்டிருக்கும் என்று நீதியர் பேராயம் தீர்மானித்தது.



10. ஆதலால், நாங்கள் வழங்கியுள்ள மேற்படி சட்டநிலைப்பாடு மற்றும் பொருள்விளக்கத்தைக் கவனத்திற்கொண்டு, 18.12.2012-ஆம் தேதியிட்ட அ.ஆ. (பல்வகை) எண் 242-இல் அரசாணையின் பயனானது, பணிநாடுவோர் கல்வித் தகுதிபெற்ற தேதியிலிருந்து செயல்பாட்டுக்கு வரும் என்பது தெள்ளத்தெளிவு. ஆகவே, மறுத்துரைக்கப்பட்ட உத்தரவில் கற்றறிந்த தனியமர் நீதியரசரால் தெரிவிக்கப்பட்ட கருத்து முற்றிலும் சட்டப்படியானதாகும்.

11. மேற்சொன்ன அனைத்து காரணங்களுக்-காகவும், நீதிப்பேராணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுடன் தலையிடுவதற்கு எந்தவொரு காரணத்தையும் மேல்முறையீட்டாளர்கள் எண்பித்துக் காட்டவில்லை என நாங்கள் கருதுகிறோம். ஆகவே மேல்முறையீடு தள்ளுபடி செய்வதற்குரியதாகும் .

12. முடிவாக, நீதிப்பேராணை மேல்முறையீடு தோல்வியுறுகிறது மற்றும் அது தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. அதன் விளைவாக, தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்படுகிறது.

⌘❖⌘❖⌘

# மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

**(மதுரை நீதியராயம்)**

2018-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ஆம் நாள்

**முன்னிலை**

**நீதியரசர் திரு. கே. இரவிசந்திரபாபு**
**மற்றும்**
**நீதியரசர் திருமதி டி. கிருஷ்ணவள்ளி**

நீதிப்பேராணை மேல்முறையீடு (எம்.டி.) எண் **157/2018**

என். தாமரைசெல்வி ... மேல்முறையீட்டாளர்/
நீதிப்பேராணை மனுதாரர்

-எதிர்-

முதன்மை செயலாளர்,
தமிழ்நாடு மாநில அரசு சார்பாக,
உயர் கல்வித் துறை,
சென்னை - 600 009 மற்றும் பலர்
... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

கல்வி - பி.எட். பட்டப்படிப்பில் சேருதல் - தகுதி - மேல்முறையீட்டாளர்/மனுதாரர், 10-ஆம் வகுப்பு முடித்து, அதன்பின் மூன்றாண்டு பட்டயப் படிப்பை முடித்தார், அதன்பின் மேல்முறையீட்டாளர் பி.ஏ., (ஆங்கிலம்) படிப்பை தொலைத்தூரக் கல்வி மூலமாக படித்தார் - மேல்முறையீட்டாளர் பி.எட்., பட்டப்படிப்பைப்

படிப்பதற்கு 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் கல்வி நிலையத்தில் சேர்ந்தார் - 2-ஆம் எதிர்மேல்முறை-யீட்டாளர்/பல்கலைக்கழகமானது, குறிப்பிட்ட அரசாணையின் கீழ் கோரப்படுகின்றவாறு, அவர் 10+2+3 என்ற மாதிரியின்கீழ் முறைப்படியான கல்வியை முடிக்கவில்லை என்ற அடிப்படையில் பி.எட். படிப்பில் சேருவதற்கு அவருக்கு ஒப்புதலளிக்க மறுத்துவிட்டது - அவ்வாணையை எதிர்த்து மேல்முறை-யீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது, எனவே இந்த மேல்முறையீடு - மேல்முறையீட்டாளர் பி.எட். பட்டப்படிப்பில் சேருவதற்கு தகுதியுடையவரா? - ஒரு குறிப்பிட்ட கல்வி ஆண்டிற்கான குறிப்பிட்ட படிப்பிற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்காக நிர்ணயிக்கப் படுகின்ற கல்வித்தகுதியை முன்னுற இயங்குமாறு செயல்முறைப்படுத்தப்பட இயலாது - மேல்முறை-யீட்டாளரின் கல்வித்தகுதியானது, அத்தகைய தகுதி நிர்ணய அளவுகோலின் தேவைக்குள் பொருந்துமா? என்பது குறித்து அறிவதற்கு, அச்செயற்களத்தை கட்டுப்படுத்துவதற்குரிய காலகட்டத்திலுள்ள அரசாணையை மட்டுமே ஆராயவேண்டும் - குறிப்பிட்ட அரசாணையின் கீழ் கோரப்பட்டவாறு, மேல்முறையீட்டாளர் பி.எட். பட்டப்படிப்பில் சேரும் நாள்வரை அத்தகைய கல்வித்தகுதியைப் பெறவில்லை - பின்னாளில், அதுவும் ஒரு பணிநிமித்தமாக குறிப்பிட்ட பட்டப்படிப்புக்கு அல்லது பட்டயப் படிப்புக்கு சமமாகக் கருதப்படும் கல்வித்தகுதியானது, ஒரு குறிப்பிட்ட கல்வி ஆண்டிற்கான படிப்பில் சேருவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிக்கு இணையானதாக கருதப்படக்கூடாது -



தனி நீதிபதியின் உத்தரவில் தலையிட, மேல்முறையீட்டாளர் வழக்கை மெய்ப்பித்திருக்கவில்லை - மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**வழக்குரைஞர்கள்:**

தி/ள். டீ. இலஜபதி ராய் அவர்களுக்காக
திருமதி/செல்வி ஜெ. மீனாட்சி
... மேல்முறையீட்டாளருக்காக

திரு. எம். முத்து,
கூடுதல் அரசு வழக்குரைஞர்
... எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக

## தீர்ப்புரை

**நீதியரசர் திரு. கே. இரவிசந்திரபாபு**:

இந்த நீதிப்பேராணை மேல்முறையீடானது, 05.06.2017-ஆம் தேதியிடப்பட்ட நீ.பே.ம. (எம்.டி.) எண் 749/2013-இல் வழங்கப்பட்ட உத்தரவை எதிர்த்து கொண்டுவரப்பட்டுள்ளது.

2. மேல்முறையீட்டாளர், நீதிப்பேராணை மனுதாரராவார். அவர், 17.12.2012-ஆம் தேதியிடப்பட்ட இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரின் நடவடிக்கையை எதிர்த்தார் மற்றும் அதனைத் தொடர்ந்து, மூன்றாம் எதிர்மேல்முறையீட்டாளர்/கல்லூரியில் பி.எட். (ஆங்கிலம்) பட்டப்படிப்பை முடிக்க தன்னை அனுமதிக்குமாறு எதிர்மேல்முறையீட்டாளர்களை பணிக்கக் கோரினார். மேலும் அவர், தன்னை 25.02.2013-இலிருந்து

தொடங்கும் பி.எட். பட்டப்படிப்பு செய்முறை தேர்வுகளையும், 2013-ஆம் ஆண்டு மே மாதம் முதல் தொடங்கும் எழுத்துத் தேர்வினையும் எழுதுவதற்கு அனுமதிக்குமாறு 2 மற்றும் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களை பணித்து, அதனை செயலுறுத்துவதற்காக கோரி நீ.பே.ம. (எம்.டி.) எண் 2720/2013-இல் மற்றொரு நீதிப்பேராணை மனுவையும் தாக்கல் செய்தார்.

3. இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர்/ பல்கலைக்கழகமானது, 17.12.2012-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் 2012-2013-ஆம் ஆண்டின்போது பி.எட். பட்டப்படிப்புச் சேர்க்கைக்கு மாணவர்களின் கல்வித்தகுதியை நிர்ணயித்து, 28.06.2012-ஆம் தேதியிடப்பட்ட உயர் கல்வித் துறை, அரசாணை எண் 115-இன் கீழ் கோரப்பட்டவாறு, 10+2+3 மாதிரியின் கீழ் முறைப்படியான கல்வியை அவர் முடிக்கவில்லை என்ற அடிப்படையில் மூன்றாம் எதிர்மேல்முறையீட்டாளர்/ கல்வி நிலையத்தில் பி.எட். பட்டப்படிப்பில் சேருவதற்கு நீதிப்பேராணை மனுதாரருக்கு ஒப்புதலளிக்க மறுத்து விட்டது. நீதிப்பேராணை நீதிமன்றமானது பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் பரிசீலித்து, மாண்பு மிகு உச்ச நீதிமன்றத்தாலும், இந்நீதிமன்றத்தாலும் வழங்கப்பட்ட பல்வேறு தீர்முடிவுகளைப் பின்பற்றியும், பின்னர், இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர்/ பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட தகுதியை நீதிப்பேராணை மனுதாரர் பூர்த்தி செய்யவில்லை எனக் கண்டறிந்துள்ளது, ஆகவே பி.எட். பட்டப்படிப்புக்கு அவரது சேர்க்கைக்கு ஒப்புதலளிக்க பல்கலைக்கழகம் மறுத்தது சரியே. அதன்படி இரு நீதிப்பேராணை மனுக்களையும், நீதிப்பேராணை நீதிமன்றம் தள்ளுபடி



செய்துவிட்டது. ஆயினும், தற்போதைய நீதிப்பேராணை மேல்முறையீடானது, நீ.பே.ம. (எம்.டி.) எண் 749/2013-இல் பகரப்பட்ட உத்தரவை எதிர்த்துதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால், நீ.பே.ம. (எம்.டி.) எண் 2720/2013-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அறுதியானதும், இறுதியானதுமாகும்.

4. அவர் பி.எட். பட்டப்படிப்பில் சேருவதற்குரிய காலகட்டத்தில் முழுத் தகுதிபெற்றிருந்தார், ஆகவே, நீதிப்பேராணை நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்ட, பல்கலைக்கழகத்தின் மறுத்துரைக்கப்பட்ட ஆணையானது, சட்டத்தின் பார்வையில் நிலைநிறுத்தப்பட இயலாது என மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக, மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் 11.05.2017-ஆம் தேதியிட்ட உயர் கல்வித்துறையின் அ.ஆ. (1டி) எண் 158 மற்றும் 21.03.2018-ஆம் தேதியிட்ட உயர் கல்வித் (ஜி.1) துறையின் அ.ஆ (1டி) எண் 94-இல் பிறப்பிக்கப் பட்ட இரு அரசாணைகள்மீது முதன்மையாகச் சார்வுற்றார். 17.04.2017-ஆம் தேதியிட்ட நீ.பே.மே. (எம்.டி.) எண் 220/2017-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைக் கருத்திற்கொண்டு, அ.ஆ. எண் 158 மற்றும் அ.ஆ. எண் 94-இல் நிர்ணயிக்கப்பட்ட தகுதியை நீதிப்பேராணை மனுதாரரின் வழக்கிற்குங்கூட முன்னுற இயங்குமாறு செயல்முறைப்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் வாதிட்டார்.

5. அதற்குமாறாக, மேல்முறையீட்டாளர் பி.எட். பட்டப்படிப்பில் சேருவதற்குரிய காலத்தில் தேவையான தகுதியைப் பெற்றிருக்காததால் நீதிப்பேராணை மனுதாரரின் சேர்க்கைக்கு ஒப்புதலளிக்க பல்கலைக் கழகம் மறுத்தது சரியே என 1 மற்றும் 2-ஆம்

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக ஆஜரான கற்றறிந்த கூடுதல் அரசு வழக்குரைஞர் பணிந்துரைத்தார்.

6. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர், 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறை-யீட்டாளர்களுக்காக ஆஜரான கற்றறிந்த கூடுதல் அரசு வழக்குரைஞரின் வாதங்கள் கேட்கப்பட்டன.

7. இந்நீதிமன்றத்தின் முன்பாக மறுத்துரைக்கப்படாத பொருண்மைகள் யாதெனில், நீதிப்பேராணை மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 10-ஆம் வகுப்பை முடித்த பிறகு, கட்டிடப் பொறியாளர் படிப்பில் மூன்றாண்டு பட்டயப் படிப்பை படித்து, அதை 2005-ஆம் ஆண்டு முடித்தார். அதன்பின், நீதிப்பேராணை மனுதாரர்/மேல்முறையீட்டாளர் பி.ஏ. (ஆங்கிலம்) படிப்பை தொலைதூரக் கல்வி முறை மூலம் 2009-2012-ஆம் ஆண்டின்போது படித்து, அதனை 25.09.2012 அன்று முடித்தார் என்பதும் மறுக்கப்படவில்லை. மேல்முறையீட்டாளர் அதன்பின் மேற்படி கல்வித்தகுதியுடன் மூன்றாம் எதிர்மேல்முறை-யீட்டாளர் கல்வி நிலையத்தில் பி.எட். பட்டப்படிப்பில் சேர்ந்தார் என்பதும் மறுப்பதற்கில்லை. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகளில் பி.எட். பட்டப்படிப்பிற்கு மாணவர்களின் சேர்க்கைக்கான நுழைவுத்தகுதியும், கல்வித்தகுதியும் காலமுறைதோறும் நிர்ணயிக்கப் படுகிறது மற்றும் நீதிப்பேராணை மனுதாரரின் சேர்க்கைக்குரிய காலக்கட்டத்தில், அவருக்கு பொருந்துவதற்குரிய நுழைவுத்தகுதியும், கல்வித் தகுதியும் 28.06.2002-ஆம் தேதியிட்ட உயர் கல்வித் துறை அ.ஆ. பல்வகை எண் 115-இல் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் 10+2+3(15) அல்லது 11+1+3(15) என்ற கல்விமாதிரியின் கீழ் படித்து, மாநில அரசு குழுமத்தாலோ அல்லது சி.பி.எஸ்.சி.-யாலோ அல்லது வேறேதேனும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி/தேர்வு குழுமத்தாலோ நடத்தப்படும் தகுதித் தேர்வில் தேர்ச்சியடைந்திருக்கவேண்டும் என்று நீதிப்பேராணை நீதிமன்றத்தால் அதனுடைய உத்தரவில் எடுகுறிப்பிடப்பட்டதுமான மேற்படி அ.ஆ. பல்வகை எண் 115-ஐ பார்வையிட்டால் தெரியவரும்.



8. நீதிப்பேராணை மனுதாரர் +2 படிப்பை படிக்கவில்லை என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும், அவர் மூன்றாண்டுகால கட்டிடப் பொறியாளர் படிப்பில் பட்டயப் படிப்பு படித்திருந்ததை +2-க்கு சமமாகக் கருதவேண்டும் என நீதிப்பேராணை மனுதாரரால் கோரப்பட்டது. அத்தகைய வாதத்திற்கு ஆதரவாக, 18.01.2012-ஆம் தேதியிட்ட உயர்கல்வி (பி.1) துறையின் அ.ஆ. பல்வகை எண் 242-இன் மீது நீதிப்பேராணை மனுதாரர் சார்வுற்றார். அரசுத்துறைப் பணிநிமித்தமாகத்தான் அது பிறப்பிக்கப்பட்டது என மேற்படி அரசு ஆணையிலிருந்து தெரியவருகிறது, அதற்கும் பி.எட். பட்டப்படிப்புக்காக நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிக்கும் எந்தத் தொடர்புமில்லை, ஏனென்றால் அது, அந்த உரிய காலத்தில் பிறப்பிக்கப்பட்ட, 28.06.2012-ஆம் தேதியிட்ட உயர் கல்வித்துறையின் அ.ஆ. பல்வகை எண் 115-ஆல் மட்டுமே கட்டுப்படுத்தப் படுகிறது. நீதிப்பேராணை மனுதாரரால் பி.எட். பட்டப் படிப்பில் சேருவதற்கான அந்த உரிய காலக்கட்டத்தில் பெறப்பட்ட தகுதிகளுள் ஒன்றான, அத்தகுதிக்கு அ.ஆ. பல்வகை எண் 115 அனுமதி கொடுக்கவில்லை என்பதை நாங்கள் ஏற்கெனவே கண்டறிந்துள்ளோம்.

அதாவது, மூன்றாண்டு பட்டயப் படிப்பு, +2 படிப்பிற்கு சமமாக கருதப்படாது. சேர்க்கைக்கான தகுதியாக பொறியியலில் மூன்றாண்டு பட்டயப் படிப்பு, +2-க்கு சமமாக கருதப்படுதல்வேண்டும் என்பதாக நிர்ணய அளவுகோலில் ஒரு கூறு சேர்க்கப்பட்டுள்ளதால் அ.ஆ. (1.டி) எண் 158 மற்றும் அ.ஆ. பல்வகை எண் 94-இல் முறையே காண்பிக்கப்பட்டவாறு, 2017-2018 மற்றும் 2018-2019 ஆண்டுகளுக்குப் பின்னர் கல்வித்தகுதி விரிவாக்கப்பட்டது என்பதில் ஐயப்பாடில்லை.

9. தற்போது, நீதிப்பேராணை மனுதாரரால் அவருடைய சேர்க்கையை நிலைநிறுத்துவதற்கு அவ்விரு அரசாணைகளும் பயனுடையதாக்கிக் கொள்ளப்பட்டன. இவ்விரு அரசாணைகளும் 2017-2018 மற்றும் 2018-2019 ஆகிய கல்வியாண்டுகளுக்காக பிறப்பிக்கப்பட்டன என்ற ஒரு காரணத்திற்காக மேல்முறையீட்டாளரின் வாதத்தை எங்களால் மதிப்பிட இயலவில்லை. ஒரு குறிப்பிட்ட கல்வி ஆண்டிற்கான குறிப்பிட்ட படிப்பில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியை முன்னுற இயங்குமாறு செயல்முறைப்படுத்தப்பட இயலாது, அதற்குமாறாக, அத்தகைய தகுதி நிர்ணய அளவுகோலின் தேவைக்குள், நீதிப்பேராணை மனுதாரரின் கல்வித்தகுதி பொருந்துமா? என்பதைக் கண்டறிய அச்செயற்களத்தைக் கட்டுப்படுத்தியதற்குரிய காலக்கட்டத்திலுள்ள அரசாணையை மட்டுமே ஆராயவேண்டும் என்பதை சொல்லத்தேவையில்லை. இவ்வழக்கில், 28.06.2012-ஆம் தேதியிட்ட உயர் கல்வித் துறையின் அ.ஆ. பல்வகை எண் 115-இன் கீழ் கோரப்பட்டவாறு, மனுதாரர், பி.எட். பட்டப்படிப்பில்



சேரும் நாள்வரையிலுங்கூட அத்தகைய கல்வித் தகுதியைப் பெறவில்லை என்பது ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. 18.01.2012-ஆம் தேதியிட்ட உயர் கல்வி (பி.1) துறையின் அ.ஆ. பல்வகை எண் 242-இன் பயன், மாணவர் அக்கல்வித்தகுதியைப் பெறும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என்பதை 17.04.2017-ஆம் தேதியிட்ட நீ.பே.மே. (எம்.டி.) எண் 220/2017-இல் பிறப்பிக்கப்பட்ட ஓர் உத்தரவில் இந்நீதிமன்றத்தின் நீதியர் ஈராயம் கண்டறிந்தது என்பது உண்மை. இரு வழக்குகளின் பொருண்மைகளும், சூழ்நிலைகளும் முற்றிலும் வெவ்வேறான அடிப்படையிலானவை என நாங்கள் கண்டறிந்ததால், நீதியர் ஈராயத்தின் மேற்படி உத்தரவை, தற்பொழுதைய வழக்கில் பயன்படுத்துவதற்கு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்பது மிகவும் கடினமென நாங்கள் அறிகிறோம்.

10. எங்கள் முன்பான தற்பொழுதைய வழக்கில், 2012-2013-ஆம் ஆண்டின்போது பி.எட். பட்டப் படிப்பிற்கான தகுதி நிர்ணய அளவுகோல் குறித்த பிரச்சனை அடங்கியுள்ளது என்பதோடு, மேற்படி வழக்கில் நீதியர் ஈராயத்தின் முன்பு உள்ள பிரச்சனை என்னவென்றால், அதிலுள்ள நீதிப்பேராணை மனுதாரர், பட்டதாரி ஆசிரியராகக் கருதப்படுவதற்கான தேவையான தகுதியைப் பெற்றிருந்தாரா? என்பதாகும். மேலும், பின்னாளில், அதுவும் பணிநிமித்தமாக, ஒரு குறிப்பிட்ட பட்டப்படிப்புக்கு அல்லது பட்டயப் படிப்புக்கு சமமாகக் கருதப்படும் கல்வித்தகுதியானது ஒரு குறிப்பிட்ட கல்வி ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிக்கு இணையானதாக கருதப்படமுடியாது. ஆகையால், அ.ஆ. பல்வகை எண்கள் 94 மற்றும்

158-இல் உள்ள தகுதி நிர்ணய அளவுகோல் முன்னுற இயங்குமாறு செயல்முறைப்படுத்தப்படவேண்டும் என்ற அறுதியுரைக்காக, நீதியர் ஈராயத்தின் மேற்படி உத்தரவானது மேல்முறையீட்டாளருக்கு உதவிபுரியாது என நாங்கள் காண்கிறோம். ஆகையால் வழக்கின் தகுதிப்பாட்டை விரிவாகப் பரிசீலித்து நீதிப்பேராணை மனுவைச் சரியாக தள்ளுபடி செய்துள்ள கற்றறிந்த தனி நீதிபதி அவர்களின் உத்தரவில் தலையிட மேல்முறையீட்டாளர் வழக்கை மெய்ப்பித்திருக்கவில்லை என நாங்கள் அறிகிறோம். எனவே, நீதிப்பேராணை மேல்முறையீட்டில் ஏதொரு தகுதிப்பாட்டையும் நாங்கள் காணவில்லை. அதற்கிணங்க வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

... மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

⌘❖⌘❖⌘



# மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

2018-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9-ஆம் நாள்

## முன்னிலை

**நீதியரசர் செல்வி வி.எம். வேலுமணி**

உரிமையியல் சீராய்வு மனு (பி.டி.) எண் **3796/2013**
மற்றும்
பல்வகை மனு எண் **1/2013**

எம்.ஒ.எச். அஸ்லாம் ... மனுதாரர்

-எதிர்-

எவர்கிரீன் டியூப் வெல் சர்வீசஸ் (பி)
லிமிடெட், அதன் அதிகாரப்பூர்வ
சார்பாளர் திரு. பழனியாண்டி,
த/பெ. திருமுடி முதலியார்
மற்றும் பலர் ... எதிர்மனுதாரர்கள்

உரிமையியல் விசாரணைமுறை - சொத்துப் பேணுநரின் நியமனம் - கூட்டுப்பங்கு நிறுவனக் கலைப்பு - நிதியானது, ஒரு நிறுவனத்திடமிருந்து, 2-ஆம் எதிர்மனுதாரரான நிறுமத்திற்கு மாற்றிவிடப்பட்டது என்ற காரணத்தின்பேரில் கூட்டுப்பங்கு நிறுமத்தைக் கலைக்கவும், கணக்குகளை எடுத்துக்கொள்ளவும், மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டதெனினும், மேல்முறையீட்டில் இந்நீதிமன்றம் உரிமை வழக்கைத் தீர்ப்பாணையிட்டது -

விசாரணை நீதிமன்றம், மனுதாரரின் விண்ணப்பத்தின் பேரில், கூட்டுப்பங்கு நிறுவனம், 1-ஆவது எதிர்மனுதாரரான நிறுமம் என்ற இரண்டிற்கும் சொத்துப்பேணும் தரப்பினராக மனுதாரரை நியமித்தது - 2-ஆவது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது - சொத்துப்பேணும் தரப்பினராக மனுதாரரை நியமிக்கும் உத்தரவுகளை நீக்கறவு செய்து, 1-ஆவது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது, ஆனால் மேல்முறையீட்டில் அவ்விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டதால்தான் இச்சீராய்வு - சொத்துப்பேணும் தரப்பினராக மனுதாரரின் நியமனத்தை எதிர்த்து, 1-ஆவது எதிர்மனுதாரரின் அதிகாரப்பூர்வமான சார்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் நிலைக்கத் தக்கதா? - 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களின் ஆட்சேபணைகள் நிராகரிக்கப்பட்ட பின்னர், அதே காரணத்தின்பேரிலேயே, 1-ஆவது எதிர்மனுதாரர் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தார் - கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகள் முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திடமிருந்தது - 1-ஆவது எதிர்மனுதாரரான நிறுமத்தின் சார்பாளராயிருக்க அதிகாரப்பூர்வமான சார்பாளருக்கு விசாரணை நீதிமன்றம் அனுமதியளிக்க-வில்லை - அதிகாரப்பூர்வமான சார்பாளர் விண்ணப்பம் தாக்கல் செய்தபோது, தன்னை, நிறுமத்தின் சார்பாளராகயிருக்க அதிகாரமளிக்கின்றதாகச் சொல்லப்படும் தீர்மானத்தைத் தாக்கல் செய்யவில்லை - அதிகாரப்பூர்வ சார்பாளர், 1-ஆவது எதிர்மனுதாரரான நிறுமத்தின் சார்பாளராயிருக்க வழக்குரை உரிமை கொண்டிருக்கவில்லை - அவரால் தாக்கல் செய்யப்பட்ட



விண்ணப்பமானது, நுட்ப காரணம், தகுதிப்பாடு ஆகிய இரண்டின்பேரிலும் நிலைக்கத்தக்கதல்ல - விசாரணை நீதிபதி, உறுதியானதும், செல்லத்தக்கதுமான காரணத்தைக் கூறி, விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தார் - மேல்முறையீட்டு நீதிபதி, உரியமுறையில் பொருண்மைகளை மதிப்பீடு செய்யாமல் குறிப்பாக ஒரே பரிகாரத்தின்மீது 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டினைத் தள்ளுபடி செய்து, பிழைபாடான காரணங்களின்பேரில் மேல்முறையீட்டை அனுமதித்தது - மேல்முறையீட்டு நீதிபதியின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது - சீராய்வு அனுமதிக்கப்பட்டது.

**வழக்குரைஞர்கள்:**

தி/ள். டி.எஸ். பாஸ்கரன் அவர்களுக்காக
திருமதி/செல்வி சித்ரா சம்பத்
மூத்த வழக்குரைஞர்,
... மனுதாரருக்காக

திரு. ஆர். தியாகராஜன்
... 1-ஆம் எதிர்மனுதாரருக்காக

## உத்தரவு

சீராய்வு மனுதாரரானவர், உரிமை வழக்கின் வாதியும், உ.ப.மே.-இல் முதல் எதிர்மனுதாரருமாவார். முதல் எதிர்மனுதாரர், உரிமை வழக்கில் மூன்றாவது தரப்பினரும், உ.ப.மே.-இல் மேல்முறையீட்டாளருமாவார், இரண்டாவது எதிர்மனுதாரர், உரிமை வழக்கில்

இரண்டாவது பிரதிவாதியும், உ.ப.மே.-இல் இரண்டாவது எதிர்மனுதாரருமாவார். 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள், இரண்டாவது பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளும், உ.ப.மே.-இல் 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களுமாவர்.

2. மனுதாரர், பாண்டிச்சேரி சார்பு நீதிமன்றக் கோப்பிலுள்ள மு.வ. எண் 207/1978-இல் உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார். அவர், எவர்கிரீன் டியூப் வெல் சர்வீசஸ் என்ற கூட்டுப்பங்கு நிறுவனத்தைக் கலைக்கவும், 01.07.1993 முதல் உரிமை வழக்கிட்ட நாள் வரையிலான கணக்குகளை எடுத்துக்கொள்ளவும், வழக்குரையில் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் சொத்துகளையும், பிற சொத்துகள் என்னவெல்லாம் கண்டறியப்படுகிறதோ, அவற்றை மதிப்பீடு செய்யவும், கூட்டுப்பங்கு நிறுவனத்திற்கு, அவரிடமிருந்து வரவேண்டிய நிலுவைத்தொகை எதுவும், நிறுவனத்தின் ஒவ்வொரு பங்குதாரரும் நீதிமன்றத்தில் செலுத்துவதற்கு பணித்தும் மற்றும் பிற பரிகாரங்களுக்கும், நிறுவனத்தை முழுமையாக மூடும்வரையில் அதனுடைய சொத்துகள் மற்றும் பொறுப்படைவுகளுடன் மேலாண் பொறுப்பை எடுத்துக்கொள்ள சொத்துப்பேணுநர் ஒருவரை நியமித்து, முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிப்பதற்காகவும், நிரந்தர உறுத்துக்கட்டளைக்காகவும், மேற்படி உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார். எதிர்வழக்காடலுக்குப் பிறகு, மேற்படி உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர், இந்நீதிமன்றத்தின் கோப்பில் மே.வ. எண் 260/1987-ஐ தாக்கல் செய்தார். மேற்படி மேல்முறையீடானது, 26.04.1999-ஆம் தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை மூலம்



இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, கூட்டுப்பங்கு நிறுவனத்தைக் கலைக்கவும், கணக்குகளை எடுத்துக்கொள்ளவும் முதல்நிலைத் தீர்ப்பாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. உரிமை வழக்கில், இரண்டாவது எதிர்மனுதாரராலும், இரண்டாவது பிரதிவாதியான ஏ.எம்.எஸ். ஐசக் என்பவராலும் தாக்கல் செய்யப்பட்ட உரிமைப் பட்டய மேல்முறையீடு எண் 105/1999, இந்நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத்தால் 03.12.2002 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட சி.அ.ம.-ம் தள்ளுபடி செய்யப்பட்டது.

3. மனுதாரர் சொத்துப்பேணுநரை நியமிப்பதற்காக வ.வி எண் 738/1999-ஐ தாக்கல் செய்தார். விசாரணை நீதிமன்றம், 03.03.2003-ஆம் தேதியிட்ட உத்தரவு மூலம் மேற்படி விண்ணப்பத்தை அனுமதித்தது, ஆனால், சொத்துப்பேணுநர் எவரையும் நியமிக்கவில்லை. மனுதாரர், சொத்துப்பேணுநர் பெயரைத் தெரிவிப்பதற்கு குறிப்பாணை ஒன்றைத் தாக்கல் செய்தார், அது 07.09.2004-ஆம் தேதியன்று விசாரணை நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. இதற்கிடையில், இதிலுள்ள இரண்டாவது எதிர்மனுதாரரும், உரிமை வழக்கின் இரண்டாவது பிரதிவாதியும், வழக்குரை திருத்தம் கோரி வ.வி. எண் 732/1999-ஐ தாக்கல் செய்தனர். மேற்படி வ.வி. தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி உத்தரவை எதிர்த்து, இதிலுள்ள எதிர்மனுதாரரும், இரண்டாவது பிரதிவாதியும், வ.வி. எண் 732/1999-இல் அவர்களுக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து உ.சீ.ம. எண் 732/2005-ஐ தாக்கல் செய்தனர். இந்நீதிமன்றம் 17.08.2005-ஆம் தேதியிட்ட உத்தரவுமூலம்,

சொத்துப்பேணுநர் பெயரைக் குறிப்பிடவும், மேலும் வழக்குரைஞர் ஆணையர் ஒருவரை நியமிக்கவும் விசாரணை நீதிமன்றத்தைப் பணித்தது. நீதிமன்றத்தில் சொத்துப்பேணுநரின் தேர்வு பட்டியல் இல்லாததால், மனுதாரர் தன்னை சொத்துப்பேணும் தரப்பினராக நியமிப்பதற்கு வ.வி. எண் 1446/2005-ஐ தாக்கல் செய்தார். மேற்படி விண்ணப்பமானது, சொத்துப்பேணும் தரப்பினர் எவரும் நியமிக்கப்படவில்லை என்ற காரணத்தின்பேரில், 21.11.2005 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. தள்ளுபடியான மேற்படி உத்தரவை எதிர்த்து, மனுதாரர் உ.சீ.ம. எண் 3656/2007-ஐ தாக்கல் செய்தார். இந்நீதிமன்றம் 27.11.2007-ஆம் தேதியிட்ட உத்தரவு மூலம் உ.சீ.ம.-ஐ அனுமதித்து, வ.வி. எண் 1446/2005-ஐ மீட்டளித்து, வ.வி-ஐ தகுதிப்பாட்டின்பேரில் முடிவு செய்ய விசாரணை நீதிமன்றத்தைப் பணித்தது. விசாரணை நீதிமன்றம், 18.10.2010-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம், கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகளுக்கு சொத்துப்பேணும் தரப்பினராக மனுதாரரை நியமித்தும், இதிலுள்ள முதல் எதிர்மனுதாரரின் மேலாண்பொறுப்பை ஏற்பதற்கு மனுதாரருக்கு உத்தரவிட்டும் வ.வி. எண் 1446/2005-ஐ அனுமதித்தது.

4. இரண்டாவது எதிர்மனுதாரரும், உரிமை வழக்கிலுள்ள இரண்டாவது பிரதிவாதியும், மேற்படி உத்தரவை எதிர்த்து, உ.ப.மே. எண் 7/2010-ஐ தாக்கல் செய்தனர். எதிர்வழக்காடலுக்குப் பிறகு, மேற்படி உ.ப.மே. தள்ளுபடி செய்யப்பட்டது. முதல் எதிர்மனுதாரரின் மேலாண்பொறுப்பேற்க மனுதாரரை, சொத்துப்பேணும் தரப்பினராக நியமித்து, வ.வி. எண் 1446/2005-இல் பிறப்பிக்கப்பட்ட 18.10.2010-ஆம் தேதியிடப்பட்ட



உத்தரவுகளை நீக்கறவு செய்வதற்கு முதல் எதிர்மனுதாரர் வ.வி. எண் 138/2011-ஐ தாக்கல் செய்தது. மேற்படி வ.வி. எண் 138/2011, 16.03.2011 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. வ.வி. எண் 1386/2011-இல் பிறப்பிக்கப்பட்ட 16.03.2011-ஆம் தேதியிட்ட உத்தரவை எதிர்த்து, முதல் எதிர்மனுதாரர் உ.ப.மே. எண் 2/2011-ஐ தாக்கல் செய்தது. 08.04.2013-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மூலம், வ.வி. எண் 138/2011-ஐ தள்ளுபடி செய்த உத்தரவு நீக்கறவு செய்யப்பட்டு, உ.ப.மே. எண் 2/2011 அனுமதிக்கப்பட்டது.

5. உ.ப.மே. எண் 2/2011-இல் பிறப்பிக்கப்பட்ட மேற்படி உத்தரவுக்கெதிராக, தற்பொழுதைய உரிமையியல் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரருக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் பணிந்துரைத்ததாவது:-

(அ) உரிமை வழக்கில் மூன்றாந்தரப்பினரான முதல் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பமும், மேல்முறையீடும் நிலைக்கத் தக்கதல்ல.

(ஆ) கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகள் அனைத்தும் முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திடம் உள்ளன மற்றும் இப்பொருண்மையானது, இரண்டாவது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) முதல் எதிர்மனுதாரரால் எழுப்பப்பட்ட காரணங்கள், முன்தீர்ப்புத் தடை கோட்பாடுகளால் அகற்றப்படுகின்றன.

(ஈ) நிறுமத்தின் இயக்குநரான இரண்டாவது பிரதிவாதியாலும் உரிமை வழக்கில் மேற்படியான காரணங்கள் எழுப்பப்பட்டன மற்றும் இது முதல் மேல்முறையீட்டில் இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு, உ.ப.மே. மற்றும் சி.அ.ம.-இல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

(உ) மனுதாரர் கூட்டுப்பங்கு நிறுவனச் சொத்துகளின் பட்டியலைக் கொடுத்துள்ளார் மற்றும் இச்சொத்துகளனைத்தும் முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திடம் உள்ளன.

(ஊ) முதல் மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலைத் தீர்ப்பாணையில் இந்நீதிமன்றம் கூட்டுப்பங்கு நிறுவனத்தைக் கலைத்து, வழக்குரைப் பட்டியலில் விவரிக்கப்பட்டவாறு, தற்போது முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் உடைமையிலுள்ள நிறுவனத்தில் சொத்துகள் கணக்கு வைக்கப்படவேண்டுமென உத்தரவிட்டது மற்றும் மனுதாரர், சொத்துப்பேணுநரை நியமிப்பதற்கான விண்ணப்பத்தில் நிறுமத்திற்கு எதிராக முதன்முறையாக பரிகாரம் கோருகின்றார் எனக் கூறுவது சரியல்ல.

(எ) இந்நீதிமன்றம் முதல்நிலைத் தீர்ப்பாணையில், நிறுவனத்தை மூடும்வரையுள்ள நடைமுறைகள் அனைத்தும் முடிக்கப்படும்வரை, அதனுடைய அனைத்து சொத்துகள் மற்றும் பொறுப்படைவு-களுடன் நிறுவனத்தின் பொறுப்பேற்க சொத்துப் பேணுநரை நியமிக்குமாறு விசாரணை நீதிமன்றத்தைப் பணித்தது.



(ஏ) முதல் எதிர்மனுதாரரான நிறுமம், நிறுவனத்தின் சொத்துகளனைத்தையும் எடுத்துக்கொண்டு, நிறுமத்தின் பெயரிலேயே நிறுவனத்தின் தொழிலை நடத்திவருவதால், நிறுவனத்திற்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை நிறுமத்தைக் கட்டுப்படுத்துகிறது. மேல் முறையீட்டைத் தாக்கல் செய்த நபர், முதல் எதிர்மனுதாரரின் இயக்குநர் அல்லர் மற்றும் நிறுமத்தின் இயக்குநரால் எடுக்கப்படாத ஒரு புதிய வாதத்தை எடுத்துவருகின்றார்.

(ஐ) உ.ப.மே. எண் 2/2011-இல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ள மூன்றாந்தரப்பினர், தான், முதல் எதிர்மனுதாரரின் சார்பாளராக அதிகாரம் கொண்டிருக்கும் ஒரு தரப்பினர் என்பதை மெய்ப்பிக்கத் தவறிவிட்டார்.

7. முதல் எதிர்மனுதாரருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டதாவது, முதல் எதிர்மனுதாரர் உரிமை வழக்கின் தரப்பினர் அல்லர்; முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திற்கு எதிராக பரிகாரம் ஏதும் கோரப்படவில்லை. முதல் எதிர்மனுதாரர், சட்டப்படியான தனி நிறுமமாகும் மற்றும் கூட்டுப்பங்கு நிறுவனத்திற்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை நிறுமத்தைக் கட்டுப்படுத்தாது. விசாரணை நீதிபதி, பொருண்மைகள் அனைத்தையும் பரிசீலனை செய்யாமல், முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் மேலாண் பொறுப்பேற்க தரப்பினரான மனுதாரரை சொத்துப்பேணுநராக நியமனஞ்செய்தார். கற்றறிந்த மேல்முறையீட்டு நீதிபதி, விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை நீக்கறவு செய்வதற்கான செல்லத்தக்க

காரணத்தை அளித்துள்ளார். முதல் மேல்முறையீட்டில், இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலைத் தீர்ப்பாணையின்படி, கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகளின் பொறுப்பேற்பதற்கு மட்டுமேயன்றி நிறுமத்தையல்ல மற்றும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைக் கலைப்பதற்கான நடைமுறைகள் அனைத்தும் முடிவுபெறும் வரையில் மட்டுமே அதனை மேலாண் செய்யவும் சொத்துப்பேணுநர் ஒருவரை நியமிக்கலாம் என்பதாகும். முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் சொத்துகளின் பொறுப்பேற்பதற்கு சொத்துப்பேணுநரை நியமனஞ்செய்யும் உத்தரவேதும் இல்லை.

8. மனுதாரருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், முதல் எதிர்மனுதாரருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் ஆகியோரின் வாதங்கள் கேட்கப்பட்டு, பதிவாவணத்திலுள்ள சான்றாதாரங்களும் பார்வையிடப் பட்டது.

9. மேற்படி கூட்டுப்பங்கு நிறுவனத்தின் நிதி, சொத்துகள் மற்றும் தொழில் ஆகியவை, இதிலுள்ள முதல் எதிர்மனுதாரரான எவர்கிரீன் டியூப் வெல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்-க்கு மாற்றிவிடப்பட்டது என்ற காரணத்தின்பேரில், மனுதாரர், எவர்கிரீன் டியூப் வெல் சர்வீசஸ் என்ற கூட்டுப்பங்கு நிறுவனத்தைக் கலைப்பதற்காக உரிமை வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். அவ்வுரிமை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மே.வ. எண் 260/1987-இல் உள்ள மேல்முறையீடு, இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, உரிமை வழக்கு தீர்ப்பாணையிடப்பட்டது. 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட முதலேற்புப் பிரிவு மேல்முறையீடும், சிறப்பு அனுமதி மனுவும்



தள்ளுபடி செய்யப்பட்டன. கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகளுக்கும், தனியார் நிறுமத்திற்கும் பொறுப்பேற்க, சொத்துப்பேணுநரை நியமனம் செய்வதற்காக வ.வி. எண் 738/1999-ஐ மனுதாரர் தாக்கல் செய்தார். மேற்படி விண்ணப்பம் 03.03.2003-ஆம் தேதியன்று அனுமதிக்கப்பட்டது. முதல் எதிர்மனுதாரரான நிறுமம், சொத்துப்பேணுநரை நியமனஞ்செய்வதற்கான உத்தரவை நீக்கறவு செய்வதற்கு வ.வி. எண் 2249/2003-ஐயும், தடை உத்தரவுக்காக வ.வி. எண் 2252/2003-ஐயும் தாக்கல் செய்தது. மனுதாரர் தன்னை சொத்துப்பேணும் தரப்பினராக நியமிப்பதற்கு, வ.வி. எண் 1446/2005-ஐ தாக்கல் செய்தார். 18.10.2010-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் மனுதாரர், கூட்டுப்பங்கு நிறுவனம், முதல் எதிர்மனுதாரரான நிறுமம் என்ற இரண்டிற்கும் சொத்துப்பேணும் தரப்பினராக நியமிக்கப்பட்டார். 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் உ.ப.மே. எண் 7/2010-ஐ தாக்கல் செய்தனர் மற்றும் அது எதிர்வழக்காடலுக்குப் பிறகு, 19.01.2011-ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது. 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள், உ.ப.மே. எண் 7/2010-இன் தள்ளுபடி உத்தரவுக்கெதிராக, உ.சீ.ம. எண் 2078/2011-ஐ தாக்கல் செய்தனர், பின்னர் அந்த உ.சீ.ம. திரும்பப் பெறப்பட்டதால் தள்ளுபடி செய்யப்பட்டது. முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் மேலாளராக சொல்லப்படுகின்ற பழனியாண்டி என்பவர், முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் சார்பாளராயிருப்பதற்கு தன்னை அனுமதிக்குமாறு, வ.வி. எண் 864/2007-ஐ தாக்கல் செய்தார். அவருடைய கூற்றுப்படி அவர், உரிமை வழக்கில், முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின்

சார்பாளராயிருப்பதற்கு குழுமத்தின் தீர்மானத்தின்படி, அதிகாரமளிக்கப்பட்டார். அவர், மேற்படி விண்ணப்பத்துடன் தீர்மானம் எதனையும் தாக்கல் செய்யவில்லை.

10. மனுதாரர் எதிருரை தாக்கல் செய்து, முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் மேலாண் இயக்குநரான ஷாஜகான் என்பவரின் பணியாள்தான் எதிர்மனுதாரர் என்றும், அவர், முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் மேலாளர் அல்லர் என்றும், அவர், முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் சார்பாளராயிருப்பதற்கு அதிகாரமளிக்கப்படவில்லை என்றுமான காரணங்களின்பேரில் மேற்படி விண்ணப்பத்தை எதிர்த்தார். ஷாஜகான், முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் மேலாண் இயக்குநராக பதவி விலகினார் என்ற பொருண்மையையும் அவர் மறுத்துரைத்தார். அதற்கு மாறாக, மேற்படி ஷாஜகான், நீதிமன்றத்தின் முன்பாக முன்னிலையாக பணிக்கப்பட்டு, பல்வேறு விண்ணப்பங்கள் 25.09.2003 முதல் 14.02.2011 வரை தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்கள் மேற்படி விண்ணப்பங்களுக்கு எதிருரை தாக்கல் செய்தனர் மற்றும் 27.10.2003 முதல் 14.02.2011 வரை ஷாஜகானால் விசாரணைக்கான ஒத்திவைப்புகள் கோரப்பட்டது. 238 ஒத்திவைப்புகளுக்கு பிறகு, மேற்படி ஷாஜகான், முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் மேலாண் இயக்குநர் என்ற பதவியிலிருந்து விலகிவிட்டார் எனச் சொல்லப்பட்டது.

11. மேற்படி பழனியாண்டி, ஆவணங்களைத் தாக்கல் செய்ததிலான தாமதத்தை மன்னிக்கக்கோரி, வ.வி. எண் 864/2007-இல் வ.வி எண் 105/2008-ஐ தாக்கல் செய்தார், அதாவது, இயக்குநர் குழுமம் உரிமை வழக்கை எதிர்த்துரைக்க அவருக்கு அதிகாரம்



அளித்துள்ளது. இரு விண்ணப்பங்களும் நிலுவையிலிருக்கையில், மேற்படி பழனியாண்டி, முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திற்கான சொத்துப்பேணும் தரப்பினராக மனுதாரரை நியமித்து, வ.வி.எண் 1446/2010-இல் 18.10.2010-ஆம் தேதியிட்ட உத்தரவை நீக்கறவு செய்வதற்கு வ.வி. எண் 138/2011-ஐயும் தாக்கல் செய்தார். மனுதாரர் எதிராணையுறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்து, அதனை எதிர்த்தார். கற்றறிந்த நீதிபதி, தரப்பினர்களால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளைப் பரிசீலித்து, கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகள் எங்கெல்லாம் உள்ளனவோ, அவற்றையெல்லாம் உடைமைகொண்டு, அவற்றிலிருந்து வரும் வருமானத்தை உறுதிப்படுத்தவேண்டும் என்றும், நிறுவனத்தின் சொத்துகள், முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின் கைகளிலுள்ளன என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தீர்மானித்து, விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தார். முதல் எதிர்மனுதாரர், உத்தரவை எதிர்த்து, உ.ப.மே. எண் 2/2011-ஐ தாக்கல் செய்தார். மனுதாரர், கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகளை எடுத்துக்கொண்டு, மேற்படி நிறுவனத்தைக் கலைப்பதற்காக உரிமை வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்நீதிமன்றம் கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகளை மட்டும் உடைமை கொள்வதற்காக முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பித்தது என்றும், முதன்முறையாக மனுதாரர், உரிமை வழக்கின் தரப்பினரல்லாத முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திற்கு எதிராக பரிகாரம் கோருகின்றார் என்றும் தீர்மானித்து, மேல்முறையீட்டு அதிகாரி மேல்முறையீட்டை அனுமதித்தார்.

12. முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திற்கு சொத்துகளும், நிதியும் மாற்றிவிடப்பட்டுள்ளன என்ற காரணத்தின்பேரில், கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகளின் உடைமையை எடுத்துக்கொண்டு, மேற்படி நிறுவனத்தை கலைப்பதற்கான உரிமை வழக்கை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்று பதிவாவணங்களிலுள்ள சான்றாதாரங்களிலிருந்து தெரியவருகிறது. முதல் எதிர்மனுதாரரான நிறுமம், கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகளை உடைமை கொண்டுள்ளனர் என்று ஒப்புக்கொண்டிருந்தாலும், அவர்கள் கூட்டுப்பங்கு நிறுவனத்திலிருந்து அச்சொத்துகளை வாங்கி, கூட்டுப்பங்கு நிறுவனத்தால் வாங்கப்பட்ட கடன் தொடர்பான நிலுவைத் தொகைகளைச் செலுத்தி கடனைத் தீர்த்துள்ளனர் என்று கூறினர். உரிமை வழக்கு அல்லது மேல்முறையீடு நிலுவையிலிருக்கும்பொழுது, இந்த நிலைப்பாடு, 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களால் எடுக்கப்படவில்லை. மேலும், மனுதாரரால் உ.சீ.ம. உட்பட பல எண்ணிக்கையிலான நடவடிக்கைகள் இந்நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட பிறகு, முதல் எதிர்மனுதாரரான நிறுமம் மற்றும் கூட்டுப்பங்கு நிறுவனம் என்ற இரண்டிற்குமான, கூட்டுப்பங்கு நிறுவனத்திற்கு சொத்துப்பேணும் தரப்பினராக மனுதாரரை நியமித்து, இறுதியாக வ.வி. எண் 1446/2010 முடிக்கப்பட்டது. உரிமை வழக்கில் பிரதிவாதிகளான 2 முதல் 5 வரையிலான எதிர் மனுதாரர்கள், உ.ப.மே. எண் 7/2010-ஐ தாக்கல் செய்து அவ்வுத்தரவை எதிர்த்தனர். மேற்படி உ.ப.மே.-ஐ எதிர்த்துரைத்த பிறகு, அது 19.01.2011 அன்று தகுதிப் பாட்டின்பேரில் தள்ளுபடி செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள்



உ.ப.மே. எண் 7/2010-இன் தள்ளுபடியை எதிர்த்து, உ.சீ.ம. எண் 2078/2011-ஐ தாக்கல் செய்தனர். மேற்படி உ.சீ.ம. திரும்பப்பெறப்பட்டதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

13. உ.சீ.ம. தள்ளுபடிக்கு பிறகு, முதல் எதிர்மனுதாரர், சொத்துப்பேணும் தரப்பினராக மனுதாரரை நியமித்து, 18.10.2010-ஆம் தேதியிட்ட உத்தரவை எதிர்த்து, வ.வி. எண் 138/2011-ஐ தாக்கல் செய்துள்ளார். முதல் எதிர்மனுதாரரான நிறுமம், 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களால் எழுப்பப்பட்ட அதே காரணத்தின்பேரிலேயே அவ்வுத்தரவை எதிர்த்துள்ளது. அவ்விண்ணப்பம் முதல் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, பழனியாண்டி என்பவரால் எடுத்துரைக்கப்பட்டது. முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திற்கு, தன்னை சார்பாளராயிருக்க அனுமதிப்பதற்காக பழனியாண்டியால் தாக்கல் செய்யப்பட்ட வ.வி. எண் 864/2007 என்ற விண்ணப்பத்தில், அவரால் கோரப்பட்டவாறு, அனுமதி வழங்கி ஆணையிடப் படவில்லை. அதைக் கருத்திற்கொண்டு, மேற்படி பழனியாண்டி வ.வி. எண் 138/2011-ஐ தாக்கல் செய்வதற்கு வழக்குரிமை ஏதும் கொண்டிருக்கவில்லை என்ற மனுதாரரின் வாதம் ஏற்கத்தக்கது. மேலும், சொத்துப்பேணுநராக மனுதாரரை நியமிக்கின்ற உத்தரவு, 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களால் எதிர்க்கப்பட்டது மற்றும் தக்க ஆணைகள் பெறத் தவறிவிட்டனர். அவர்களும், தங்களால் இந்நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட உ.சீ.ம.-ஐ திரும்பப் பெற்றுவிட்டனர்.

14. 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களால் தெரிவிக்கப்பட்ட மறுப்புரைகள் நிராகரிக்கப்பட்ட

பிறகு, 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களால் எழுப்பப்பட்ட அதே காரணத்தின்பேரிலேயே, தற்பொழுதைய விண்ணப்பத்தை முதல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளது என பதிவாவணத்திலுள்ள சான்றாதாரங்களிலிருந்து தெளிவாகிறது. கூட்டுப்பங்கு நிறுவனச் சொத்துகள், முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திடம் உள்ளதென்பது ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. கற்றறிந்த மேல்முறையீட்டு அதிகாரி, இந்த அம்சத்தைப் பரிசீலிப்பதற்கு தவறி, கூட்டுப்பங்கு நிறுவனத்தின் சொத்துகள் முதல் எதிர்மனுதாரரான நிறுமத்திடம் உள்ளது என்ற பொருண்மையையும் ஒப்புக்கொண்டார். இயக்குநர்களின் மாற்றம் குறித்து 2003-ஆம் ஆண்டுக்குப்பிறகு, நிறுமத்திடமிருந்து தீர்மானம் ஏதும் பெறவில்லை என்று நிறுமங்களின் பதிவாளர், தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் 27.02.2008-ஆம் தேதியிட்ட கடிதம் மூலம் தகவல் அளித்துள்ளார் என்று எதிருரையில் மனுதாரர் தெரிவித்துள்ளார். பழனியாண்டி, வ.வி. எண் 864/2007-ஐ தாக்கல் செய்தபோது, நிறுமத்தின் சார்பாளராயிருக்க தனக்கு அதிகாரமளிப்பதாகச் சொல்லப்பட்ட தீர்மானத்தைத் தாக்கல் செய்யவில்லை என்பதைப் பரிசீலிக்க கற்றறிந்த நீதிபதி அவர்களும் தவறிவிட்டார். இயற்றப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் தீர்மானம் தாக்கல்செய்யப்பட்டிருக்கவில்லையென மனுதாரர் சுட்டிக்காட்டிய பிறகு, அத்தீர்மானத்தைத் தாக்கல் செய்ததிலான தாமதத்தை மன்னிப்பதற்கு மேற்படி பழனியாண்டி வ.வி. எண் 105/2008-ஐ தாக்கல் செய்தார்.

15. மேற்படியான பொருண்மைகளைப் பரிசீலித்து, பழனியாண்டி, முதல் எதிர்மனுதாரரான நிறுமத்தின்



சார்பாளராயிருக்க வழக்குரை உரிமையேதும் கொண்டிருக்கவில்லை என்றும், அவரால் தாக்கல் செய்யப்பட்ட வ.வி. எண் 138/2011 நுட்பமான காரணத்தின்பேரிலும், தகுதிப்பாட்டின்பேரிலுமான இரண்டிலும் நிலைக்கத்தக்கதன்று என்றும் நான் தீர்ப்பளிக்கிறேன். கற்றறிந்த விசாரணை நீதிபதி, மேற்படி பொருண்மைகளனைத்தையும் பரிசீலித்து, நம்பத்தக்க மற்றும் செல்லத்தக்க காரணத்தைக்கூறி, விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துள்ளார். கற்றறிந்த மேல்முறையீட்டு நீதிபதி, மேற்படி பொருண்மைகளை, குறிப்பாக, ஒரே பரிகாரத்தை எதிர்த்து, 2 முதல் 5 எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட உ.ப.மே. எண் 7/2010-இன் தள்ளுபடியை தகுந்தமுறையில் மதிப்பீடு செய்யாமல், உ.ப.மே. எண் 2/2011-ஐ பிழைபாடான காரணங்களின்பேரில் அனுமதித்தார். மேற்படியான காரணத்திற்காக, கற்றறிந்த மேல்முறையீட்டு நீதிபதியின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுவதற்குரியது மற்றும் அது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. மு.வ. எண் 207/1978-இன் வ.வி. எண் 738/1999-இன் வ.வி. எண் 1446/2005-இன் வ.வி. எண் 138/2011-இல் பிறப்பிக்கப்பட்ட 16.03.2011-ஆம் தேதியிட்ட, கற்றறிந்த விசாரணை நீதிபதியின் உத்தரவு மீட்டளிக்கப்பட்டு, உறுதி செய்யப்படுகிறது.

16. முடிவில், இந்த உரிமையியல் சீராய்வு மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகையில்லை. அதன்விளைவாக, தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்படுகிறது.

... சீராய்வு அனுமதிக்கப்படுகிறது.

⌘❖⌘❖⌘

# மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

2017-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19-ஆம் நாள்

**முன்னிலை**

**நீதியரசர் திரு. எம்.எஸ். ரமேஷ்**

குற்றவியல் முதலேற்பு மனு எண்கள்
**26464** மற்றும் **26402/2017**

| | | |
|---|---|---|
| கே.எம். ஷாஜி குமார் மற்றும் பலர் | ... | இரு கு.மு. மனுக்களிலும் மனுதாரர்கள் |

-எதிர்-

| | | |
|---|---|---|
| காவல்துறை ஆய்வாளர்,<br>கு.பு.து.கு.பி.,-<br>கடத்தல் தடுப்பு பிரிவு,<br>எழும்பூர்,<br>சென்னை 600 008<br>மற்றும் பலர் | ... | இரு கு.மு. மனுக்களிலும் எதிர்மனுதாரர்கள் |

**கு.மு.ம. எண் 26464/2017-இல் வேண்டுரை:** 1-ஆம் எதிர்மனுதாரரான காவல்துறையின் கோப்பிலுள்ள குற்ற எண் 03/2017-இல் நிலுவையிலுள்ள முதல் தகவலறிக்கை தொடர்பான ஆவணங்களைத் தருவித்து, அவற்றை செல்லாததாக்குமாறு வேண்டி, கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழ் குற்றவியல் முதலேற்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

---

**கு.மு.ம. எண் 26402/2017-இல் வேண்டுரை:** முகுந்தன் என அழைக்கப்படும் மாதவ் ஷாஜி என்ற சுமார் 1 வயதுடைய குழந்தையை, 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்களிடம் ஒப்படைக்குமாறு, 3 மற்றும் 4-ஆம் எதிர்மனுதாரர்களை பணிப்பதற்கு வேண்டுரைத்து, இக்குற்றவியல் முதலேற்பு மனுவானது, கு.வி.மு.ச., பிரிவு 482-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவுகள் 438, 320 மற்றும் 482.

இ.த.ச., பிரிவுகள் 370(4), (120) (பி) மற்றும் 384.

இளஞ்சிறார் நீதிமுறைச் சட்டம், (2015), பிரிவு 75, குற்றங்களின் இணக்கத்தீர்வு - தரப்பினர்களுக்கிடையில் சமரசம் - வரம்பு குறித்து - முதல் தகவலறிக்கையானது செல்லாததாக்கப்படமுடியுமா? - குழந்தையைத் தத்தெடுத்தல் - செல்லுந்தன்மை.

தொலைக்காட்சி நிகழ்ச்சி - சட்டப்பூர்வமான தத்தெடுத்தலின் புனிதத்தன்மையானது, குழந்தை கடத்தல் என்றதொரு தோற்றத்தை ஏற்படுத்தி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களால் களங்கப்படுத்தப்பட்டு விட்டது - மு.த.அ.-ஐ பதிவு செய்தல், குழந்தையின் பாதுகாப்புப் பொறுப்பை தத்தெடுத்த பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கு தங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லையென இயற்பெற்றோர் உறுதி செய்தல் - தொலைக்காட்சி நிகழ்ச்சியால் இழைக்கப்பட்ட தீங்கானது களையப்பட்டது - கு.வி.மு.ச., பிரிவு 320-இன் கீழ் பதியப்பட்ட குற்றங்கள் சமரசத்திற்குரியவையல்ல என்ற நேர்விலுங்கூட தரப்பினர்களுக்கிடையில் ஏற்படும் சமரசத்தைக் கருத்திற்கொண்டு, இணக்கத்தீர்வு காண்பதை பரிசீலிக்கமுடியும். (பத்தி 6)



ஜீ தமிழ் தொலைக்காட்சியில் "சொல்வதெல்லாம் உண்மை" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒளிபரப்ப அளிக்கப்பட்ட அனுமதியை, காவல்துறை தலைவரும், தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமும் மறுபரீசிலனை செய்து, அத்தகைய நிகழ்ச்சிகளை பிற்காலத்தில் ஒளிபரப்புவதற்காக அனுமதி வழங்குவ-திலிருந்து தடைசெய்து, அவற்றை முறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். (பத்தி 16)

**பார்வையிடப்பட்ட தீர்முடிவு:**

உன்னிகிருஷ்ணன் என்கிற உன்னிக்குட்டன் -எதிர்- கேரள மாநில அரசு, கு.ப.ம. எண் 18630/2016, நாள் 01.03.2017.

**வழக்குரைஞர்கள்:**

திரு. டபிள்யூ.எம். அப்துல் மஜீத்
... இரு கு.மு.ம.-இலுள்ள மனுதாரர்களுக்காக

திரு. சி. ஐயப்பராஜ்,
அரசு கூடுதல் வழக்குரைஞர்
... இரு கு.மு.ம.-இலுள்ள 1-ஆம் எதிர்மனுதாரருக்காக

திருமதி/செல்வி எம்.எஸ். சுமித்ரா
... இரு கு.மு.ம.-இலுள்ள 2-ஆம் எதிர்மனுதாரருக்காக

கு.மு.ம. எண் 26402/2017-இல் உள்ள 3 மற்றும் 4-ஆம் எதிர்மனுதாரர்களுக்காக எவரும் முன்னிலையாகவில்லை.

## பொது உத்தரவு

குு.மு.ம. எண் 26464/2017-இல் வைக்கப்பட்ட வேண்டுரை யாதெனில், முதல் எதிர்மனுதாரரின் கோப்பில், குற்ற எண் 3/2017-இல் நிலுவையிலுள்ள ஆவணங்களை வரவழைத்து, அவற்றை செல்லாததாக்கவேண்டும் என்பதாகும்.

2. வழக்கானது இன்று விசாரணைக்கு வந்தபொழுது, மனுதாரர்களும், 2-ஆம் எதிர்மனுதாரரான நிகழ்வுநிலை முறையீட்டாளரும் இந்நீதிமன்றத்தில் நேரடியாக முன்னிலையாகினர். தங்களைத்தாமே அடையாளப்படுத்திக்கொள்ளும்பொருட்டு, மனுதாரர்களும், இரண்டாவது எதிர்மனுதாரரும், அதாவது, ஷாஜி குமார் கே.எம்.-3474 2776 4939, ஷீஜா கே.எஸ்.-4513 2093 5582, மோன்உறன்ராஜ் ஆர்.-3265 1645 8011 மற்றும் சுமதி எம்.-4107 8777 0728 ஆகியோர் தங்களுடைய ஆதார் அட்டையின் ஒளிப்பட நகல்களை சமர்ப்பித்துள்ளனர். அசல் அட்டைகளை சரிபார்த்த பின்னர், அவை ஆவணப்பதிவு செய்யப்பட்டுள்ளன

3. மனுதாரர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர், இரண்டாம் எதிர்மனுதாரருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் மற்றும் முதல் எதிர்மனுதாரருக்கான கற்றறிந்த அரசு கூடுதல் வழக்குரைஞர் ஆகியோரின் வாதங்கள் கேட்கப்பட்டன. சென்னை, எழும்பூர் குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவு (கடத்தல் தடுப்புப் பிரிவு) தரப்பில், துணை காவல்துறை கண்காணிப்பாளரான திரு. ஆர். ராஜா ஸ்ரீனிவாஸ், காவல் ஆய்வாளரான திருமதி உமாமகேஸ்வரி ஆகிய அதிகாரிகள் நேரடியாக நீதிமன்றத்தின் முன்பாக முன்னிலையாகினர்.



4. கு.மு.ம. எண் 26464/2017-ஆனது நிலுவையில் உள்ளபொழுதே, மனுதாரர்களும், நிகழ்வுநிலை முறையீட்டாளரும், தங்களுக்கிடையேயான பிரச்சனையை அமைதியாக தீர்த்துக்கொண்டனர் என்றும், அதற்கிணங்க, அவர்கள் சமரசம் செய்துகொண்டனர் என்றும் மனுதாரர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் பணிந்துரைக்கப்படுகிறது.

5. குற்றங்களின் கடுமையைக் கருத்தில் கொண்டும், இ.த.ச., பிரிவுகள் 370(4), 120(பி) மற்றும் 384 மற்றும் 2015-ஆம் ஆண்டின் இளஞ்சிறார் நீதிமுறைச் சட்டத்தின் பிரிவு 75 ஆகியவற்றை கருத்திற்கொண்டும், அக்குற்றங்கள், இணக்கத்தீர்வு காணக்கூடியவையல்ல எனக் கூறி, கற்றறிந்த அரசு கூடுதல் வழக்குரைஞர் மனுவைக் கடுமையாக எதிர்த்தார்.

6. மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றமானது, **உன்னிகிருஷ்ணன் என்கிற உன்னிக்குட்டன் -எதிர்- கேரள மாநில அரசு,** கு.ப.ம. எண் 18630/2016-இல் 01.03.2017-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்பில் "கு.வி.மு.ச., பிரிவு 320-இன் கீழ் பதியப்பட்ட, இணக்கத்தீர்வு காணமுடியாத குற்றங்களிலுங்கூட, தரப்பினர்களுக்கு இடையே ஏற்படும் சமரசத்தைக் கருத்திற்கொண்டு, இணக்கத்தீர்வானது பரிசீலிக்கப்படலாம் எனக் கூறியுள்ளது, தீர்ப்புரையின் தொடர்புடைய பகுதி பின்வருமாறு:

"11. மேற்கண்டவற்றிலிருந்து தோன்றுவது யாதெனில், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 320-இன் வரம்புக்குள் ஒரு குற்றமானது, இணக்கத்தீர்வு காணத்தக்க-தல்லதென்றாலுங்கூட, தரப்பினர்களுக்கு

இடையில் ஏற்பட்ட சமரசத்தினைக் கருத்திற்கொண்டு நீதிமன்றமானது, தண்டனைத்தீர்ப்பை நிலைநிறுத்துகையில், விதிக்கப்பட்ட தண்டனையைக் குறைக்கலாம்.

12. தற்பொழுதைய வழக்கின் பொருண்மைகளைப் பொறுத்தவரையில், தரப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட தீர்வினைக் கவனத்திற்கொண்டும், மேலும், கூட்டு விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவராலும், எங்கள் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆணையுறுதியாவணங்களைப் பரிசீலித்தும், குற்றங்களில் இணக்கத்தீர்வு காண அனுமதிக்கக் கோருகின்ற விண்ணப்பத்தை நாங்கள் அனுமதிக்கின்றோம்."

7. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் மேற்படியான கருத்துரைகளைக் கருத்திற்கொண்டு, தரப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட சமரசத்தின் காரணமாக குற்றங்களில் இணக்கத்தீர்வு காண, மனுதாரர்களை அனுமதிப்பதன் மூலம், நீதியின் குறிக்கோள் நிறைவேற்றப்படும் என்பது என்னுடைய ஆழ்ந்த கருத்தாகும்.

8. நிகழ்வுநிலை முறையீட்டாளரால் வைக்கப்பட்ட பணிந்துரைகளையும் மற்றும் அவரால் தாக்கல் செய்யப்பட்ட 07.12.2017-ஆம் தேதியிடப்பட்ட ஆணையுறுதியாவணத்தையும் பதிவுசெய்து, முதல் எதிர்மனுதாரரான காவல்துறையினரின் கோப்பிலுள்ள குற்ற எண் 03/2017-இலான புலனாய்வானது, செல்லாததாக்கப்படுகிறது. கு.மு.ம. எண் 26464/2017 என்ற குற்றவியல் முதலேற்பு மனு அனுமதிக்கப்படுகிறது.



9. வழக்கினின்று விடைபெறும் முன்னர், இம்மனுதாரர்களுக்கெதிராக மு.த.அ. பதியப்பட்ட சூழ்நிலைகளை அறிந்து, நான் அதிர்ச்சியடைந்தேன்.

10. இம்மனுதாரர்களுக்கெதிராக மு.த.அ. தாக்கல் செய்வதற்கு வழிகோலிய தொலைக்காட்சி தொடர் முழுவதும், தனியார் தொலைக்காட்சியான "ஜீ தமிழ்"-இல் 10.07.2017 மற்றும் 11.07.2017 அன்று ஒளிபரப்பப்பட்டு வந்த "சொல்வதெல்லாம் உண்மை" என்று தலைப்பிடப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியிலிருந்து துவங்கியதாகும். 04.12.2017 அன்று இந்நீதிமன்றத்தில் நேரடியாக முன்னிலையான நிகழ்வுநிலை முறையீட்டாளர், தன்னுடைய வறுமையை முன்னிட்டு, தங்கள் குழந்தையைப் பேணிவளர்க்க முடியாத காரணத்தினால், தன்னுடைய கணவருடன் சேர்ந்து, முதல் மற்றும் இரண்டாம் மனுதாரர்களுக்கு, தன்னுடைய மூன்றாவது ஆண் குழந்தையும், மூன்று மாத குழந்தையுமான முகுந்தன் என்கின்ற மாதவ் ஷாஜியை தத்து கொடுக்க முழுமனதுடன் சம்மதம் தெரிவித்திருந்தனர். அவருடைய சம்மதத்தை தொடர்ந்து, ஸ்ரீபெரும்புத்தூர், சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆவண எண் 13/IV/2017-ஆக தத்து ஆவணம் பதியப்பட்டது. இதிலுள்ள முதல் மற்றும் இரண்டாம் மனுதாரர்களாகிய தத்தெடுத்த பெற்றோரின் பொறுப்பில் அவரது இளவர் குழந்தையானது ஒப்படைக்கப்பட்டு, அன்று முதல் அவர்கள் குழந்தையைப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். அவ்வாறிருக்கையில், நிகழ்வுநிலை முறையீட்டாளருக்கும் அவருடைய கணவருக்குமிடையே குடும்பப் பிரச்சனை எழுந்தது, அதன்விளைவாக, அவருடைய கணவர் மீது

அவருக்குள்ள மனக்குறைகளை வெளிப்படுத்தும் பொருட்டு, தனியார் தொலைக்காட்சியில் தொடர்ந்து ஒளிப்பரப்பாகிவரும் "சொல்வதெல்லாம் உண்மை" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு, அவர் அறிவுறுத்தப்பட்டார். தொலைக்காட்சி நிகழ்ச்சியின் தன்மையை அறியாமல், அவரும் மேற்படி தொலைக் காட்சியைத் தொடர்புகொண்டதில், அவருடைய கணவர், குழந்தையை, முதல் மற்றும் இரண்டாம் மனுதாரர்களுக்கு விற்றுவிட்டதாக பொய்க்கூறுமாறு அவரை வற்புறுத்தி, அவரது தத்துக்கொடுத்தலை பிரச்சனையாக மையப்படுத்தி, "சொல்வதெல்லாம் உண்மை" என்ற நிகழ்ச்சியை ஒளிப்பரப்பு செய்யும் பொறுப்பிலுள்ள சில நபர்கள், அவருக்கு போதித்தனர். இந்நிகழ்ச்சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பின்னர், நிகழ்வுநிலை முறையீட்டாளரின் கிராமத்தினர் அனைவருமே நிகழ்வுநிலை முறையீட்டாளருக்கெதிராக திரும்பினர், இச்சூழ்நிலைகளில், நிகழ்வுநிலை முறையீட்டாளர் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவரால் சொல்லப்பட்ட கூற்றுக்களின் அடிப்படையில், முதல், இரண்டாம் மனுதாரர்கள் மற்றும் பலருக்கெதிராக பொய்யான முறையீடொன்றை அளிக்குமாறு வற்புறுத்தப்பட்டார்.

11. நிகழ்வுநிலை முறையீட்டாளரின் கூற்றுகளைக் கருத்திற்கொண்டு, நிகழ்வுகளை விவரித்து, ஆணையுறுதி ஆவணமொன்றைத் தாக்கல் செய்யுமாறு, அவர் பணிக்கப்பட்டார். அது தற்பொழுதைய முறையீட்டை, முதல் எதிர்மனுதாரரிடம் தாக்கல் செய்வதற்கு அவரை தூண்டியது, அதற்கிணங்க 07.12.2017-ஆம்



தேதியிடப்பட்ட ஆணையுறுதியாவணமொன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்யப்பட்டது. வேண்டாத குழந்தையானது, இயற்பெற்றோரின் ஒப்புதலுடன் சட்டப்பூர்வமாக தத்து கொடுக்கப்பட்டு இருக்கும் பெருந்தன்மையான செயலானது, "சொல்வதெல்லாம் உண்மை" என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு பின்னணியிலுள்ளவர்களின் திரைக்கதை மற்றும் இயக்கத்தின் காரணமாக, அது, தத்தெடுத்த பெற்றோருக்கு பெருங்கவலையாகவும், வேதனையாகவும் எவ்வாறு மாறியது என்பது குறித்து ஆணையுறுதியாவணம் அதிர்ச்சியூட்டும் வகையில் எடுத்துரைக்கிறது. குழந்தையின் இயற்தாயாரால் தாக்கல் செய்யப்பட்ட ஆணையுறுதியாவணம் முழுமையையும் எடுகுறிப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும்:-

> "நான், திருமதி எம். சுமதி, மோகன்ராஜின் மனைவி, இந்து, 27 வயது, கதவு எண் 2/427, 8-ஆம் தெரு, 10-ஆம் குறுக்கு தெரு, புதுநல்லூர், சோமங்கலம், ஸ்ரீபெரும்புத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற விலாசத்தில் வசிக்கின்றேன். தற்பொழுது, சென்னைக்கு வந்து இதன்மூலம் மனப்பூர்வமாகவும், உண்மையாகவும், உறுதியுடன் கூறியது பின்வருமாறு:-
>
> 1. நான் இதிலுள்ள இரண்டாம் எதிர் மனுதாரராவேன், அவ்வகையில் கீழே கூறப்பட்டுள்ள சூழ்நிலைகளை நான் நன்கறிந்துள்ளேன்.

2. நானும், இங்குள்ள 3-ஆம் மனுதாரரும், கணவர் மனைவியென நான் பணிந்துரைக்கின்றேன். இத்திருமண பந்தத்திலிருந்து எங்களுக்கு ஏற்கெனவே 5 வயதில் ஒரு மகனும், 3 வயதில் ஒரு மகளும் உள்ளனர்.

3. அவ்வாறிருக்கையில், மூன்றாவது முறையாக, 2016-ஆம் ஆண்டில், கருவுற்றேன். நாங்கள் சமூகத்தின் கடைக்கோடி பிரிவைச் சார்ந்தவர்களாததாலும் மற்றும் அடிப்படை தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள முடியாததாலும், குழந்தையைக் கருக்கலைப்பு செய்ய விரும்பினேன், ஆனால், என்னுடைய ஆரோக்கியமற்ற உடல் நிலையால் குழந்தையைக் கருச்சிதைவு செய்ய மருத்துவர்கள் மறுத்துவிட்டனர்.

4. நான் பணிந்துரைப்பதாவது, இங்குள்ள 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்கள், கணவன்-மனைவியாவர். அவர்களுக்கு 2003-ஆம் ஆண்டு முதல் குழந்தை பாக்கியமில்லாததால், ஒரு குழந்தையைத் தத்தெடுக்க முடிவுசெய்து, என்னுடைய பக்கத்து வீட்டாரும், எங்களுக்கு பொது நண்பருமான பிரமிளா என்பவர் மூலம், என்னையும், இதிலுள்ள மூன்றாம் மனுதாரரான என்னுடைய கணவரையும் அணுகி, அந்நேரத்தில் என்னுடைய கருவிலிருந்த எங்களுடைய மூன்றாவது



குழந்தையைத் தத்தெடுத்துக்கொள்வதற்கான அவர்களின் விருப்பதைத் தெரிவித்தனர். நான் 22.11.2016 அன்று ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்து, அவனுக்கு முகுந்தன் எனப் பெயரிட்டேன்.

5. நான் சமர்ப்பிப்பது யாதெனில், ஒருபுறத்தில் நானும் என்னுடைய கணவரும், மறுபுறத்தில் 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்கள் ஆகிய எங்களுக்கிடையே, என்னுடைய மூன்றாவது மகன் முகுந்தனை தத்து கொடுத்தல்/எடுத்தல் தொடர்பாக ஏற்பட்ட புரிதலின்படி, எனக்கு மூன்றாவது மகனாக பிறந்த மேற்சொன்ன முகுந்தனை, இங்குள்ள 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்களுக்கு தத்து கொடுப்பதற்கு 09.03.2017-ஆம் தேதியிடப்பட்ட தத்து ஆவணத்தை, நாங்கள் நால்வரும் ஏற்படுத்தி, அதனை ஸ்ரீபெரும்புத்தூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண் 13/IV/2017-ஆக பதிவுசெய்தோம். தத்தானது, எங்களுடைய முழு விருப்பத்துடனும் சம்மதத்துடனும் எங்களால் கொடுக்கப்பட்டது.

6. சாதாரணமான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த எனக்கும் என்னுடைய கணவருக்கும் இடையில், சில நாட்கள் கழித்து, என்னுடைய கணவரின் சந்தேகத்திற்குரிய சட்டவிரோத உறவு

உட்பட பிற குடும்பப் பிரச்சனைகள் தொடர்பாக, சிற்சில தவறான புரிதல்கள் ஏற்பட்டன. தினந்தினம் ஏற்படும் சிறு சண்டைகள் பெரிதாகிவிட, அப்பிரச்சனைகளைத் தீர்க்க, நான், என்னுடைய உறவினர்களின் உதவியை நாடியபோது, அவர்களனைவரும், நான் தவறிழைத்ததாக என்னை குறைகூறத் துவங்கினர். என்னுடைய மனம் நிலையற்றிருந்ததாலும், எனக்கெதிரான மேற்படி குற்றச்சாட்டுகளால் என்னுடைய மனமானது கடுமையாகப் பாதிப்படைந்-திருந்ததாலும், பிரச்சனைகளைத் தீர்க்க, நான் என்னுடைய வீட்டு உரிமையாளரான சரஸ்வதியின் உதவியை நாடியிருந்தேன். அதற்கு, அவர், என்னுடைய பிரச்சனை-களுக்கு ஏதேனும் தீர்வுகாண்பதற்கும், அதிலிருந்து வெளிவருவதற்குமுரிய நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பு செய்யும் ஏதேனும் தொலைக்காட்சியை அணுகுமாறு யோசனை தெரிவித்தார். "சொல்வதெல்லாம் உண்மை" என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒளிபரப்பி வந்த "ஜீ" தமிழ் தொலைக்காட்சியின் தொலைபேசி எண்ணை அவரே எனக்கு கொடுத்தார்.

7. நான் பணிந்துரைப்பதாவது, நான் மேற்சொன்ன தொலைபேசி எண்ணை அழைத்தேன், மேற்சொன்ன "சொல்வ-தெல்லாம் உண்மை" என்னும் நிகழ்ச்சியின்



பொறுப்பாளர்/ஒருங்கிணைப்பாளரான திரு. ஸ்டீபன் என்பவர், என்னுடன் பேசினார். நான், என்னுடைய கணவருடனான என்னுடைய பிரச்சனையை, அவரிடம் விவரித்தேன். அதற்கு, அவர், நான் என்னுடைய கணவரின் சட்டவிரோத உறவு குறித்து மட்டும் வெளிப்படுத்தினால், என்னுடைய பிரச்சனையைத் தீர்க்க முடியாதென்று கூறியிருந்தார், நான், ஏற்கெனவே கொடுத்திருந்த தத்து குறித்தும் பேச வேண்டும் என்றும், அவர் என்னை கேட்டுக்கொண்டார். என்னுடைய கணவர், என்னுடைய குழந்தையை இங்குள்ள 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்களுக்கு விற்றுவிட்டதாக, அவரை குறைகூறி, நான் அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டவேண்டும் என்றும், நான் அத்தகைய குற்றஞ்சாட்டினால், நிகழ்ச்சி நடத்துபவரான "லக்ஷ்மி ராமகிருஷ்ணன்" என்பவரே, எனக்காக செலவழித்து, என்னுடைய குழந்தையைத் திரும்பப் பெற்றுத்தருவாரென்றும், அதன்மூலம் என்னுடைய அனைத்துப் பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டுவிடும் என்றும் அவர் கூறினார். அவருடைய பேச்சை நம்பி, என்னுடைய கணவருடனான பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில் தான், நான் அவ்வாறு கூற ஒப்புக் கொண்டேன்.

8. நான் பணிந்துரைப்பது யாதெனில், 03.07.2017 அன்று சென்னை, கிண்டியில் அமைந்துள்ள, ஜீ தமிழ் தொலைக்காட்சி அலுவலகத்திற்கு வருமாறு நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன். அதற்கிணங்க, நான் இரவு 8.00 மணியளவில், அவர்களுடைய அலுவலகத்தை அடைந்தேன், நான், ஒரு உணவகத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு, அடுத்த இரு நாட்களுக்கு, அங்கு தங்கவைக்கப்பட்டேன். என்னுடைய கணவர் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களின் தொலைபேசி எண்களைத் தருமாறு, நான் கேட்டுக் கொள்ளப் பட்டேன் என நான் தெரிவித்து கொள்கிறேன். ஆகவே, தொலைபேசி எண்களின் விவரங்களை நான் அவர்களுக்கு அளித்துள்ளேன். என்னுடைய கணவரின் சட்டவிரோத உறவு பிரச்சனையைத் தீர்க்க அவர்கள் அழைப்பார்களானால், என்னுடைய கணவரும், அவருடைய குடும்ப உறுப்பினர்களும், நிகழ்ச்சிக்கு வரமாட்டார்கள் என்று நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் என்னிடம் கூறினர், ஆகவே, என்னுடைய கணவர், குழந்தையை, 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்களுக்கு விற்றுவிட்டார் என்றும், நிகழ்ச்சியின் மூலம், குழந்தையை, குடும்பத்திற்கு திரும்ப பெற்றுத்தருவதாகவும் கூறி, அவர்களை அழைக்கப் போவதாகவும் அவர்கள் என்னிடம் கூறினர்.



9. நான் பணிந்துரைப்பதாவது, அதன் பின்னர், நிகழ்ச்சியைப் பதிவதற்காக, 05.07.2017 அன்று மாலை 7.00 மணியளவில் தொலைக்காட்சி அலுவலகத்திற்கு வருமாறு மீண்டும் நான் அழைக்கப்பட்டேன். என்னுடைய கணவரின் சட்டவிரோத உறவு குறித்துப் பேசுவதற்கு மாறாக, 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்களுக்கு குழந்தையைக் கொடுத்தது குறித்து கூறவும், குழந்தைப் பிரச்சனையை வலியுறுத்திக்கூறி, ஒளிப்படக்கருவி முன்பாக, அனைத்து விதமான உணர்வுப்பூர்வமான நாடகங்களையும் நடிக்குமாறும், மேற்படி ஸ்டீபெனும், நிகழ்ச்சியின் பிற ஒருங்கிணைப்பாளர்களும் நிகழ்ச்சியின் காட்சிப் பதிவிற்கு முன்னர் போதித்தனர். நிகழ்ச்சியில் என்னுடைய கணவர் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களின் முன்னிலை குறித்து நான் கேட்டபொழுது, அவர்களை வேறு அறையில் வைத்திருப்பதாகவும், அவர்களும் நிகழ்ச்சியில் சேர்ந்துகொள்வர் என்றும் அவர்கள் என்னிடம் கூறினர்.

10. நான் சமர்ப்பிப்பது யாதெனில், நிகழ்ச்சியை நடத்துபவரான லக்ஷ்மி ராமகிருஷ்ணன் என்னுடன் வெகுநேரம் பேசி, என்னுடைய கணவரான இங்குள்ள மூன்றாம் மனுதாரர், எங்கள் குழந்தையை

இங்குள்ள 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்களுக்கு பணத்திற்கு விற்றுவிட்டார் என, நான் ஒளிப்படக்கருவியின் முன்பாக கூற வேண்டுமென, என்னிடம் கூறினார். அவர்கள், இங்குள்ள மனுதாரர்களுக்கு தகவலளித்து அவர்களுக்கு நெருக்கடி கொடுத்து, என்னுடைய குழந்தையையும், கணவரையும் என்னிடம் திரும்பக் கொண்டுவருவதாகவும் அவர் கூறினார். என்னுடைய குழந்தையைத் திரும்பக் கொண்டுவருவது தொடர்பான மொத்தச் செலவையும் அவர் கவனித்துக் கொள்வதாகவும், எதற்காகவும் நான் வருந்தத்தேவையில்லை என்றும் கூறினார். குழந்தையை என்னிடம் ஒப்படைத்துவிட்டு, என்னுடைய கணவரும் திரும்பவந்த பிறகுதான், அவர்கள் எனக்கு தகவலளித்து, என்னுடைய ஒப்புதலைப் பெற்ற பின்னரே, நிகழ்ச்சியை ஒளிபரப்புவர் என்றுங்கூட அவர் கூறினார். எனக்கும், என்னுடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் எந்தத் துன்பமும் நேராதென்றும், தொலைக்காட்சி நிறுவனம் என்னுடைய நலனைப் பாதுகாக்கும் என்றும் அவர் கூறினார். தொலைக்காட்சியைச் சேர்ந்தவர்களால் பேசப்பட்ட இனிமையான, கவர்ச்சியான பேச்சுக்கு நான் மயங்கி, படக்காட்சிப் பதிவிற்கு சென்றேன்.

11. நான் சமர்ப்பிப்பதாவது, மேற்படி லக்ஷ்மி ராமகிருஷ்ணன், ஸ்டீபென் மற்றும் அவர்களுடைய அணியினரின் வார்த்தைகளை நம்பி, அவர்களால் கூறப்பட்டவாறு, நான் நிகழ்ச்சியில் குற்றஞ்சாட்டினேன், என்னுடைய கணவரின் சட்டவிரோதமான உறவு குறித்தும் பேசி, என்னுடைய குடும்ப பிரச்சனையைத் தீர்த்துவைக்குமாறு, அணியினரை கோரினேன். நிகழ்ச்சியை ஒளிபரப்புவதைக் குறித்து என்னுடைய ஒப்புதலைப் பெறாமலேயே அல்லது எனக்கு தகவல் அளிக்காமலேயே, நான் அதிர்ச்சியும், வியப்புமடையும் விதத்தில், நிகழ்ச்சியானது, 10.07.2017 மற்றும் 11.07.2017 ஆகிய நாட்களில் ஒளிபரப்பப் பட்டது. எங்களுடைய மொத்த கிராமத்தினரும் நிகழ்ச்சியைப் பார்த்த பொழுது, ஒவ்வொருவரும் என்னையும், மேற்படி தத்து விடயத்தில் எனக்குதவிய எனது பக்கத்துவீட்டாரான மேற்படி பிரமிளாவையும் திட்டத் துவங்கினர். கிராமத்தினர் கேட்ட கேள்விகளை எதிர்கொள்ளமுடியாமல், மேற்படி பிரமிளா காவல்துறையில் முறையீடொன்றை அளித்தார். அத்தகையதொரு சூழ்நிலையில், என்னுடைய மாமனார், குழந்தை உதவி மைய எண் 1098-ஐ அழைத்து, என்னுடைய கணவர் உட்பட, மனுதாரர்களுக்கெதிராக முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்ய என்னை நிர்பந்தித்தார்.

12. நான் சமர்ப்பிப்பது யாதெனில், முதல் எதிர்மனுதாரரான காவல்துறையினர், இங்குள்ள மனுதாரர்களுக்கெதிராக வழக்கொன்றை பதிவு செய்தனர். என்னாலும், மூன்றாம் மனுதாரரான என்னுடைய கணவராலும், 09.03.2017-ஆம் தேதியிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட தத்து ஆவணத்தின் மூலம், முறைப்படி 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்களுக்கு தத்து கொடுக்கப்பட்டது. எங்களால் தரப்பட்ட மேற்படி தத்துவானது, எங்களுடைய முழு விருப்பத்துடனும் முழு ஒப்புதலுடனும் தரப்பட்டதாகும். உண்மையில், தத்து கொடுக்கப்பட்ட நாள் முதல், 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்கள் குழந்தையை மிகுந்த அக்கறையுடனும், அன்புடனும், பாசத்துடனும் கவனித்துவருகின்றனர். அவர்கள், குழந்தையுடன் மிகுந்த பாசப் பிணைப்புடன் உள்ளனர். குழந்தையும், அவர்களுடன் மிகுந்த பாசப்பிணைப்புடன் உள்ளது.

13. நான் சமர்ப்பிப்பது யாதெனில், இம் மனுதாரர்களுக்கெதிராக வைக்கப்பட்ட இக்குற்றச்சாட்டுகள் அனைத்தும், மேற்படி "சொல்வதெல்லாம் உண்மை" என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சியுடன் தொடர்புடைய நபர்களான, அதனை முன்னின்று நடத்துபவரான லக்ஷ்மி ராமகிருஷ்ணன், நிகழ்ச்சி



ஒருங்கிணைப்பாளரான ஸ்டீபன் உட்பட பல நபர்களின் மேற்படியான போதனையாலேயே நிகழ்ந்ததாகும். அவர்கள்தான், அவர்களுடைய நிகழ்ச்சியை பிரசித்தியாக்கும் பொருட்டே, அத்தகைய பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூற என்னை தூண்டினரே தவிர, வேறு எதற்குமல்ல.

14. நான் சமர்ப்பிப்பது யாதெனில், அவர்களுடைய தொலைக்காட்சியும், நிகழ்ச்சியும் பிரசித்தியடைவதற்காக அவர்கள், என்னுடைய குடும்பப் பிரச்சனையைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு, மேற்படி நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு எனக்கு ஆசைகாட்டினர். அவர்கள் காட்சியைப் பதிவுசெய்த பின்னர், என்னுடைய குழந்தையைத் திரும்பப் பெற்று, என்னுடைய கணவருடனான பிரச்சனை தீர்ந்த பின்னரே, நிகழ்ச்சியை ஒளிபரப்புவதாக என்னிடம் உறுதியளித்தபொழுதிலும், என்னுடைய ஒப்புதலின்றியும், எனக்கு எந்தவித தகவலும் அளிக்காமலும், நான் அதிர்ச்சியும், வியப்புமடையும் விதத்தில், அவர்கள் நிகழ்ச்சியை ஒளிபரப்பி, என்னுடைய வாழ்வையும், 11 மாத குழந்தையின் வாழ்வையும் கெடுத்து விட்டனர். மேற்படி நபர்களால் செய்யப்பட்ட தூண்டுதலானது, அண்மை காலத்தில்

என்னுடைய வாழ்வில் நாசம் விளைவித்ததோடு, 11 மாதமேயான என்னுடைய குழந்தையின் அன்பு, பாசம் மற்றும் அக்கறை போன்றவற்றையும் பறித்து, அவனுடைய மனதில் ஆழ்ந்த வடுவை ஏற்படுத்திவிட்டது.

15. நிகழ்வுகளை நன்கு மதிப்பீடுசெய்யவும் மற்றும் என்னாலும், என்னுடைய கணவரான மூன்றாம் மனுதாரராலும், இங்குள்ள 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்களுக்கு தத்து கொடுக்கப்பட்ட என்னுடைய குழந்தை மாதவன் என்கிற முகுந்தனின் நலனுக்காகவும், இந்த பொருண்மைகள் அனைத்தையும் நான் முன்வைக்கின்றேன்."

12. மேற்சொன்ன ஆணையுறுதியாவணத்திலுள்ள கூற்றுகளைப் படித்ததிலிருந்து, தத்துவானது சட்டப்படி செல்லக்கூடியதெனக் காணப்படுகிறது. இளவர் குழந்தையைக் கடத்தியதாக, தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக, 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்களுக்கு எதிராகவோ மற்றும் பிறருக்கெதிராகவோ, வழக்கொன்றைத் தாக்கல் செய்யும் எண்ணமே இயற்தாய் கொண்டிருக்கவில்லை என்றும் காணப்படுகிறது. ஆணையுறுதியாவணத்தின் கூற்றுகளை ஒட்டுமொத்தமாகப் படித்தால், ஆணையுறுதியாவணத்தின் மேற்படி நிகழ்வுகள் அனைத்தையும் விவரித்ததைக் கருத்திற்கொண்டு, ஏதேனும் குற்றம் நிறுவப்படுமானால், நிகழ்ச்சியின்பொழுது நிகழ்வுநிலை முறையீட்டாளருக்கு போதித்த நபர்கள், குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக சேர்க்கப்படவேண்டும்.



13. ஊடகம் என்பது சமூக விதிமுறைகளை தனக்குதானே வைத்துக்கொண்டு, அது மக்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அவர்களை சூழ்ந்துகொண்டு, அவர்களின் தினசரி வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சக்திவாய்ந்த சாதனமாகும். அதேநேரத்தில், அது, தன்மீது மிகப்பெரும் சமூக பொறுப்பைக் கொண்டுள்ளது. சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, குற்றங்களிழைத்தல் தொடர்பான நிகழ்ச்சிகளை வெளிக்காட்டுவது பாராட்டத்தக்கதென்றாலும், தங்களுடைய நிகழ்ச்சியைப் பிரசித்தியாக்குவதற்காக, ஊடகமானது, திரைக்கதையையும், நிகழ்ச்சியையும் உருவாக்குவதில் நியாயப்படுத்தப்படலாமா? "சொல்வதெல்லாம் உண்மை" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒளிபரப்புவதற்கு பின்னணியிலுள்ள நபர்களின் கற்பனைக்கும், இரசனைக்கும் ஏற்ப, அத்தகையதொரு நிகழ்ச்சி உருவாக்கப்பட்டிருப்பது இவ்வழக்கிற்கு ஒரு துரதிருஷ்டவசமான எடுத்துக்காட்டாகும். சட்டப்பூர்வமான தத்துவின் புனிதத்தன்மையானது, நிகழ்ச்சி நடத்துபவரால் குழந்தை கடத்துதல் என்றதொரு தோற்றத்தை ஏற்படுத்தி களங்கப்படுத்தப்பட்டுவிட்டது.

14. மு.த.அ. பதிவு செய்ததன் பின்விளைவுதான் மிகுந்த அதிர்ச்சியானதாகும். இளம் குழந்தையைத் தத்தெடுத்த பெற்றோரான 1 மற்றும் 2-ஆம் மனுதாரர்கள், முன்பிணைக்கோரி, இந்நீதிமன்றத்தை அணுகுமாறு நிர்பந்திக்கப்பட்டனர். அவர்களுடைய முன்பிணைக்கோரும் மனுக்கள் பரிசீலனையிலிருக்கையில், 1-ஆம் எதிர்மனுதாரரான காவல்துறையினர்,

தத்தெடுத்த பெற்றோரிடமிருந்து குழந்தையை மீட்டெடுத்து, சென்னை, செயின்ட் தாமஸ் மவுண்ட்டிலுள்ள புனித அப்போஸ்தலர் கான்வென்ட் என்ற ஒரு தனியார் காப்பகப் பொறுப்பில் 11 மாத குழந்தையை ஒப்படைத்தனர். இவ்வாறாக, குழந்தையானது, தத்தெடுத்த பெற்றோர் மற்றும் இயற்பெற்றோர் என்ற இருவரையுமே இழந்து நின்றது. அதன்விளைவாக, குழந்தையானது மீட்கப்பட்டு, அதனைப் பாதுகாக்கும் பொறுப்பு தனியார் குழந்தைகள் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என முதல் எதிர்மனுதாரரும் இந்நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தார். இப்பின்னணியில், குற்ற எண் 3/2017-இல் உள்ள மு.த.அ.-ஐ செல்லாததாக்கக்கோரி, கு.மு.ம. எண். 26464/2017 உடன் சேர்த்து தத்தெடுத்தப் பெற்றோரிடம் குழந்தையின் பாதுகாப்புப் பொறுப்பினை மீட்டளிக்குமாறு பணிக்கக்கோரி, கு.வி.மு.ச., பிரிவு 482-இன் துணையுடன் கு.மு.ம. எண் 26402/2017-ஆனது இந்நீதிமன்றத்தின் முன்பாக தாக்கல் செய்யப்பட்டது.

15. 04.12.2017 அன்று தத்தெடுத்தப் பெற்றோர், இயற்பெற்றோருடன் இந்நீதிமன்றத்தில் நேரடியாக முன்னிலையாகி, மிகுந்த உணர்ச்சிப்பெருக்குடனும் கவலையுடனும் நீதிக்காக வாதிட்டனர். குழந்தையின் பாதுகாப்புப் பொறுப்பை தத்தெடுத்தப் பெற்றோரிடம் ஒப்படைப்பதில் தங்களுக்கு ஆட்சேபணையில்லை என இயற்பெற்றோர் உறுதியளித்ததையடுத்து, அதேநாளில், குழந்தையின் பாதுகாப்புப் பொறுப்பை உடனடியாக தத்தெடுத்தப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு பணித்து, இடைக்கால உத்தரவானது பிறப்பிக்கப்பட்டு, அதற்கிணங்க, வழக்கானது ஒத்திவைக்கப்பட்டது.



07.12.2017 அன்று அனைத்து தரப்பினர்களும் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி, குழந்தையின் பாதுகாப்புப் பொறுப்பு, தத்தெடுத்தப் பெற்றோரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்றும், இயற்தாயும், குழந்தையின் பாதுகாப்புப் பொறுப்பு தத்தெடுத்தப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்பதை அறிந்து, அவர் மனநிறைவடைந்து மகிழ்ச்சியுற்றார் என்பதையும் உறுதிபட தெரிவித்தார். இவ்வாறாக, தொலைக்காட்சி நிகழ்ச்சியால் விளைவிக்கப்பட்ட தீங்கானது களையப்பட்டுவிட்டது. எனவே, கு.மு.ம. எண். 26402/2017-இல் மேல் உத்தரவுகள் ஏதும் தேவையில்லை, அதற்கிணங்க அது முடிக்கப்படுகிறது.

16. மேற்படியான துரதிருஷ்டவசமான நிகழ்வினைப் பார்க்கையில், தமிழ்நாடு மாநில காவல்துறை தலைவர், மைய மற்றும் மாநில அரசுகளின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், "ஜீ தமிழ்" தொலைக்காட்சியில் "சொல்வதெல்லாம் உண்மை" என்னும் நிகழ்ச்சிக்கு வழங்கப்பட்ட அனுமதியை மறுபரிசீலனை செய்து, எதிர்காலத்தில் அத்தகைய நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு அனுமதி வழங்குவதினின்று தடுத்து, அவற்றை முறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் எனக் கருத்து தெரிவிப்பது உகந்ததாகும்.

17. முடிவில், கு.மு.ம. எண் 26464/2017 அனுமதிக்கப்பட்டு, கு.மு.ம. எண் 26402/2017-ஆனது முடிக்கப்படுகிறது.

⌘❖⌘❖⌘

# மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

**(மதுரை நீதியராயம்)**

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21-ஆம் நாள்

## முன்னிலை

**நீதியரசர் திரு. எம். தண்டபானி**

குற்றவியல் முதலேற்பு மனு (எம்.டி.) எண் **2113/2012**
மற்றும்
பல்வகை மனு (எம்.டி.) எண்கள் **2** மற்றும் **3/2011**

கே.ஆர். கார்த்திகேயன் ... மனுதாரர்/எதிரி

-எதிர்-

வி. பிரதாப் குமார் ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

**வேண்டுரை**: எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட, பத்மநாபபுரம், நீதித்துறை நடுவர் நீதிமன்றக் கோப்பிலுள்ள ஆ.ப.வ. எண் 341/2011-இல் பதிவாவணங்களைக் கோரியும் மனுதாரருக்கு எதிரான புகாரைச் செல்லாததாக்கவும், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் 1973, பிரிவு 482-இன் கீழ் குற்றவியல் முதலேற்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாற்றுமுறையாவணங்கள் சட்டம் (1881), பிரிவுகள் 138, 141

---

**2017-2-லா வீக்லி (கிரி.) 937**

நிறுமத்தின் சார்பாக மனுதாரர் காசோலை வழங்கியுள்ளார் - மேற்படி நிறுமத்தை ஒரு எதிரியாக சேர்க்காத புகார் நிலைக்கத்தக்கதல்ல - நடவடிக்கைகள் செல்லாததாக்கப்பட்டன. (பத்திகள் 8, 10)

**பார்வையிடப்பட்ட தீர்முடிவு:**

அனிதா உறடா -எதிர்- தி/ள். காட்ஃபாதர் டிராவல்ஸ் & டூர்ஸ் பிரைவேட் லிமிடெட், 2012-2-லா வீக்லி (கிரி.) 73 = ஏ.ஐ.ஆர். 2012 எஸ்.சி.சி. 2795;

**வழக்குரைஞர்கள்:**

திரு. ஆர். திவாகரன் ... மனுதாரருக்காக

திரு. எம். சூரி ... எதிர்மனுதாரருக்காக

**உத்தரவு**

பத்மநாபபுரம், நீதித்துறை நடுவர் நீதிமன்றக் கோப்பிலுள்ள ஆ.ப.வ. எண் 341/2011-இல், மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட புகாரை செல்லாததாக்கக்கோரி, மனுதாரரால் இக்குற்றவியல் முதலேற்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அரசுத்தரப்பு வழக்காவது, மனுதாரர், எதிர்மனுதாரரிடமிருந்து தொகை ரூ.1,19,500/-ஐ கடன் பெற்றார். அதன்படியாக, மனுதாரர் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி, கோயம்புத்தூர் கிளையின் பெயரில் வரையப்பட்ட பின்வருகின்ற 3 காசோலைகளை எதிர்மனுதாரருக்கு வழங்கினார்.



1. தொகை ரூ.40,000/-க்கு 28.04.2011-ஆம் தேதியிடப்பட்ட காசோலை எண் 347018.

2. தொகை ரூ.40,000/-க்கு 28.07.2011-ஆம் தேதியிடப்பட்ட காசோலை எண் 347017.

3. தொகை ரூ.39,500/-க்கு 28.10.2011-ஆம் தேதியிடப்பட்ட காசோலை எண் 347016.

எதிர்மனுதாரர், தன்னுடைய வங்கியரான தி/ள். தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, தக்கலை கிளையில் தொகை ரூ.40,000/-க்கான, 28.04.2011-ஆம் தேதியிடப்பட்ட 347018 என்ற எண் கொண்ட காசோலை ஒன்றை முன்னிலைப்படுத்தியபோது, மேற்படி காசோலை 04.05.2011-ஆம் தேதியிடப்பட்ட தகவல் மூலம் "போதிய நிதியில்லாமை" என்ற ஒரு மேற்குறிப்புடன் திரும்பியது. ஆகையால் எதிர்மனுதாரர் 01.06.2011 அன்று மனுதாரருக்கு அறிவிப்பொன்றை அனுப்பியதில், அது "உரிமை கோரப்படவில்லை" என்பதாக 15.06.2011 அன்று திரும்பியது. எனவே, இதிலுள்ள மனுதாரருக்கு எதிராக தற்பொழுதைய புகாரை எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருந்தார்.

3. மனுதாரருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்ததாவது, மனுதாரர் தி/ள். ஹெறட்ரா போரெக்ஸ் சொலியூஷன்ஸின் இயக்குநருள் ஒருவர், மற்றொரு இயக்குநர் திரு. டிசௌஸா ஆவார். மேற்படி நிறுமனத்தின் சார்பாக மனுதாரராலும், மற்றொரு இயக்குநர் திரு. டிசௌஸாவாலும் உரியவகையில் கையொப்பமிடப்பட்டு காசோலை வழங்கப்பட்டது என்பதாகும். அவர் மேலும் பணிந்துரைத்ததாவது, மனுதாரர் தனிப்பட்ட முறையில் பணத்தைக் கடனாக

பெற்றதைப்போன்று, தனிப்பட்ட முறையிலேயே காசோலைகளை வழங்கியிருந்தார் என்று எதிர்மனுதாரர் அறிவிப்பிலும், மேலும் புகாரிலுங்கூட தெரிவித்துள்ளார். நிறுமத்தின் சார்பாக காசோலை வழங்கப்பட்டிருந்தது என்பதையும், எதிர்மனுதாரர் தனிப்பட்ட முறையிலேயே மனுதாரருக்கு எதிராக புகாரை முன்கொணர்ந்தார் என்பதையும் காசோலையைப் பார்வையிட்டாலே தெரிந்துவிடும். எதிர்மனுதாரரால் முன்கொணரப்பட்ட மேற்படி புகாரால் மனக்குறையுற்று, மனுதாரர் தற்பொழுதைய குற்றவியல் முதலேற்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

4. மனுதாரருக்கான கற்றறிந்த வழக்குரைஞர், தன்னுடைய பணிந்துரைகளுக்கு ஆதரவாக, **2012-2-லா வீக்லி (கிரி.) 73 = ஏ.ஐ.ஆர். 2012 எஸ்.சி.சி. 2795**-இல் அறிக்கையிடப்பட்டுள்ள **அனிதா உறடா -எதிர்- தி/ள். காட்ஃபாதர் டிராவல்ஸ் & டூர்ஸ் பிரைவேட் லிமிடெட்** என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்முடிவின்மீது சார்வுற்று, அதில் 39, 42 மற்றும் 43-ஆவது பத்திகளில் பின்வருமாறு தீர்மானித்துள்ளதாவது:

"39. சட்டத்தின் பிரிவு 141-ஆனது நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்களுடன் தொடர்புடையது என்பதை மனதிற்கொள்ள வேண்டும். நிறுமத்தின் தரப்பில் குற்றச்செயல் புரிந்ததற்காக, இது மற்ற நபர்களை பகரப் பொறுப்புடையவர்களாக ஆக்குகிறது. எங்களால் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளவாறு, சட்டப்பிரிவு 141-இல் வகுத்துரைக்கப்பட்டுள்ள முன்நிபந்தனையை நிறைவு செய்கின்றபோது, பகரப் பொறுப்புநிலை



ஈர்க்கப்படுகிறது. பொறுப்படைவு, தண்டிக்கும் இயல்புடையாதலால் வகையத்திற்கான கண்டிப்பான பொருள்கோள் இன்றியமைமையாததாகும். மேலும் ஓரளவிற்கு அதுவொரு கட்டளையுமாகும் என்பதில் மறுப்பேதுமிருக்க இயலாது.

42. சட்டமியற்றுவோரின் உட்கருத்துக்குகந்த வகையில், அதுதொடர்பான வகையங்கள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும். ஏனென்றால் இது தண்டனை வகையங்களை விவாதிக்கிறது மற்றும் சட்டத்துறை சார்ந்தவர்களாக இருந்தாலும் அல்லது தனிப்பட்டவர்களாயிருந்தாலும், அவர்கள் எதிரிகளாக வரிசைப்படுத்தப்பட்டாலன்றி, அந்நபர்களின் உரிமைகளைப் பாதிக்கின்ற தண்டனையொன்றை விதிக்கக்கூடாது என்பதை முன்னிறுத்துவதற்குதான் மேற்சொன்ன பத்திகளை நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். தண்டனை விதிக்கும் அதிகாரமானது சட்டமியற்றுபவரிடம் அளிக்கப்பட்டுள்ளது என்பது மனதில் கொள்ளப்படவேண்டும் மற்றும் அது, நிறுமத்தால் புரியப்பட்ட குற்றத்தினை தெளிவாகப் பேசுகின்ற சட்டப்பிரிவு 141-இல் முழுமைபெறுகிறது. பிரிவில் பயன்படுத்தப்பட்டுள்ள "அதோடு" என்ற சொல் மிகப் பெரிதளவில் முக்கியத்துவம் வாய்ந்தது மற்றும் நிறுமத்தையும் அதோடு இயக்குநரையும் மற்றும்/அல்லது நிறுமத்தின்

செயல்களுக்குப் பொறுப்பானவர்களான பிற அலுவலர்களையும் அதனுடைய பற்றிழையினுள் கொண்டுவருகிறது. ஆகையால், நிறுமம் எதிரியாக வரிசைப் படுத்தப்படவில்லையென்றாலுங்கூட இயக்குநர்களுக்கு அல்லது பிற அலுவலர்களுக்கு எதிரான குற்ற வழக்கு நிலைக்கத்தக்கது என்று எதிர்மனுதாரருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் தீவிரமாக வலியுறுத்தி-யுள்ளார். "அதோடு" என்ற வார்த்தை அச்சூழமைவிலேயே புரிந்துகொள்ளப்பட வேண்டும். **ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா -எதிர்- பியர்லெஸ் ஜெனரல் பினான்ஸ் அண்டு இன்வெஸ்ட்மென்ட் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர் [1987 (1) எஸ்.சி.சி. 424]-இல்** இயற்றுச் சட்டம் முழுவதும் முதலில் ஒட்டுமொத்தமாகவும், பிறகு ஒவ்வொரு பிரிவு, பிரிவாகவும், ஒவ்வொரு கூறு, கூறாகவும், ஒவ்வொரு சொற்றொடர் சொற்றொடராகவும், ஒவ்வொரு வார்த்தை வார்த்தையாகவும் படிக்கப்படவேண்டும். இதே கோட்பாடு, **தீவன்சிங் மற்றும் பலர் -எதிர்- இராஜேந்திர பிரசாத் அர்தேவி மற்றும் பலர் [2007 (10) எஸ்.சி.சி. 528] மற்றும் சாராப்ஜித் ரிக் சிங் -எதிர்- இந்திய அரசு [2008 (2) எஸ்.சி.சி. 417]**-இல் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. கண்டிப்பான பொருள்கோள் கோட்பாட்டைப் பயன் படுத்துகையில் நிறுமத்தால் புரியப்பட்ட குற்றம் மற்றவர்களின் பகரப் பொறுப்பை ஈர்ப்பதற்கு



ஒரு வெளிப்படையான முன்நிபந்தனை என்பது எங்களது ஆழ்ந்தாராய்ந்தக் கருத்தாகும். இதன்படி, நிறுமம் குற்றவழக்கிற்கு உட்படுத்தப்படுகிறபோதுதான் மற்ற வகையினரில் குறிப்பிடப்பட்ட நபர்கள்தான் மனுவிலுள்ள கூற்றுகளுக்கும், அதனுடைய நிருபணத்திற்குட்பட்டும் குற்றத்திற்கான பகரப் பொறுப்புடையவராவர் என்பதை முற்றிலும் ஐயப்பாட்டிற்கு இடந்தராமல் பிரிவில் காணப்படுகின்ற "அதோடு நிறுமம்" என்ற வார்த்தைகள் தெளிவாக்குகின்றன மற்றும் நிறுமம் சட்டத்துறை சார்ந்ததாக இருக்குமிடத்து, அதற்கென மதிப்புடைமை உள்ளது என்ற பொருண்மையை ஒருவர் புறக்கணித்துவிடமுடியாது. இதற்கு எதிராக ஒரு காண்முடிவு பதிவு செய்திருந்தால், அதனுடைய நற்பெயருக்கு களங்கத்தை அது உருவாக்கக்கூடும். ஒரு இயக்குநரை குற்றஞ்சாட்டுகிறபோது, நிறுமத்தின் நற்பெயரை பாதிக்கின்ற சூழ்நிலைகள் ஏற்படலாம்.

43. எங்களது மேற்சொன்ன பகுப்பாய்வினைக் கருத்திற்கொண்டு, சட்டப்பிரிவு 141-இன் கீழ் குற்றவழக்குத் தொடருவதற்காக, ஒரு நிறுமத்தை எதிரியாக வரிசைப்படுத்துவது தவிர்க்கவியலாது என்ற தடுக்கவியலா முடிவிற்கு நாங்கள் வருகிறோம். பகரப் பொறுப்பு, வகையத்திலேயே வரையறுக்கப் பட்டுள்ளதால், மற்ற வகையிலுள்ள

குற்றவாளிகளை பகரப்பொறுப்பு என்ற உரைகல்லை இழைத்துப்பார்த்துதான், அதனுள் கொண்டுவரமுடியும். மூன்று நீதிபதிகள் கொண்ட நீதியர் ஆயத்தின் தீர்முடிவான (மேற்கண்ட) **சி.வி. பரேக் (ஏ.ஐ.ஆர். 1971 எஸ்.சி. 447)**-இல் வகுத்துரைக்கப்பட்ட விகிதத்தின் அடிப்படையிலேயே நாங்கள் அவ்வாறு கூறுகிறோம். இவ்வாறு, (மேற்கண்ட) **ஷியோரதான் அகர்வால் (ஏ.ஐ.ஆர். 1984 எஸ்.சி. 1824)**-இல் வெளிப்படுத்தப்பட்ட கருத்து, சட்டத்தைச் சரியாக வகுத்துரைக்க-வில்லை என்பதற்கிணங்க, அது இதன்படி மறுதலிக்கப்படுகிறது. (மேற்கண்ட) **அனில் உறடா (ஏ.ஐ.ஆர். 2000 எஸ்.சி. 145 : 1999 ஏ.ஐ.ஆர். எஸ்.சி.டபிள்யூ. 4228)**-இன் தீர்முடிவு 37-ஆவது பத்தியில் குறிப்பிடப் பட்டவாறு சட்டவுரிமைத் தகுதியுடன் மறுதலிக்கப்படுகிறது. (மேற்கண்ட) **மோடி டிஸ்டிலரிஸ் (ஏ.ஐ.ஆர். 1988 எஸ்.சி. 1128)**-இன் தீர்முடிவு, எங்களால் இதில் இதற்குமுன் விளக்கப்பட்டுள்ளதால், இது அதற்குரிய பொருண்மைகளுக்குட்பட்டதாக கருதப்படவேண்டும்."

5. மேற்சொன்ன தீர்முடிவைப் பார்வையிடுகையில், மாற்றுமுறையாவணங்கள் சட்டத்தின் பிரிவு 141-இன் கீழ் குற்றவழக்கு தொடருவதற்காக நிறுவனத்தை ஒரு எதிரியாக வரிசைப்படுத்துவது தவிர்க்க முடியாதது மற்றும் நிறுவனத்தை ஒரு தரப்பினராக



வரிசைப்படுத்தாமல், புகார்தாரரால் தொடரப்படும் குற்றவழக்கு சட்டவகையில் பிழைபட்டதாகும் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் ஐயத்திற்கிடமின்றி தீர்ப்பளித்துள்ளது என்று தெரியவருகிறது.

6. அதற்குமாறாக, எதிர்மனுதாரருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்ததாவது, மனுதாரரால் தனிப்பட்ட முறையில்தான் பணம் கடன் வாங்கப்பட்டது. ஆயினும், நிறுவனத்தின் சார்பாக மனுதாரரால் காசோலை வழங்கப்பட்டது. ஆகையால், தனிப்பட்டவரின் செய்கை, நிறுவனத்திற்கு எதிரானதாக காரணம் கற்பிக்க இயலாது. எனவே எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட புகார் நிலைக்கத்தக்க ஒன்று.

7. இருதரப்பினரின் வாதங்களும் கேட்கப்பட்டன.

8. மனுதாரர், ஒப்புக்கொண்டபடி நிறுவனத்தின் சார்பாக காசோலை வழங்கினார் என்று காசோலைகளைப் பார்வையிடுவதிலிருந்து தெளிவாகிறது. எனவே, ஒரு எதிரியாக மேற்படி நிறுவனத்தை சேர்க்காததால், புகார் நிலைக்கத்தக்கதல்ல.

9. மேலும், மேற்கோள் காட்டப்பட்ட மேற்சொன்ன தீர்முடிவைப் பார்வையிட்டு, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மாற்றுமுறையாவணங்கள் சட்டத்தின் பிரிவு 141-இன் கீழ் குற்றவழக்குத் தொடருவதற்காக நிறுமத்தை ஒரு எதிரியாக வரிசைப்படுத்துவது தவிர்க்கவியலாது மற்றும் புகாரில் நிறுமத்தை ஒரு எதிரியாக வரிசைப்படுத்தாவிட்டால், சட்டத்தின் பார்வையில், அது நிலைக்கத்தக்கதல்ல என்று உறுதிபட தீர்ப்பளித்துள்ளது. மேற்படி தீர்முடிவானது கையிலிருக்கும் தற்பொழுதைய வழக்கின் பொருண்மைக்கு தக்கவாறு பொருந்தத்தக்கது.

10. மேற்படியான விவாதங்களையும் மேலே குறிப்பிட்ட தீர்முடிவுகளையும் கருத்திற்கொண்டு, பத்மநாபபுரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றக் கோப்பில் நிலுவையிலுள்ள ஆ.ப.வ. எண் 341/2011-இன் நடவடிக்கைகளை நீக்குவதற்கு நான் நாட்டங் கொள்கிறேன். அதன்படி, இக்குற்றவியல் முதலேற்பு மனு அனுமதிக்கப்பட்டு, பத்மநாபபுரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் முன்பாக மனுதாரருக்கு எதிராக நிலுவையிலுள்ள ஆ.ப.வ. எண். 341/2011-இன் நடவடிக்கைகள் நீக்கப்படுகின்றன. அதன்விளைவாக, தொடர்புடைய பல்வகை மனுக்கள் முடிக்கப்படுகின்றன.

⌘❖⌘❖⌘



## சட்டச் சொற்களின் தமிழாக்கம்

உச்ச நீதிமன்றமும், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை நீதியராயமும் ஆங்கிலத்தில் வழங்கிவரும் தீர்ப்புகளின் தமிழாக்கத்தை **தீர்ப்புத் திரட்டு** இரு திங்களுக்கொரு இதழாக வெளியிட்டு வருகிறது. ஆங்கிலத்திலுள்ள தீர்ப்புகளில் கையாளப்பட்டு இருக்கும் ஆங்கிலச் சட்டச் சொற்களின் நேரிணையான தமிழுருவம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது. ஆகவே, அவற்றை தங்கள் தீர்ப்புகளில் இடத்திற்கேற்ப கையாளுவதன் வாயிலாக, வேறுபாடற்ற ஒரே மாதிரியான தமிழாக்கத்தை நீதித் துறையில் கீழமை நீதிமன்றங்கள் நிலவச் செய்திட இயலும். தமிழில் வழங்கப்பெறும் தீர்ப்புகள் அனைத்துமே மேலமை நீதிமன்றங்களின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் உட்பட்டவை என்பதை மறுப்பதற்கில்லை. ஆகவே, மொழியாக்கத்தைப் பொறுத்தவரை இதுகாறும் இருந்து வரும் இடர்ப்பாடுகளை இயன்ற அளவு களைந்து, மேலமை நீதிமன்றங்கள் செயற்படுவதற்குரிய வகையில் உறுதுணையாக கீழமை நீதிமன்றங்கள் பணியாற்ற வாய்ப்பிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| Aftermath | ... | பின்விளைவு |
| Apprise | ... | அறிவி, தெரிவி |
| Blemish | ... | குறை |
| Bloat | ... | உப்பிய |
| Board of Directors | ... | இயக்குநர் குழுமம் |
| Carry away | ... | உணர்ச்சிவயப்படு |

| | | |
|---|---|---|
| Deference | ... | இணங்கிப்போதல் |
| Dent | ... | வடு, தழும்பு, தீங்கு |
| Edifice | ... | மாளிகை |
| Emphatical | ... | உறுதியாக |
| Entity | ... | உட்பொருள் |
| Enunciate | ... | தெளிவுபடக்கூறு |
| Errant | ... | அலைந்து திரிகிற |
| Fidelity | ... | கற்பு |
| Foray | ... | தாக்கு |
| Generator | ... | மின்னாக்கி |
| Indict | ... | குற்றஞ்சாட்டு |
| Indifference | ... | கவனமின்மை |
| Involution | ... | சிக்கல், உட்கருள்வு |
| *Locus standi* | ... | வழக்குரை உரிமை |
| Loquacity | ... | வீண்வார்த்தை |
| Lucid | ... | தெளிவான |
| Mimic | ... | பின்பற்று |
| Nightmare | ... | பெருங்கவலை |
| Panel | ... | பெயர்ப்பட்டியல் |
| Parenthesis | ... | தனிநிலை மொழி, வளை அடைப்புக்குறி |
| Prevail | ... | நடைமுறையிலிரு |
| Prolixity | ... | சொல்மிகை |
| Secondary evidence | ... | சார்நிலைச் சான்று |
| *Substratum* | ... | அடித்தளம் |
| Tautology | ... | கூறியது கூறல், ஒரு பொருட்சொல்லடுக்கு |
| Tentacle | ... | பற்றிழை |
| Tinker | ... | சரிசெய்தல் |



| | | |
|---|---|---|
| Veer | ... | திசை திருப்பு, கருத்து மாறுபடு |
| Ventilate | ... | அடக்கிவைத்த குறைகளைத் தெரிவி |
| Verbosity/Verbose | ... | தேவைக்கு மேற்பட்ட சொற்களைப் பயன்படுத்துதல், நெடு நீளமான |
| *Volunti non fit injuria* | ... | இசைந்தோருக்கிழைப்பது தீங்காதல் இல்லை |
| Winding up | ... | முடிவுறுத்தல் |

⌘❖⌘❖⌘